சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வியாழக்கிழமை
18 செப்டம்பர் 2025
சென்னை
14 பக்கங்கள் ரூ.9












# திமுக புதிய தேர்தல் வரலாறு படைக்கும்

## முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**கரூர், செப். 17:** 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று திமுக புதிய வரலாறு படைக்கும் என கட்சித் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.

திமுக சார்பில் பெரியார் ஈ.வெ.ரா. பிறந்த நாள் விழா, முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த நாள் விழா, திமுக தொடங்கப்பட்ட நாள் ஆகிய முப்பெரும் விழா கரூர் கோடங்கிப்பட்டியில் புதன்கிழமை நடைபெற்றது. கட்சியின் பொருளாளரும் மக்களவை உறுப்பினருமான டி.ஆர். பாலு தலைமை வகித்தார். இளைஞரணிச் செயலரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகித்தார்.

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

2019-ஆம் ஆண்டுமுதல் அனைத்துத் தேர்தல்களிலும் எதிரிகளைக் கலங்கடிக்கும்வெற்றிகளைப்பெற்று வருகிறோம். இந்த வெற்றிப் பயணம் தமிழக மக்களின் ஆதரவுடன் 2026-தேர்தலிலும் நிச்சயம் தொடரும். திராவிட மாடல் 2.0 ஆட்சி நிச்சயம் அமையும். தமிழகத்தை தலைகுனிய விடமாட்டோம் என 2026 தேர்தலில் நீங்கள் களப் பணியாற்ற வேண்டும். அதன்மூலம் திமுக ஆட்சி தொடர்ந்து அமைந்தது எனப் புது வரலாறு படைக்க வேண்டும்.

அதற்காகத்தான் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பரப்புரையை முன்னெடுத்து, தமிழகம் முழுக்கச் சென்று, ஒரு கோடிக்கும் அதிகமான தொண்டர்களை இணைத்துள்ளோம். இவ்வளவு பேர் நம்பிக்கையுடன் இணைந்ததற்கு தமிழகத்தைக் காக்கும் காவல் அரண் திமுக மட்டும்தான் என்பதே காரணம்.

**தொடர்ந்து போராட்டம்:** தமிழகத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பது காவிக் கொள்கை. இந்தக் கொள்கைக்கு எதிராகவும், காவிக் கொள்கையின் அரசியல் முகமாகவும் இருக்கும் பாஜகவுடன் திராவிடமும்,திமுகவும் தொடர்ந்து போராடி வருகிறது.





கரூரில் புதன்கிழமை நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில் பேசிய கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின். (வலது) விழாவில் பங்கேற்ற தொண்டர்கள் கூட்டம்.

கடந்த அதிமுக ஆட்சியைக் காப்பாற்றியது பாஜகதான் என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார். அந்தக் கைப்பாவை அரசைத் தூக்கியெறிய காரணம் திமுகதான் என்பதால்தான் நம் மீது வன்மத்தைக் கொட்டி, தொடர்ந்து பல பிரச்னைகளை அளிக்கின்றனர். மிரட்டலுக்கு பயப்படும் கட்சியா திமுக?.

தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் திமுகவை அழிப்பதாகக் கூறினர். இப்போதும் சிலர் திமுகவுக்கு மாற்று நாம்தான் எனப் பேசி வருகின்றனர். என்ன மாற்றப் போகிறார்கள்?. தமிழகத்தின் வளர்ச்சியைப் பின்னுக்குத்தான் தள்ளுவர்.

திமுக கொள்கையைவிட சிறந்த கொள்கையை யாரேனும் பேசுகிறார்களா?. மாற்றம், மாற்றுவோம் எனக் கூறியவர்கள் மாறினர், மறைந்தனர். ஆனால், திமுக மட்டும் மாறவில்லை. தமிழக மக்களின் மனதிலிருந்தும் என்றும் மறையாது. இதுதான் தமிழக அரசியல்.

**இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி:** கரோனா, நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட நெருக்கடியில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாம், நான்கரை ஆண்டுகளில் நாட்டில் எந்த மாநிலங்களிலும் செய்யாத திட்டங்களைச் செயல்படுத்தி, முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளைப் பெருக்கி, நாட்டிலேயே இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ள முதன்மை மாநிலமாக மாற்றியுள்ளோம்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி ஆட்சியிலிருந்தபோது எதையும் செய்யாமல், அடிமை சாசனம் எழுதிக்கொடுத்தார். சோதனைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அதிமுகவை அடகு வைத்துவிட்டார். அண்ணாயிசம் எனக் கூறி தொடங்கிய அதிமுக, அடிமையிசம் என மாற்றி, அமித் ஷாவே சரணம் என சரணடைந்துவிட்டார். அவரின் கேள்விகளுக்கு சொல்லில் அல்லாமல், செயல்களால் (திட்டங்களால்) பதிலளித்து வருகிறோம்.

இதுமட்டுமன்றி மத்திய அரசின் மக்களுக்கு எதிரான திட்டங்களை நேருக்கு நேர் எதிர்த்து நிற்கிறோம். தலைநிமிர்ந்த தமிழகத்தை ஒருநாளும் தலைகுனிய விடமாட்டோம்.

**பாஜகவுக்கு அனுமதியில்லை:** மத்திய அரசு ஹிந்தி மொழி திணிப்பு, நீட் தேர்வு விலக்களிக்க மறுப்பு, கல்வி நிதி வழங்க மறுப்பு, கீழடி தொன்மை மறுப்பு, வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் என உரிமைகளைப் பறிக்கிறது. ஆனால், எப்போதும் தமிழகத்தில் அடக்குமுறைக்கு, ஆதிக்கத்துக்கு, திணிப்புக்கு அனுமதியில்லை. மொத்தத்தில் பாஜகவுக்கு அனுமதியில்லை.

பாஜகவை தடுத்து நிறுத்தாவிடில், அடுத்ததாக மாநிலங்களே இருக்கக் கூடாது என்ற நிலையை நோக்கி நகர்வார்கள். இதற்கு காஷ்மீரே உதாரணம்.

ஹிந்திக்கு எதிராக மொழிப்போர் நடத்தி வென்றதைப்போல,உரிமைப் போராட்டம் நடத்தி நாட்டைக் காப்பாற்றும் கடமை நமக்கு உள்ளது. இந்தப் போராட்டத்துக்கு நான் முன்கள வீரனாக இருப்பேன். நாம் முன்னெடுக்கும் போராட்டம் ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டமல்ல. அது தமிழக மக்களுக்கான போராட்டம். இதற்கு அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்றார்.

விழாவில், கட்சியின் முதன்மைச் செயலர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலர்கள் ஐ.பெரியசாமி, திருச்சி என்.சிவா, ஆ. ராசா, கனிமொழி, அந்தியூர் ப. செல்வராஜ், ஆர்.எஸ். பாரதி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் மொஞ்சனூர் இளங்கோ, க.சிவகாமசுந்தரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கட்சியின் கொங்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், கரூர் சட்டப்பேரவை உறுப்பினருமான வி.செந்தில்பாலாஜி வரவேற்றார்.

### விருது பெற்றவர்கள் விவரம்

விழாவில், பெரியார் விருதை கட்சியின் துணைப் பொதுச் செயலரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழிக்கும், அண்ணா விருதை திமுக தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினரும், பாளையங்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவருமான சுப. சீதாராமனுக்கும், கலைஞர் விருதை முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் சோ.மா. ராமச்சந்திரனுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதை கட்சியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மறைந்த குளித்தலை சிவராமனுக்காக அவரது குடும்பத்தாருக்கும், பேராசிரியர் விருதை ஆதிதிராவிடர் நலக் குழுத் தலைவரும், சட்டப்பேரவை முன்னாள் கொறடாவுமான மருதூர் ராமலிங்கத்துக்கும், மு.க. ஸ்டாலின் விருதை ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலர் பொங்கலூர் நா. பழனிசாமிக்கும், முரசொலி செல்வம் விருதை மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வத்துக்கும் முதல்வர் வழங்கினார்.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை விருதுகளாக தமிழகத்தில் உள்ள 4 மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கட்சிப் பணியில் சிறப்பாக செயல்பட்ட தலா ஒருவருக்கு நற்சான்றிதழ், பணமுடிப்பு ஆகியவற்றையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

### '2002, 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் அடிப்படையில் தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தம்'

**சென்னை, செப். 17:** தமிழகத்தில் 2002, 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல்களின் அடிப்படையில் சிறப்பு தீவிர திருத்தப் பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி உள்ளே)

### 'மதுராந்தகத்தில் 2,000 ஏக்கரில் சர்வதேச நகரம்'

**சென்னை, செப். 17:** செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் 2,000 ஏக்கரில் சர்வதேச நகரத்துக்கான பெருந்திட்டம் தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி உள்ளே)

### பட்டாசு ஆலையில் வெடி விபத்து: இருவர் உயிரிழப்பு

**சாத்தூர்/சென்னை, செப். 17:** சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் புதன்கிழமை நிகழ்ந்த வெடி விபத்தில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

(விரிவான செய்தி உள்ளே)

# அணுஆயுத அச்சுறுத்தலுக்கு இந்தியா அஞ்சாது

## பிரதமர் மோடி

**தார் (ம.பி), செப். 17:** அணுஆயுத அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல், பயங்கரவாதிகளின் வீடுகளுக்குள் நுழைந்து தாக்கும் புதிய இந்தியா இது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பாரத தாயின் மதிப்பு, பெருமை மற்றும் புகழைவிட வேறெதுவும் உயர்வானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனது 75-ஆவது பிறந்த தினமான புதன்கிழமை மத்திய பிரதேச மாநிலம், தார் பகுதியில் பொது நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் மோடி, மத்திய அரசின் 'ஆரோக்கியமான பெண்கள், வலிமையான குடும்பங்கள்' எனும் இரு வார கால பிரசார இயக்கம் மற்றும் தேசிய ஊட்டச்சத்து விழிப்புணர்வு மாத நிகழ்வுகளைத் தொடங்கிவைத்தார். இந்தப் பிரசார இயக்கத்தின்கீழ், பெண்களுக்காக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

மேலும், மகப்பேறு கால நிதியுதவித் திட்டத்தின்கீழ், சுமார் 10 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்கில் நேரடி பணப் பலன்களை வழங்கிய பிரதமர் மோடி, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன் தொடர்பான 'சுமன் சகி' என்ற பிரத்யேக 'சாட்பாட்' வசதியையும் தொடங்கிவைத்தார்.

**'பாகிஸ்தானை மண்டியிடச் செய்த இந்தியா':** பின்னர், பாகிஸ்தான் மீதான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைக் குறிப்பிட்டு, பிரதமர் மோடி பேசியதாவது:

நமது சகோதரிகள் மற்றும் மகள்களின் நெற்றிக் குங்குமத்தை அழித்த பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்கள், 'ஆபரேஷன் சிந்தூர்' மூலம் அழிக்கப்பட்டன. துணிச்சல்மிக்க இந்திய ராணுவத்தினர், கண்ணிமைக்கும் நேரத்தில் பாகிஸ்தானை மண்டியிடச் செய்தனர்; பயங்கரவாதிகள் தங்களின் துன்பத்தை நினைத்து, கண்ணீர் சிந்துவதை ஒட்டுமொத்த உலகமும் கண்டுள்ளது (இந்தியாவின் தாக்குதலால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து ஜெய்ஷ் பயங்கரவாத இயக்க கமாண்டர் ஒருவர் விவரிக்கும் விடியோ வைரலான நிலையில், பிரதமர் இவ்வாறு கூறினார்).



மத்திய பிரதேச மாநிலம், தார் பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றபோது குழந்தைக்கு முகம் பார்க்கும் கண்ணாடியை காண்பித்து மகிழ்வித்த பிரதமர் மோடி.

எவ்வித அணுஆயுத அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல், பயங்கரவாதிகளின் வீடுகளுக்குள் நுழைந்து தாக்கும் புதிய இந்தியா இது. கடந்த 1948, செப்டம்பர் 17-இல் ஹைதராபாதை பல்வேறு அட்டூழியங்களில் இருந்து விடுவித்து, இந்தியாவுடன் இணைத்தது நமது ராணுவம். இது, சர்தார் வல்லபபாய் படேலின் உறுதிப்பாட்டை தேசம் கண்ட தினமாகும்.

**அனைத்து இந்தியர்களின் உறுதிப்பாடு:** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க 140 கோடி இந்தியர்களும் உறுதிபூண்டுள்ளனர். இந்த இலக்கை எட்டுவதற்கு பெண்கள், இளைஞர்கள், ஏழைகள், விவசாயிகள் ஆகிய நான்கு முக்கியத் தூண்களின் மேம்பாடு அவசியம்.

பெண்சக்தியே நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை என்பதால், அவர்களின் உடல் நலனுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது.

பேறுகால இறப்பு மற்றும் குழந்தைகளின் உயிரிழப்பைத் தடுக்கும் நோக்குடன் பிரதமரின் பேறுகால நிதியுதவி திட்டம் கடந்த 2017-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் முதல் குழந்தை பிறப்பின்போது ரூ.5,000, இரண்டாவது பெண் குழந்தை பிறந்தால் ரூ.6,000 வழங்கப்படுகிறது. இதுவரை 4.5 கோடி பெண்கள் பலனடைந்துள்ளனர். ரூ.19,000 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**ஏழைகளுக்கு சேவையாற்றுவதே நோக்கம்:** கடந்த 11 ஆண்டுகளில் ஏழைகளின் வாழ்வை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளது. ஏழைகளின் முன்னேற்றமின்றி நாட்டின் முன்னேற்றம் இல்லை. அவர்களின் வலியை என்னுடையதாகக் கருதி செயலாற்றுகிறேன். ஏழைகளுக்கு செய்யும் சேவை ஒருபோதும் வீண்போகாது. ஏழை மக்களுக்கு சேவையாற்றுவதுதான் என் வாழ்வின் உயர்வான நோக்கம் என்றார் பிரதமர் மோடி.

**உள்ளூர் பொருள்களுக்கு முன்னுரிமை:** ஜிஎஸ்டி குறைப்பு செப்.22 முதல் அமலாவதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், 'சுதேசி உணர்வே, வளர்ந்த இந்தியாவுக்கு அடிப்படை. எதிர்வரும் விழா காலத்தில் உள்நாட்டுத் தயாரிப்பு பொருள்களை வாங்க வேண்டும். உள்ளூர் பொருள்களை விற்பனை செய்யும் கடைகள், தங்களின் பெயர்ப் பலகையில் பெருமிதத்துடன் குறிப்பிட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

மேலும், 'மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டத்தின்கீழ் 30 லட்சம் கைவினைஞர்களுக்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளது. ரூ.4,000 கோடிக்கும் மேல் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது' என்றார்.

### முதலாவது 'மித்ரா' ஜவுளி பூங்காவுக்கு அடிக்கல்

பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைகள் (பிஎம் மித்ரா) திட்டத்தின்கீழ், நாட்டில் முதலாவதாக மத்திய பிரதேச மாநிலம், தார் மாவட்டத்தில் ஜவுளி பூங்கா கட்டமைக்கப்படவுள்ளது.

2,158 ஏக்கரில் உலகத் தர வசதிகளுடன் அமையும் இந்தப் பூங்காவுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இதன்மூலம் ரூ.23,146 கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும்; 3 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இரு வார தூய்மைப் பணி இயக்கம்

**சென்னை, செப். 17:** தெற்கு ரயில்வே சார்பில் இருவார தூய்மைப் பணி இயக்கத்தை பொது மேலாளர் ஆர்.என்.சிங் புதன்கிழமை தொடங்கி வைத்து மரக்கன்று நட்டார்.

ரயில்வே துறை சார்பில் நாடு முழுவதும் இரு வார தூய்மைப் பணி இயக்கம் புதன்கிழமை தொடங்கியது. அதன்படி, சென்னையில் தெற்கு ரயில்வே அலுவலக வளாகத்தில் தூய்மைப் பணியை தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் தொடங்கி வைத்து மரக்கன்று நட்டார். முன்னதாக, தூய்மை வார உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

தொடர்ந்து தெற்கு ரயில்வே வளாகம், சென்ட்ரல் ரயில் நிலைய வளாகத்தில் ரயில்வே உயரதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோர் தூய்மைப் பணியை மேற்கொண்டனர். நிகழ்ச்சியில் கூடுதல் பொது மேலாளர் (பொறுப்பு) சுரேஷ்பிள்ளை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**இரு வார நிகழ்ச்சிகள்:** அக். 2-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள தூய்மைப் பணி இயக்கத்தில் தூய்மைப் பணி மேற்கொள்ளுதல், குப்பைகள் தரம் பிரிக்கும் மேலாண்மை நடவடிக்கைகளை செயல்படுத்துதல், சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் சமூக தன்னார்வலர் அமைப்புகளை தூய்மைப் பணியில் ஈடுபடுத்துதல், விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம், மறுசுழற்சி விற்பனை கண்காட்சி மற்றும் மரக்கன்றுகள் நடுதல் ஆகியவை நடைபெறவுள்ளதாகவும், நிறைவு நாளில் சிறப்பு தூய்மைப் பணி மேற்கொள்ளப்படும் என்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மரியாதை...



பெரியார் ஈவெரா பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பில் அமைந்துள்ள அவரது சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள உருவப்படத்துக்கு புதன்கிழமை மரியாதை செலுத்திய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ரா.வைத்திநாதன் உள்ளிட்டோர்.

# ஆரோவில் சர்வதேச நகரில் சம்ஸ்கிருத ஆராய்ச்சி மாநாடு

**விழுப்புரம், செப்.17:** விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஆரோவில் சர்வதேச நகரில் உள்ள வேத வித்யா கேந்திரத்தில் சம்ஸ்கிருத ஆராய்ச்சி மாநாடு புதன்கிழமை நடைபெற்றது.

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளை முன்னிட்டு, மத்திய சம்ஸ்கிருத பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்த மாநாட்டில், 11 மாநிலங்களைச் சேர்ந்த 50 மாணவர்கள் மற்றும் 10 பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் குஜராத் மாநில கூடுதல் தலைமைச் செயலரும், ஆரோவில் அறக்கட்டளைச் செயலருமான ஜெயந்தி எஸ்.ரவி இணையவழியில் பங்கேற்று பேசியது:

சம்ஸ்கிருதம் என்பது ஒரு மொழி மட்டுமல்ல. அது உலகின் பண்டைய ஞானம், தத்துவம், கதைகள் என பலவற்றை கொண்டிருக்கும் பொக்கிஷம்.

விஞ்ஞானம், மனித ஒற்றுமை, ஆன்மிகம் எங்கெல்லாம் பேசப்படுகிறதோ, அங்கே சம்ஸ்கிருதத்தின் இனிமை பேசப்பட்டுக் கொண்டிருக்கும். தமிழும், சம்ஸ்கிருதமும் இரட்டைக் குழந்தைகள் போன்றது. இரண்டுக்கும் தனித்தன்மையான புனிதமும், வரலாறும், அழகும் உண்டு. இந்த இரண்டும் சேரும்போது தெய்வீக அலை சூழல் உருவாகிறது.

பிரதமர் நரேந்திர மோடி இந்த இரண்டு மொழிகளையும் உலகுக்கு பெருமையாகக் காட்டி வருகிறார். விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் படிக்கும் மாணவர்களிடம் சம்ஸ்கிருதத்தை அறிமுகப்படுத்த வேண்டும். இது அவர்களின் கல்விக்கு ஆழமான அறிவை வழங்கும்.

பிரதமர் நரேந்திர மோடியின் கவிதைத் தொகுப்பு, பொன்னியின் செல்வன் ஆகியவை சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் சம்ஸ்கிருதம் வழிகாட்டியாகவும் இருந்து வருகிறது என்றார்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய சம்ஸ்கிருத பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் ரத்னா மோகன் ஜா, ஸ்ரீ அரவிந்தர் சர்வதேச கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சஞ்சீவ் ரங்கநாதன் பேசினர்.

செப்.2-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை நடைபெறும் பயிற்சி முகாமில், புதிய சம்ஸ்கிருத ஆசிரியர்களை உருவாக்கும் பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்த முயற்சி உலகளவில் சம்ஸ்கிருத கல்விக்கான நிலையான அடித்தளத்தை அமைக்கும். எண்ம (டிஜிட்டல்) காலத்தில் பழமையான இந்த ஞானத்தை உலகம் முழுவதும் பரப்பி, இந்தியாவை உண்மையான விஸ்வ குருவாக (உலக ஆசான்) ஆக்கும் எனவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சி தொடக்கமாக, மாநாட்டில் பங்கேற்றவர்கள் பிரதமர் நரேந்திர மோடி ஆரோக்கியத்துடன் வாழ வேண்டி பிரார்த்தனை மேற்கொண்டனர்.

# மழைக் காலங்களில் சுரங்கப் பாதைகளை 24 மணி நேரமும் கண்காணிக்க உத்தரவு

**சென்னை, செப். 17:** மழைக் காலங்களில் சென்னை மாநகராட்சியில் உள்ள சுரங்கப் பாதைகளை 24 மணி நேரமும் கண்காணிக்கவும் அதில் தேங்கும் தண்ணீரை உடனுக்குடன் வெளியேற்றவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில் வடகிழக்குப் பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக 80-க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அங்கு மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்டு, தங்கவைக்க பள்ளிகள், சமூகநலக் கூடங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மழையின்போது போக்குவரத்து தடைகளைச் சீராக்கும் வகையில் சுரங்கப் பாதைகளை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிப் பகுதியில் 22 சுரங்கப் பாதைகள் உள்ளன. அவற்றில் 16 சுரங்கப் பாதைகள் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த சுரங்கப் பாதைகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்கும் வகையில் 24 மணி நேரக் கண்காணிப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேங்கும் தண்ணீரை உடனுக்குடன் அகற்றும் வகையில் மின்மோட்டாருடன் கூடிய மோட்டார் பம்புகள், நீர் உறிஞ்சும் வசதியுடன் கூடிய வாகனங்களை தயாராக வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

# சூலூர்பேட்டை மின்சார ரயில் இன்று ரத்து

**சென்னை, செப். 17:** பாராமரிப்புப் பணிகளின் காரணமாக, சூலூர்பேட்டைக்கு இயக்கப்படும் மின்சார மெமு ரயில் வியாழக்கிழமை (செப்.18) ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்டம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னை சென்ட்ரல்-கூடூர் இடையே நாயுடு பேட்டை, தொரவரிச்சத்திரம் ரயில் நிலையங்களுக்கு இடையே வியாழக்கிழமை (செப்.18) நண்பகல் 12.30 முதல் இரவு 7 மணி வரை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்காரணமாக, சூலூர்பேட்டையிலிருந்து மாலை 6.40 மணிக்கு சென்ட்ரல் செல்லும் மின்சார மெமு ரயில் ரத்து செய்யப்படவுள்ளது. அதற்குப் பதிலாக அந்த மார்க்கத்தில் பயணிகள் சிறப்பு ரயில் இயக்கப்படும்.

**பகுதி ரத்து:** சென்ட்ரலில் இருந்து செப்.18-இல் பிற்பகல் 2.40 மணிக்கு சூலூர்பேட்டை செல்லும் மின்சார ரயில் எளாவூருடன் நிறுத்தப்படும். அதேபோல், சூலூர்பேட்டையில் இருந்து மாலை 5.20 மணிக்குப் புறப்பட்டு கடற்கரை செல்லும் ரயில் சூலூர்பேட்டைக்கு பதிலாக எளாவூரிலிருந்து இயக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெறிச்சோடிய மீன் சந்தை...



புரட்டாசி மாதம் புதன்கிழமை தொடங்கியதையொட்டி, பெரும்பாலான வாடிக்கையாளர்கள் வராததால் வெறிச்சோடிக் காணப்பட்ட சென்னை காசிமேடு மீன் சந்தை.

## கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை

வேது தளம், அடிஷனல் ஆபீஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006

DRC No.649/2024
in
TA No.654 / 2023

கனரா வங்கி (முன்னர் சிண்டிகேட் வங்கி),
அமிஞ்சிக்கரை கிளை, எண்.6/20, கோவிந்தன் தெரு, அம்பாலு காலனி, அமிஞ்சிக்கரை, சென்னை-600 029 ...சான்றிதழ் ஹோல்டர்

- எதிர் -

சாய் சக்தி பிரிண்டர்ஸ் மற்றும் 3 நபர்கள் ...சான்றிதழ் கடன்தாரர்கள்

பெறுநர்:

1. சாய் சக்தி பிரிண்டர்ஸ் அதன் சார்பாக கூட்டாளிகள் Mr.S.கதாகர், Mrs.S.காஞ்சனா, எண்.35, முகமது உசேன் தெரு, ராயப்பேட்டை, சென்னை-600014
2. Mr.S.கதாகர், S/o.S.சுந்தர பாபு, எண்.வில்லி 24, லே ஆர்ச்சட் பென் ஃபவுண்டேஷன் (Le Orchad Ben Foundation), பாடிகுப்பம் ரோடு, அண்ணா நகர், சென்னை-600 040
3. Mrs.S.காஞ்சனா, W/o.S.கதாகர், எண்.வில்லி 24, லே ஆர்ச்சட் பென் ஃபவுண்டேஷன் (Le Orchad Ben Foundation), பாடிகுப்பம் ரோடு, அண்ணா நகர், சென்னை-600 040
4. Mr.A.ஹுமாயூன் பாஷா, S/o.K.அமீர் பாஷா, எண்.26, நாயர் ஜயர் பிள்ளை தெரு, ராயப்பேட்டை, சென்னை-600 014 ...சான்றிதழ் கடன்தாரர்கள்

### கோரிக்கை அறிவிப்பு

(வருமான வரி சட்டம் 1961, இரண்டாவது அட்டவணை விதி 2-ன் கீழ் கடன் பாக்கிகள் மற்றும் திவால் நிலை சட்டம் 1993-ல் பிரிவு 29-ன் கீழ்)

மாண்புமிகு தலைமை அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை அவர்களால் இந்த வழக்கின் TA எண்.654/2023-ல் குறிப்பிட்டு, 02.07.2024 தேதியிட்ட வசூல் சான்றிதழ் வழங்கப்பட்டது (நகல் அட்டவணையுடன் இணைக்கப்பட்டுள்ளது). கடன்தாரரிடமிருந்து ...

இந்த தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் 15.09.2025 தேதியில் எனது கையால் வழங்கப்பட்டது.

சதி/- (S.சுதர்சன்)
மீட்பு அதிகாரி

## கனரா வங்கி

எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண்: 9740145622
மின்னஞ்சல்: cb7901@canarabank.com

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை

### கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கான மீட்பு அறிவிப்பு [பிரிவு 13(8)]

Ref. No.07901/ARM II/ E Karthick நாள்: 15.09.2025

பெறுநர்,

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்

திரு.E. கார்த்திக், த/பெ. திரு. எத்திராஜ், எண்.8, J. N. சாலை, அசோக்நகர், சென்னை - 600070.

பொருள்: 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (இனிமேல் "சட்டம்" என்று குறிப்பிடப்படும்) பிரிவு 13(8)ன் கீழ் மீட்பதற்கான உரிமையைப் பயன்படுத்துவதற்கான அறிவிப்பு.

சட்டத்தின்படி கீழ் கையொப்பமிட்டவர் சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, கனரா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக (இனி பிணைய கடன் வழங்கியவர் என குறிப்பிடப்படுகிறது), நியமிக்கப்பட்டுள்ளார் என்று SARFAESI விதிகளின் விதி 8(6) மற்றும் சட்டத்தின் பிரிவு 13(8)ன் கீழ் கீழ்கண்டவாறு உங்கள் அனைவருக்கும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர் திரு.E. கார்த்திக் அவர்களுக்கு நிலுவைத் தொகையான 06.07.2025 அன்றுள்ளபடி ரூ.50,73,842.34/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நாற்பத்து இரண்டு மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்) இந்த அறிவிப்புகள் பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் வட்டியுடன் செலுத்தக்கோரி சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் 08.07.2025 அன்று ஈடுபெற்ற கடன் வழங்கியவர் கோரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டிருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

மேற்கூறிய கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் / நிறுவனம் / அடமானதாரர் மற்றும் ஜாமீன்தாரர் தொகையை திருப்பிச் செலுத்தத்தவறியதால், சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 11.09.2025 தேதியிட்ட சுவாதீன அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களை அடையாளபூர்வ/ மெய்நிலை சுவாதீனம் எடுத்துள்ளார். மேலும் மேற்கூறிய அடையாளபூர்வ/ மெய்நிலை சுவாதீனம் குறித்த அறிவிப்பு 13.09.2025 அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி நாளிதழ்களில் முறையாக வெளியிடப்பட்டது.

SARFAESI சட்டம் 2002ன் விதிமுறை மற்றும் SARFAESI விதிகளின் விதி 8(6) ஆகியவற்றுக்கு இணங்க, பொறுப்பை தள்ளுபடி செய்வதன் மூலம், 31.08.2025 அன்றுள்ளபடி ரூ.51,71,145.34 (ரூபாய் ஐம்பத்து ஓர் இலட்சத்து எழுபத்து ஓர் ஆயிரத்து நூற்று நாற்பத்து ஐந்து மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்) மேலும் வட்டி, செலவுகள் மற்றும் செலவுகளை முழுமையாக இந்த அறிவிப்பு கிடைத்ததிலிருந்து 30 நாட்களுக்குள் ஈடுபெற்ற கடன் வழங்கியவர் வசம் உள்ள ஈடுபெற்ற சொத்துக்களை மீட்டெடுக்கவும் திரும்பப்பெறவும் உங்கள் அனைவருக்கும் இதன் மூலம் கடைசி மற்றும் இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் சட்டத்தின் கீழ் விற்பனை அறிவிப்பு பத்திரிக்கையில் வெளியிடப்பட்டு ஈடுபெற்ற சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் முறையில் ஒன்றைக் குறிப்பிடும்.

ஒரே மாதிரியான ஈடுபெற்ற சொத்துக்களைக் கையாளும் நபர்களிடமிருந்து மேற்கோள்களைப் பெறுதல் அல்லது சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுதல்; அல்லது ...

REF: CERSAI ID : 400059913366.

தேதி : 15.09.2025
இடம் : சென்னை

அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

## ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

### கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கான அறிவிப்பு

கோரிக்கை அறிவிப்பு தேதி: 16.07.2025, NPA தேதி: 29.06.2024, கடன் கணக்கு எண். 2151870000349 & 1161870003885 dated 19.06.2018 & 31.03.2017 for ₹ 48,50,000/- & ₹50,00,000/- was sanctioned under the scheme of Purchase of House/Flat - floating & Purchase of House. கடன் நிலுவைத்தொகை: ₹ 53,64,127/-& ₹ 46,10,750/- மற்றும் 15.07.2025 முதல் அதற்கான வட்டி, இதர செலவுகள்.

### அசையா சொத்துக்கள் விபரம்

சொத்து எண்.1: கூட்டம் எண்.1: ஷெட்யூல் A: பழைய கிராம எண்.100, புதிய கிராம எண்.31, நெல்லிகுப்பம் கிராமம், முன்னர் செங்கல்பட்டு தாலுகா, தற்போது திருப்போரூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் பின்வரும் பட்டா எண்.890 மற்றும் 891, சர்வே எண்களில் உள்ள நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும்.

| வ.எண் | சர்வே எண் | பரப்பு (செண்டில்) | பரப்பு ச.அடியில் |
|---|---|---|---|
| 1 | பழைய சர்வே எண்.385/1B புதிய சர்வே எண்.385/1B1 | 449 | 1,95,764 |
| 2 | 385/2A | 25 | 10,900 |
| 3 | 383/9 | 35 | 15,260 |
| 4 | 385/2D | 148 | 64,528 |
| 5 | 383/4 | 16 | 6,976 |
| 6 | 382/2 | 105 | 45,780 |
| 7 | 382/1 | 52 | 22,672 |
| 8 | 380/3A | 35 | 15,260 |
| 9 | 379/3 | 16 | 6,976 |
| 10 | 379/9 | 103 | 44,908 |
| 11 | 379/5 | 18 | 7,848 |
| 12 | 383/3 | 16 | 6,976 |
| 13 | 384/4 | 97.5 | 42,510 |
| 14 | 379/8 | 47 | 20,492 |
| 15 | 383/1 | 14 | 6,104 |
| 16 | 383/8 | 41 | 17,876 |
| 17 | 384/1 | 9 | 3,924 |
| 18 | 384/3 | 19 | 8,284 |
| 19 | 379/1 | 67 | 29,212 |
| 20 | 383/2 | 14 | 6,104 |
| 21 | 384/2 | 26 | 11,336 |
| 22 | 384/10 | 10 | 4,360 |
| 23 | 379/2 | 23.5 | 10,246 |
| 24 | 379/4 | 49 | 21,364 |
| 25 | 380/3B | 70 | 30,520 |
| 26 | பழைய சர்வே எண்.360/9 புதிய சர்வே எண்.360/9A | 70 | 30,520 |
| 27 | பழைய சர்வே எண்.378/7 புதிய சர்வே எண்.378/7B | 4 | 1,744 |
| 28 | 385/3C2 | 315 | 1,37,340 |
| 29 | 378/5 | 29 | 12,644 |
| 30 | 378/6 | 37 | 16,132 |
| 31 | 378/7B | 9 | 3,924 |
| 32 | 378/8 | 14 | 6,104 |
| 33 | 360/9C | 157 | 68,452 |
| 34 | 369/9B | 3.75 | 1,635 |
| 35 | 380/1 | 245 | 1,06,820 |
| 36 | 378/1 | 54.5 | 23,762 |
| 37 | 378/2 | 55.5 | 24,198 |
| 38 | 385/1B2 | 422 | 1,83,992 |
| 39 | 385/1A | 270 | 1,17,720 |
| | மொத்தம் | 3190.75 | 13,91,167 |

கூட்டம் எண்.2

| வ.எண் | சர்வே எண் | பரப்பு (செண்டில்) | பரப்பு ச.அடியில் |
|---|---|---|---|
| 1 | 378/3 | 58 | 25,288 |
| 2 | 378/4 | 50 | 21,800 |
| 3 | 379/10 | 50 | 21,800 |
| 4 | 379/11A | 16 | 6,976 |
| 5 | 379/12B | 12 | 5,232 |
| 6 | 379/13 | 18.5 | 8,066 |
| 7 | 379/14 | 50 | 21,800 |
| 8 | 379/15A | 30.8 | 13,429 |
| 9 | 379/15B | 24.7 | 10,769 |
| 10 | 379/16 | 54 | 23,544 |
| 11 | 383/11 | 22 | 9,592 |
| 12 | 383/12 | 13.5 | 5,886 |
| 13 | 383/13 | 70 | 30,520 |
| 14 | 383/14 | 18.5 | 8,066 |
| 15 | 383/5 | 18.5 | 8,066 |
| 16 | 383/6 | 118.5 | 51,666 |
| 17 | 383/7 | 19.7 | 8,589 |
| 18 | 384/11 | 9.8 | 4,273 |
| 19 | 384/12 | 18.5 | 8,066 |
| 20 | 384/13 | 34.5 | 15,042 |
| 21 | 384/14 | 12 | 5,232 |
| 22 | 384/15 | 108.6 | 47,350 |
| 23 | 384/5 | 8.6 | 3,750 |
| 24 | 384/6 | 3.7 | 1,613 |
| 25 | 384/8A | 5 | 2,180 |
| 26 | 384/8B | 6.1 | 2,660 |
| 27 | 384/9 | 19.7 | 8,589 |
| 28 | 385/1B3 | 130 | 56,680 |
| 29 | 385/1C | 450 | 1,96,200 |
| 30 | 385/2C | 24.8 | 10,813 |
| 31 | 383/10 | 4 | 1,744 |
| 32 | 385/2B | 50 | 21,800 |
| 33 | 378/6 | 22 | 9,592 |
| 34 | 475 | 102.5 | 44,690 |
| 35 | 476 | 102.5 | 44,690 |
| | Total | 1757 | 7,66,052 |

செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட மேற்கண்ட மொத்த சர்வே எண்களின் மொத்தம் 49.48 செண்ட் அல்லது 21,57,219 சதுர அடி. எல்லைகள்: வடக்கு: காலி நிலம், தெற்கு: திருப்போரூர் - நெல்லிகுப்பம் கூடுவாஞ்சேரி ரோடு, கிழக்கு: காலி நிலம், மேற்கு : காலி நிலம்.

ஷெட்யூல் B: மேற்கண்ட ஷெட்யூல் A சொத்தில் 1100 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். மூன்று படுக்கையறை அப்பார்ட்மெண்ட்-C, 2வது தளம், பிளாக் எண்.28, சென்னை பட்டினம், நெல்லிகுப்பம், கூடுவாஞ்சேரி ரோடு, செங்கல்பட்டு தாலுகா, அம்மாபேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு - 603 108 என்னும் முகவரியிலுள்ள 2250 சதுர அடி மேல் கட்டுமான பரப்பு கொண்ட ப்ளாட், பொது இடம் உட்பட மற்றும் ஸ்டில்ட் தளத்தில் ஒரு இலவச மூடிய கார் பார்க்கிங் (கார் பார்க்கிங் இடத்தை கார் நிறுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் எந்த பக்கமும் மூடப்படக் கூடாது) DTCP அனுமதி எண்.456/2008 தேதி 16.04.2013.

சொத்து எண்.2: ஷெட்யூல் சொத்து (கடன் கணக்கு எண்.ADR-3885) செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கிராம நத்தம் பழைய சர்வே எண். 109/1A, புதிய கிராம நத்தம் சர்வே எண்.270/2, பட்டா எண்.816, கிராம நத்தம் பட்டா படி சர்வே எண்.270/2B, கச்சேரி சந்து தெரு, திருப்போரூர் கிராமம், முன்னர் செங்கல்பட்டு தாலுகா, தற்போது திருப்போரூர் தாலுகா, காஞ்சிபுரம் என்னும் முகவரியிலுள்ள 2400 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Mr.K.சந்திரன்-க்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம், தெற்கு: கச்சேரி சந்து தெரு, கிழக்கு: Mr.சத்தியநாராயணன்-க்கு சொந்தமான மனை, மேற்கு: கச்சேரி சந்து தெரு. அளவுகள்: வடக்கு பக்கம் 40 அடி, தெற்கு பக்கம் 40 அடி, கிழக்கு பக்கம் 60 அடி, மேற்கு பக்கம் 60 அடி. ஆக மொத்தம் 2400 சதுர அடி.

நீங்கள் கடனை சரிவர திரும்ப செலுத்த தவறியபடியால் கூடுதல் வட்டியையும் செலுத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையது. எனவே மேற்படி சட்டத்தின் கீழ் மேல் குறிப்பிட்டுள்ள பாக்கித் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளை செலுத்துமாறு மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளில் நோட்டீஸ் ஒன்றையும் நிறுவனம் பதிவு தபாலில் ஏற்பு அட்டையுடன் அனுப்பியது. இந்த நிலையில் கடனை திரும்ப செலுத்த தவறிவிட்டீர்கள் என்பதையும் நிறுவனத்தின் கணக்கையும் முறையாக பராமரிக்காமல் முறை தவறி இருக்கிறீர்கள் என்பதையும் உங்கள் கடன் கணக்கு வாராக்கடன் (Non-Performing Asset) என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே நாளது தேதிவரை உள்ள மேற்படி கடன் பாக்கியை நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையது. எனவே இந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் நீங்கள் மேற்படி கடன் பாக்கித் தொகையை செலுத்துமாறு இதன் மூலம் கோரப்படுகிறது. தவறினால் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி நிறுவனத்திடம் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட சொத்தினை தன் வசம் (சுவாதீனம்) எடுத்துக் கொள்ளும் மேற்படி சட்டத்தின் படி மேற்காணும் சொத்தினை உங்களிடமிருந்து சுவாதீனம் செய்து கொள்ளவும் மேலும் அடமானச் சொத்தினை குத்தகை, விற்பனை மூலம் உரிமை மாற்றித் தரவும் சொத்தினை நிர்வகிக்க எந்தவொரு நபரையும் நியமிக்கவும், சொத்து நிர்வாகத்தை நிறுவனம் எடுத்துக்கொள்ளவும் உங்களிடமிருந்து வரவேண்டிய கடன் பாக்கியை, சொத்தை விற்பதனால் கிடைக்கும் தொகையிலிருந்து, வசூலிக்கவும் கழித்துக் கொள்ளவும் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்-க்கு உரிமையுண்டு.

தேதி: 18.09.2025 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

## அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட். ஆர்சில் CIN-U65999MH2002PLC134884 | இணையத்தளம்: https://auction.arcil.co.in;

பல்வேறு ஆர்சில் டிரஸ்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில்.
ஆர்சில் அலுவலகம்: தி ரூபி, 10வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400028.
கிளை அலுவலகம்: 1G, 1ஆவது தளம், செஞ்சுரி வளாகம், எண் 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.

### கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8, 9 ஆகியவற்றின் கீழ் E-ஏல இணைய வழிப் பொது விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அதன் மேல் வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றுடன் திரும்பப் பெறும் பொருட்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("மேற்கூறிய சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8, 9 ("மேற்கூறிய விதிகள்") ஆகியவற்றின்படி பல்வேறு ஆர்சில் டிரஸ்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்., ("ஆர்சில்") நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் (பதிவு செய்யப்பட்ட ஒப்படைப்பு ஒப்பந்தங்களின்படி நிதிச் சொத்துக்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில்) கீழே விவரிக்கப்பட்டுள்ளவையுமான அசையாச் சொத்துக்கள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் இணைய வழி ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.

| வ. எண் | வ.எண் / கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்/கள் / அடமானதாரர்/கள் பெயர் | கடன் கணக்கு எண் / விற்கும் வங்கி | டிரஸ்ட் பெயர் | SARFAESI அறிவிப்புநாள்படி நிலுவைத் தொகை | சுவாதீன வகை / நாள் | ஆய்வு நாள் | சொத்தின் வகை மற்றும் பரப்பு | டேவணித் தொகை (EMD) | குறைந்தபட்ச விலை | E-ஏல நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஹரிகணேஷ் (B1) | 13867600004292 / 13867600004300 / ஃபெடரல் வங்கி லிமிடெட் | Arcil Retail Loan Portfolio 029-B Trust | ரூ.4,96,31,568.08/-(ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து முப்பத்தோராயிரத்து ஐந்நூற்றுஅறுபத்தெட்டு மற்றும் பைசா எட்டு மட்டும்) 05.03.2024 நாள்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட | நேரடி சுவாதீனம் 26.06.2024 | 22.09.2025 மற்றும் 26.09.2025 | பிரிபடாப்பங்கு : 2083 சதுர அடி / கட்டுமானம்: 3900 சதுர அடி. | ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) | ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) | 03.10.2025 நண்பகல் 12:00 மணி |

ஏலமிடப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: சொத்தின் உரிமையாளர்: ஹரிகணேஷ் B1.
அட்டவணை A: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். பரப்பளவு: தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்துடன் தொடர்புடைய வில்லா எண் B1-ஹரி கணேஷ், மொத்தப் பரப்பளவு 3900 சதுர அடி (பொதுப்பகுதி, பொதுப் பங்குகள் மற்றும் இன்டீரியர்ஸ் சேர்த்து) மற்றும் 2083 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய மனை எண்கள் 5, 6, 7 & 8, உட்பிரிவு செய்யப்பட்ட வகையில் மனை எண்கள் D, C, B & A முறையே மொத்தப் பரப்பளவான 24994 சதுர அடியில் அடங்கியது. அமைவிடம் - 12ஆவது குறுக்குத் தெரு, ரங்கா ரெட்டி கார்டன், நீலாங்கரை, சென்னை-600115, தற்போது நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 28/2A1, 28/3A, 28/2A2, 28/4C, 28/4B, புதிய சர்வே எண்கள் 28/10, 28/4A2, 28/4C, 28/2A1, 28/4B, 28/3A2, பட்டா எண்கள் 5530 & 5614- இன்படி, நீலாங்கரை கிராமம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 28/2 பாகம், தெற்கு: 12ஆவது குறுக்குத் தெரு விரிவு, கிழக்கு: சர்வே எண்கள் 28/2A2 & 28/4 (பழைய மனை எண் 4), மேற்கு: சர்வே எண்கள் 28/2A1 & 28/3A (பழைய மனை எண் 9). இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

| வ. எண் | பெயர் | கடன் கணக்கு எண் / விற்கும் வங்கி | டிரஸ்ட் பெயர் | நிலுவைத் தொகை | சுவாதீன வகை / நாள் | ஆய்வு நாள் | சொத்தின் வகை மற்றும் பரப்பு | டேவணித் தொகை (EMD) | குறைந்தபட்ச விலை | E-ஏல நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | ஹரிகணேஷ் (B3) | 13867600004284 / ஃபெடரல் வங்கி லிமிடெட் | Arcil Retail Loan Portfolio 029- B Trust | ரூ.4,90,29,310.78/-(ரூபாய் நான்கு கோடியே தொண்ணூறு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று பத்து மற்றும் பைசா எழுபத்தெட்டு மட்டும்) 05.03.2024 நாள்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட | நேரடி சுவாதீனம் 26.06.2024 | 22.09.2025 மற்றும் 26.09.2025 | பிரிபடாப்பங்கு : 2083 சதுர அடி / கட்டுமானம்: 3900சதுர அடி. | ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) | ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) | 03.10.2025 பிற்பகல் 12:30 மணி |

ஏலமிடப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: சொத்தின் உரிமையாளர்: ஹரி கணேஷ் B3.
அட்டவணை – (B3): இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். பரப்பளவு: தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்துடன் தொடர்புடைய வில்லா எண் B3- ஹரி கணேஷ், மொத்தப் பரப்பளவு 3900 சதுர அடி (பொதுப்பகுதி, பொதுப் பங்குகள் மற்றும் இன்டீரியர்ஸ் சேர்த்து) மற்றும் 2083 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய மனை எண்கள் 5, 6, 7 & 8, உட்பிரிவு செய்யப்பட்ட வகையில் மனை எண்கள் D, C, B & A முறையே மொத்தப் பரப்பளவான 24994 சதுர அடியில் அடங்கியது. அமைவிடம் - 12ஆவது குறுக்குத் தெரு, ரங்கா ரெட்டி கார்டன், நீலாங்கரை, சென்னை-600115, தற்போது நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 28/2A1, 28/3A, 28/2A2, 28/4C, 28/4B, புதிய சர்வே எண்கள் 28/10, 28/4A2, 28/4C, 28/2A1, 28/4B, 28/3A2, பட்டா எண்கள் 5530 & 5614- இன்படி, நீலாங்கரை கிராமம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 28/2 பாகம், தெற்கு: 12ஆவது குறுக்குத் தெரு விரிவு, கிழக்கு: சர்வே எண்கள் 28/2A2 & 28/4 (பழைய மனை எண் 4), மேற்கு: சர்வே எண்கள் 28/2A1 & 28/3A (பழைய மனை எண் 9).இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

| வ. எண் | பெயர் | கடன் கணக்கு எண் / விற்கும் வங்கி | டிரஸ்ட் பெயர் | நிலுவைத் தொகை | சுவாதீன வகை / நாள் | ஆய்வு நாள் | சொத்தின் வகை மற்றும் பரப்பு | டேவணித் தொகை (EMD) | குறைந்தபட்ச விலை | E-ஏல நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | ரூபா ஹரிகணேஷ் (B2) | 13867300003164 / ஃபெடரல் வங்கி லிமிடெட் | Arcil Retail Loan Portfolio 029- B Trust | ரூ.4,48,84,001.24/-(ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஒன்று மற்றும் பைசா இருபத்து நான்கு மட்டும்) 05.03.2024 நாள்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட | நேரடி சுவாதீனம் 26.06.2024 | 22.09.2025 மற்றும் 26.09.2025 | பிரிபடாப்பங்கு : 2083 சதுர அடி / கட்டுமானம் : 3900சதுர அடி. | ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) | ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) | 03.10.2025 பிற்பகல் 02:00 மணி |

ஏலமிடப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: சொத்தின் உரிமையாளர்: ரூபா ஹரி கணேஷ் (B2)
அட்டவணை (B2): இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம். பரப்பளவு: தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்துடன் தொடர்புடைய வில்லா எண் B2- ரூபா ஹரி கணேஷ், மொத்தப் பரப்பளவு 3900 சதுர அடி (பொதுப்பகுதி, பொதுப் பங்குகள் மற்றும் இன்டீரியர்ஸ் சேர்த்து) மற்றும் 2083 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய மனை எண்கள் 5, 6, 7 & 8, உட்பிரிவு செய்யப்பட்ட வகையில் மனை எண்கள் D, C, B & A முறையே மொத்தப் பரப்பளவான 24994 சதுர அடியில் அடங்கியது. அமைவிடம் - 12ஆவது குறுக்குத் தெரு, ரங்கா ரெட்டி கார்டன், நீலாங்கரை, சென்னை-600115, தற்போது நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 28/2A1, 28/3A, 28/2A2, 28/4C, 28/4B, புதிய சர்வே எண்கள் 28/10, 28/4A2, 28/4C, 28/2A1, 28/4B, 28/3A2, பட்டா எண்கள் 5530 & 5614 -இன்படி, நீலாங்கரை கிராமம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 28/2 பாகம், தெற்கு: 12ஆவது குறுக்குத் தெரு விரிவு, கிழக்கு: சர்வே எண்கள் 28/2A2 & 28/4 (பழைய மனை எண் 4), மேற்கு: சர்வே எண்கள் 28/2A1 & 28/3A (பழைய மனை எண் 9). இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ஆர்சில் நிறுவனத்துக்குத் தெரிந்து நிலுவையில் உள்ள வழக்குகள்: | ஏதுமில்லை | ஆர்சில்-க்கு தெரிந்த வரையில் வில்லங்கம் / நிலுவைகள் : | ஏதுமில்லை |
| ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி நாள்: | 02.10.2025 அன்று மாலை 5.00 மணி அல்லது அதற்குமுன் | ஏல உயர்வுத் தொகை | விலைப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி |
| கேட்பு வரைவோலை எடுக்கப்பட வேண்டிய பெயர்: | டிரஸ்ட் பெயர் பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி | சென்னையில் செலுத்தத்தக்க வகையில் | |
| RTGS விவரங்கள் | கணக்கின் பெயர்: Arcil Retail Loan Portfolio-029-B-Trust, கணக்கு எண்: 57500000961251, கடன் கொடுத்த வங்கி: HDFC வங்கி, IFSC எண்: HDFC0000542, கிளை முகவரி: கமலா மில்ஸ் வளாக கிளை, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013. | | |
| தொடர்பு நபர் பெயர் மற்றும் எண் | மகேஷ் பங்கேரா - 9004173256 (mahesh.bangera@arcil.co.in), கார்த்திகேயன் ஜெயவேல் - 9841415252 (karthikeyan.jayavel@arcil.co.in), விஜயராஜ் - 9551714945 (vijayaraj@arcil.co.in) | | |

இடம்: சென்னை
நாள்: 18.09.2025

ஒப்/- அதிகாரபூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# பிரதமர் பிறந்த நாள்: ஆளுநர் மாளிகையில் 75 மரக்கன்றுகள்

**சென்னை, செப். 17:** பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளையொட்டி, ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையில் ஆளுநர் மாளிகையில் 75 மரக்கன்றுகள் நடப்பட்டன.

இதுகுறித்து ஆளுநர் மாளிகை எக்ஸ் தளத்தில் புதன்கிழமை வெளியிடப்பட்ட பதிவு:

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளையும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான அவரது ஆழ்ந்த அர்ப்பணிப்பையும் கொண்டாடும் வகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி, ஆளுநர் மாளிகை அதிகாரிகள், ஊழியர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் என மொத்தம் 75 பேர் ஆளுநர் மாளிகையில் 75 மரக்கன்றுகளை நட்டனர். இது அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற திட்டத்துக்கும் அர்ப்பணிக்கப்படுகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, எக்ஸ் தளத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட்ட பதிவு:

பிரதமர் மோடியின் பிறந்த நாளில் அவருக்கு தமிழக மக்களின் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமரின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், நமது தேசம் மாற்றங்களைக் காணுகிறது. வாய்ப்புகள், வளங்களை அளிப்பதில் சமமாக அணுகுவதன் மூலம் ஒவ்வொரு குடிமகனையும் குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய மற்றும் விளிம்புநிலை மக்களை மேம்படுத்தும் உள்ளடக்கிய வளர்ச்சி ஏற்படுத்தப்படுகிறது.



சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் குழந்தைகள் பூங்காவை புதன்கிழமை திறந்து வைத்து பார்வையிட்ட ஆளுநர் ஆர்.என்.ரவி.

உள்கட்டமைப்பு, தூய்மையான எரிசக்தி, சுகாதாரம் மற்றும் ஒருங்கிணைந்த பன்முக இணைப்பு ஆகியவற்றில் வரலாற்றுபூர்வ சாதனைகளை விரிவாக்கும் இந்த முன்னேற்றத்தில் தமிழகம் முன்னணியில் விளங்கி மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பல்வேறு வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துகிறது.

வளர்ச்சிக்கான அவரது தொலைநோக்குப் பார்வை, நமது சமூகத்தின் முதுகெலும்பாகத் திகழும் பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், விஸ்வகர்மா கைவினைஞர்களை வலுப்படுத்தியுள்ளது. பிரதமர் மோடியின் அர்ப்பணிப்பு, உலக அளவில் தமிழ் மொழி, கலாசாரம், பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் தமிழின் நீண்டகால வரலாற்றுப் பெருமையை மீட்டெடுத்துள்ளது எனப் பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையே பிரதமர் மோடியின் பிறந்த நாளையொட்டி, சென்னை ஆளுநர் மாளிகையில் புதுப்பிக்கப்பட்ட குழந்தைகள் பூங்காவை ஆளுநர் ஆர்.என்.ரவி புதன்கிழமை திறந்து வைத்தார்.

# பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்

**சென்னை, செப். 17:** பிரதமரின் பிறந்த நாளை முன்னிட்டு, மத்திய சுகாதாரம் குடும்பநலத் துறை அமைச்சகம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ முகாமை செப். 17 முதல் அக். 2-ஆம் தேதி வரை நாடு முழுவதும் நடத்த உத்தரவிட்டுள்ளது. இதையொட்டி, சென்னையில் வளசரவாக்கம் அருகே சின்ன போரூரில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையத்தில் 'நலமான பெண்கள் வளமான குடும்பம்' மருத்துவ முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

ஆளுநர் ஆர்.என்.ரவி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த முகாமில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். மத்திய அரசின் தேசிய நலவாழ்வு குழுமம், தேசிய சுகாதார திட்டத் துறை ஆகியவை தமிழக அரசின் பொது சுகாதாரத் துறையுடன் இணைந்து நடத்திய இந்த முகாமில் மகளிர் மற்றும் வளரினம் பருவப் பெண்களுக்கு ரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய், காசநோய், ரத்த சோகை போன்றவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மகளிருக்கான மாதவிடாய், ஊட்டச்சத்து ஆலோசனைகள், பல்வேறு சுகாதாரத் திட்டங்களின் பதிவு அடையாள அட்டை வழங்கல் இந்த முகாமில் நடைபெற்றது. தொடர்ந்து ரத்த தான முகாம் நடைபெற்றது.

இதுகுறித்து மத்திய இணையமைச்சர் எல். முருகன் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்த முகாம்களில் பரிசோதனைகள் மட்டுமின்றி நோய்கள் கண்டறியப்பட்டால் அதற்கான மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்கத்தின் தமிழக இயக்குநர் ஏ.அருண் தம்பு ராஜ், மத்திய சுகாதாரத் துறையின் குழந்தைகள் நலப் பிரிவு இணைச் செயலர் மீரா ஸ்ரீவாஸ்தவா, தேசிய சுகாதார திட்ட அதிகாரி எஸ்.வினித், சென்னை மநகராட்சி இணை ஆணையர் வீ.ப.ஜெயசீலன், மருத்துவ துறை அதிகாரிகள் சினிவாசன், கற்பகம், திவ்யஸ்ரீ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஐசிஎஃப்-இல் ரயில்வே வாரிய கூடுதல் உறுப்பினர் ஆய்வு

**சென்னை, செப். 17:** சென்னை பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டிகள் தயாரிப்பு (ஐசிஎஃப்) தொழிற்சாலையில் மத்திய ரயில்வே வாரிய கூடுதல் உறுப்பினர் (உற்பத்திப் பிரிவு) சீதாராம் சிங்கு ஆய்வு மேற்கொண்டார்.

மத்திய ரயில்வே வாரியத்தின் கூடுதல் உறுப்பினராக சீதாராம் சிங்கு அண்மையில் பொறுப்பேற்றார். இதையடுத்து அவர் சென்னையில் உள்ள ஐசிஎஃப் தொழிற்சாலையை செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார். அப்போது, ஐசிஎப் மேலாளர் யு. சுப்பாராவ் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார்.

தொடர்ந்து 2-ஆவது நாளான புதன்கிழமை ஐசிஎஃப் தொழிற்சாலையில் இரு இடங்களில் உள்ள ரயில் பெட்டிகள் தயாரிப்பு பிரிவை நேரில் பார்வையிட்டார்.

**தூய்மைப் பணி தொடக்கம்:** ஐசிஎஃப் தொழிற்சாலை வளாகத்தில் தூய்மைப் பணி இயக்க தொடக்க நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. ஐசிஎஃப் அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்களால் அலுவலக வளாகங்களில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு, மரக்கன்றுகள் நடப்பட்டன.

# கிழக்கு கடற்கரைச் சாலையில் செப்.21-இல் போக்குவரத்து மாற்றம்

**சென்னை, செப். 17:** சென்னை அருகே கிழக்கு கடற்கரைச் சாலையில் சைக்ளோத்தான் போட்டி நடைபெறுவதால், செப்.21-இல் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக தாம்பரம் மாநகர காவல் துறை புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஹெச்சிஎல் நிறுவனம், இந்திய சைக்கிள் சம்மேளனம் ஆகியவை சார்பில் 'சைக்ளோத்தான் சென்னை 2025' என்ற போட்டி செப். 21-ஆம் தேதி கானத்தூரில் தொடங்கி மாமல்லபுரம் வரையிலும், பின்னர் மாமல்லபுரத்தில் இருந்து கானத்தூர் வரையிலும் கிழக்கு கடற்கரைச் சாலையில் நடைபெறுகிறது.

இந்தப் போட்டியையொட்டி, அந்தப் பகுதியில் செப்.21-ஆம் தேதி அதிகாலை 4.30 மணியில் இருந்து காலை 8.30 மணி வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. அதன்படி, சென்னையில் இருந்து மாமல்லபுரம் நோக்கிச் செல்லும் வாகனங்கள் அக்கரை சந்திப்பில் இருந்து கே.கே. சாலையில் திருப்பிவிடப்படும். இந்த வாகனங்கள் சோழிங்கநல்லூர் சந்திப்பு, ராஜீவ் காந்தி சாலை, படூர் வழியாக மாமல்லபுரம் செல்லலாம். மாமல்லபுரத்தில் இருந்து சென்னை நோக்கி வரும் வாகனங்கள் பூஞ்சேரி சந்திப்பில் திருப்பிவிடப்படும். இந்த வாகனங்கள், எஸ்எஸ்என் ரவுண்டானா, கேளம்பாக்கம் சந்திப்பு, நாவலூர், சோழிங்கநல்லூர் வழியாக அக்கரை சென்று சென்னை செல்லலாம்.

இந்தப் போக்குவரத்து மாற்றத்தில் ஆம்புலன்ஸ் போன்ற அவசரகால வாகனங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாளை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

**சென்னை, செப். 17:** தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் வெள்ளிக்கிழமை (செப்.19) சென்னையில் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னையில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பு, தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும் இணைந்து வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை நடத்தவுள்ளன.

கிண்டி ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை முகாம் நடைபெற உள்ளது.

இதில், 8, 10, பிளஸ் 2, ஐடிஐ, டிப்ளமோ, பொறியியல், கலை அறிவியல், தொழில்நுட்பப் பிரிவில் ஏதாவது ஒரு பட்டம் ஆகிய கல்வித் தகுதியை உடைய அனைவரும் (மாற்றுத்திறனாளிகள் உள்பட) கலந்துகொள்ளலாம். கட்டணம் இல்லை. இதில் கலந்துகொள்ளும் வேலைநாடுநர்கள் மற்றும் வேலை அளிப்பவர்கள் தங்கள் விவரங்களை தமிழ்நாடு தனியார் துறை வேலை வாய்ப்பு இணையதளத்தில் www.tnprivatejobs.tn.gov.in பதிவேற்றம் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம்: அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார்

**சென்னை, செப். 17:** சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 73-ஆவது வார்டு பகுதியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

சென்னை மாநகராட்சி திரு.வி.நகர் மண்டலம் 73 -ஆவது வார்டு புளியந்தோப்பு பகுதியில் உள்ள மண்டல அலுவலக வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் அரசின் 13 துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்று மக்களிடம் மனுக்களைப் பெற்றனர். மேலும், மகளிர் உரிமைத் தொகைக்கான விண்ணப்பங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த முகாமைப் பார்வையிட்ட அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பொதுமக்கள் அளித்த மனுக்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்.

நிகழ்ச்சியில் திரு.வி.க.நகர் மண்டலக் குழுத் தலைவர் சரிதாமகேஷ்வரி, மாமன்ற உறுப்பினர் அம்பேத்வளவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


**தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| TP1-88 to 99/25-26 | த.பொ/மி.தொ.தி-I | Bay, Civil, Electrical, Cable laying & Free arm stringing in 110 KV SS |
| C-51 to 68/25-26 | த.பொ/மி.தொ.தி-II | 230 KV & 110 KV Transmission Lines & SS works |
| OT.No.02/25-26 | மே.பொ/இ/தெ/சென்னை | MTC works in 230 KV BB, Central CMRL & TNEB HQ SS |
| E09/25-26 | மே.பொ/இ/வ/சென்னை | MTC works in Koyambedu & CMRL SS |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tantransco.gov.in, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in/nicgep/app. செ.ம.தொ.இ/5204/ஒப்பந்தப்புள்ளி/2025



**THE NILGIRIS DISTRICT COOPERATIVE MILK PRODUCERS' UNION LTD,**
J8, P.B.No.69, COONOOR ROAD, UDHAGAMANDALAM – 643 001.
email:aavinooty@gmail.com Phone No. (0423) 2444019 FAX : 0423-2443428 GSTIN:33AAAAT2665F1ZP
Ref. No. 6604/Cheese/2023 Notice Inviting Tender (e-submission) Dated:-17-09-2025

Nilgiris District Cooperative Milk Producers' Union invites Two part Tenders by way of e-submission through e-procurement portal https://tntenders.gov.in from the reputed Manufactures/Authorized Dealers for following items/works for Ooty Dairy.

| Sl.No. | Name of the work / Items | EMD (Rs.) |
|---|---|---|
| 1 | Automated CIP Single circuit, Dry Blender, Hygiene station, Milk storage and allied equipments | 50,000/- |
| 2 | Labour Contractor for housekeeping, Office assistant, Boiler operator, Technicians and other categories | 10,000/- |
| | Tender document availability 18.09.2025 to 20.10.2025<br>Pre bid meeting : 29.09.2025 e-submission : 21.10.2025<br>Technical bid opening 22.10.2025 | |
| | The technical bid shall be opened through online e-procurement portal (https://tntenders.gov.in) on the above mentioned dates at above mentioned address. The bidders should submit tender bids only through e-procurement portal https://tntenders.gov.in. All other details can be seen in the tender documents, the tender documents can be downloaded at the above website. Corrigendum/Addendum to this publication, if any would appear only on the above said website. | |

DIPR/ 5200 /TENDER/2025 GENERAL MANAGER, The N.D.C.M.P.U Ltd., UDHAGAMANDALAM



**SALE NOTICE UNDER IBC, 2016**

Rescheduled dates of E-Auction of **M/S. Ganga Foundations Private Limited (In Liquidation)**

**Original Auction Notice published dt:** 24th August, 2025 (Corrigendum dt : 26th August, 2025)
**Auction Postponement Notice Dt :** 17th September, 2025.

**Rescheduled Dates are herein below:**

| | |
|---|---|
| Last Date for EOI / Pre-Qualification/ Bid Document / EMD Payment | 13th October, 2025 |
| Date of e-auction | 15th October, 2025 |

All other terms and conditions and auction timings as notified in the original auction notice will be applicable with the above-referred revised dates.

CA Mahalingam Suresh Kumar (Liquidator)
E-mail : msureshkumar@icai.org / Ph : +91 94888 10404



**எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்சர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண் 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2. தொ.பே: 044-42995000 தொலைநகல்: 044-42995050 www.equitasbank.com

**தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு**

எங்களது வங்கி கிளைகளில் நகைக்கடன் வாங்கி சரிவர திருப்பிச் செலுத்தாத அனைவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பு. கடன்களை திரும்பச் செலுத்த வேண்டி பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், கடனை திருப்பிச் செலுத்தாதவர்களின், கீழே குறிப்பிடப்பட்ட கடன் எண்கள் நகைகளை கீழ்கண்ட கிளைகளில் குறிப்பிட்ட தேதியில் & நேரத்தில் பகிரங்க ஏலம் விடப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தேதி: 24.09.2025 நேரம்: காலை 10.00 மணி
இடம்: எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

| நகரம் | கிளை | கடன் எண்கள் |
|---|---|---|
| சென்னை | பாரிஸ் | 700011053452/GL0000014387<br>700011064108/GL0000014683 |
| சென்னை | டி. நகர் | TNAGRPJ2503070001 |
| சென்னை | கே.கே.நகர் | 700011308620/GL0000020648 |
| சென்னை | கூடுவாஞ்சேரி | 700011329375/GL0000022047 |

குறிப்பு: 1. தங்கள் நகைகளை மீட்க நினைக்கும் வாடிக்கையாளர்கள் மொத்த நிலுவைத் தொகையை அடகு வைக்கப்பட்ட வங்கி கிளைகளில் ஏலத்திற்கு முன் செலுத்தி, நகைகளை மீட்கலாம். 2. ஏலம் எடுக்க விரும்புபவர்கள் அடையாள சான்று, வருமான வரி PAN கார்டு, GST எண் (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / கம்பெனிகள்) அளிக்க வேண்டும். 3. ரூ.1,00,000 முன் தொகையாக (EMD) ஏலம் ஆரம்பிக்கும் முன் செலுத்த வேண்டும்.

இடம்: சென்னை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டாக
தேதி : 18 செப்டம்பர் 2025 அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி



**HDFC BANK ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்**
கிளை அலுவலகம்: 1வது தளம், ஐ.டி.சி. சென்டர், 760, அண்ணா சாலை, சென்னை-600 002 CIN L65920MH1994PLC080618 Website: www.hdfcbank.com

**விற்பனை அறிவிப்பு (SALE BY PRIVATE TREATY)**

இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்: Mr.தாலூத்து ராஜூ ராஜேஷ், F-1, செரின் டவர்ஸ், ப்ளாக் M, ராஜா கார்டன் மெயின் ரோடு, வானகரம், சென்னை-600095 சக-கடன்தாரர்: Mrs.K.M.ரூபி அஞ்சம், F-1, செரின் டவர்ஸ், ப்ளாக் M, ராஜா கார்டன் மெயின் ரோடு, வானகரம், சென்னை-600095 மேலும் முகவரி, Principal, Zoology Department, நாராயணா குரூப் ஆஃப் எடுகேஷனல் இன்ஸ்டிட்யூஷன்ஸ், எண்.102, நாதமுனி தியேட்டர் அருகில், திருநகர், வில்லிவாக்கம், சென்னை-600049 மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பது யாதெனில், SARFAESI சட்டத்தின் கீழ், தனி ஒப்பந்தத்தின் மூலம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்டால் கையகப்படுத்தப்பட்டுள்ள (Possession) சொத்தினை "எங்கு அமைந்துள்ளதோ அங்கு உள்ளது உள்ளபடி நிலையில்" விற்பனை செய்ய ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட் உத்தேசித்துள்ளது. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு விலை குறியீடாக ₹ 90,50,000/- ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட் பெற்றுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு கூடுதலாக விலைக்குறியீடு/(கள்) பெறப்படாவிட்டால், விற்பனை மேற்குறிப்பிட்டுள்ள தொகைக்கு உறுதிப்படுத்தப்படும்.

**சொத்து விவரம்**

தென் சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.42/8, பழைய பைமாஷ் எண்.528, பட்டா எண்.3557 (பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.42/8 பகுதி மற்றும் மனை எண்.B1 என குறிப்பிடப்படுகிறது) வில்லா எண்.B4, மனை எண்.B1, "ECO வில்லா ரெசிடென்சிஸ்" என்றழைக்கப்படும் குடியிருப்பு காம்ப்ளக்ஸ், செந்நீருப்பம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 1890 சதுர அடி அல்லது 175.65 சதுர மீட்டர் (தோராயமாக) வில்லா, கரேஜ் (garage) உட்பட, அதனுடன் பொது உரிமைகள் மற்றும் வசதிகள், மொத்தமுள்ள 608 சதுர மீட்டர் அல்லது 6544 சதுர அடி நிலத்தில் 1083 சதுர அடி அல்லது 100.68 சதுர மீட்டர் பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.42/9B-ல் உள்ள நிலம், தெற்கு: சர்வே எண்.42/8 பகுதியில் உள்ள பொது ரோடு மற்றும் மனை எண்.B2, கிழக்கு: சர்வே எண்.42/10B-ல் உள்ள நிலம், மேற்கு: சர்வே எண்.42/8 பகுதியில் உள்ள மனை எண்.A1 மற்றும் பொது வழிப்பாதை.

HDFC ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்
ஒப்பம்/- அதிகாரம் பெற்ற அதிகாரி

Head Office: HDFC Bank House, Senapati Bapat Marg, Lower Parel (West), Mumbai - 400 013



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.23 / 2025–2026/ முவதொஅ / நாள்.11.09.2025.



தமிழ்நாடு அரசு
**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்**
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ. எண். 41/2025–26/ தவஅ / நாள் : 11.09.2025



தமிழ்நாடு அரசு / இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் – 628 215



தமிழ்நாடு அரசு – நீர்வளத்துறை



தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை



தமிழ்நாடு அரசு – நீர்வளத்துறை



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்.



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**



தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**



மாண்புமிகு கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் எண்-III, முன்னிலையில்
சாஸ்திரி பவன், கூடுதல் கட்டிடம், 6வது தளம், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.
O.A.எண். 242 / 2025
பாரத ஸ்டேட் வங்கி,



மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை முன்னிலையில்
O. A. No. 671 of 2024



தினமணி கதிர்

## ஆன்மிக சிந்தனை

கடவுளை நோக்கி உங்கள் மனதை திருப்புங்கள். அப்போது மனம் இயற்கையாகவே உலக இன்பத்தை நாடுவதை விட்டுவிடும். பிறகு உங்கள் மனதின்மேல் நீங்கள் ஆதிக்கம் செலுத்துவது எளிதாகும்.

– சத்ய சாய்பாபா

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

சங்கீதம் 27:1

(இறைநம்பிக்கையாளர்களான) அவர்கள் எத்தகையவர்கள் எனில், தங்களுடைய தொழுகையில் பயபக்தியை மேற்கொள்கின்றார்கள்.

(அல்குர்ஆன் 23.2)

## இன்றும் நாளையும்

### வியாழக்கிழமை

(18–9–2025)

**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–2**

*பிறை:* தேய்பிறை

**திதி** : துவாதசி நள்ளிரவு 1.18 வரை பிறகு திரயோதசி.

**நட்சத்திரம்** : பூசம் காலை 9.28 வரை பிறகு ஆயில்யம்

**யோகம்** : அமிர்த / சித்தயோகம்

**ராகுகாலம்** : நண்பகல் 1.30 – 3.00 மணி.

**எமகண்டம்** : காலை 6.00 – 7.30 மணி.

**சூலம்** : தெற்கு.

**நல்ல நேரம்** : காலை 9 – 10 மணி. மாலை 4 – 5 மணி

**இன்றைய விசேஷம்:** ஸன்யஸ்த மஹாளயம். சுவாமிமலை ஸ்ரீ முருகப் பெருமான் தங்கக் கவசம் அணிந்து வைர வேல் தரிசனம். திருப்பதி ஸ்ரீ ஏழுமலையப்பன் புஷ்பாங்கி சேவை, மைசூர் மண்டபம் எழுந்தருளல். திருத்தணி ஸ்ரீ முருகப் பெருமானுக்குப் பால் அபிஷேகம். சோழவந்தான் அருகில் குருவித்துறை ஸ்ரீ சித்திர வல்லபப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ குருபகவானுக்கு திருமஞ்சனம். ஆலங்குடி ஸ்ரீ குருபகவான் கொண்டைக்கடலைச்சாற்று வைபவம். திருவல்லிக்கேணி ஸ்ரீ ராகவேந்திர சுவாமிக்கு குருவார திருமஞ்சனம். தக்கோலம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேகம். குறுக்குத்துறை ஸ்ரீ முருகப் பெருமான் அபிஷேகம். திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் திருமஞ்சனம். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ ராமர் மூலவருக்குத் திருமஞ்சன சேவை. திருமெய்யம் ஸ்ரீ சத்தியமூர்த்தி புறப்பாடு.

| | |
|---|---|
| **மேஷம்** | சுகம் |
| **ரிஷபம்** | சாதனை |
| **மிதுனம்** | முயற்சி |
| **கடகம்** | செலவு |
| **சிம்மம்** | வரவு |
| **கன்னி** | பெருமை |
| **துலாம்** | ஆதரவு |
| **விருச்சிகம்** | யோகம் |
| **தனுசு** | பரிசு |
| **மகரம்** | நன்மை |
| **கும்பம்** | மகிழ்ச்சி |
| **மீனம்** | உவகை |

### வெள்ளிக்கிழமை

(19–9–2025)

**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–3**

*பிறை:* தேய்பிறை

**திதி** : திரயோதசி நள்ளிரவு 12.55 வரை பிறகு சதுர்த்தசி.

**நட்சத்திரம்** : ஆயில்யம் காலை 9.29 வரை பிறகு மகம்

**யோகம்** : மரணயோகம்

**ராகுகாலம்** : காலை 10.30 – 12.00 மணி.

**எமகண்டம்** : பிற்பகல் 3.00 – 4.30 மணி.

**சூலம்** : மேற்கு.

**நல்ல நேரம்** : காலை 6 – 7 மணி. மாலை 5 – 6 மணி

**இன்றைய விசேஷம்:** பிரதோஷம். இராமேஸ்வரம் ஸ்ரீ பர்வதவர்த்தினியம்மன் தங்கப் பல்லக்கில் புறப்பாடு. சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் தங்கப் பாவாடை தரிசனம். திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் கோயிலில் ஸ்ரீ சுந்தரவல்லித் தாயார் புறப்பாடு. கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் திருமஞ்சனம், மாலை ஊஞ்சல் சேவை. மாடவீதி புறப்பாடு. திருத்தணி ஸ்ரீ முருகப் பெருமான் கிளி வாகன சேவை. கரூர் தான்தோன்றிமலை ஸ்ரீ கல்யாண வெங்கட ரமண சுவாமிக்கு திருமஞ்சன சேவை. பெருஞ்சேரி ஸ்ரீ வாகீஸ்வரர், படைவீடு ஸ்ரீ ரேணுகாம்பாள் புறப்பாடு. தூத்துக்குடி ஸ்ரீ பாகம்பிரியாள், வீரவநல்லூர் ஸ்ரீ மரகதாம்பிகை தலங்களில் அபிஷேகம். லால்குடி ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் கோயிலில் அபிஷேகம். திருமயிலை, திருவான்மியூர், பெசன்ட்நகர், திருவிடைமருதூர் தலங்களில் மாலை சுவாமி ஸ்ரீ அம்பாள் ரிஷப வாகனத்தில் பவனி.

| | |
|---|---|
| **மேஷம்** | புகழ் |
| **ரிஷபம்** | வெற்றி |
| **மிதுனம்** | பெருமை |
| **கடகம்** | வாழ்வு |
| **சிம்மம்** | கண்ணியம் |
| **கன்னி** | நலம் |
| **துலாம்** | நன்மை |
| **விருச்சிகம்** | நிறைவு |
| **தனுசு** | உறுதி |
| **மகரம்** | மகிழ்ச்சி |
| **கும்பம்** | நம்பிக்கை |
| **மீனம்** | பயணம் |

## இன்றைய நிகழ்ச்சிகள்

**தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை சார்பில் 50–ஆவது தேசிய ஆவணக் காப்பாளர்கள் குழு விழா:** உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், தேசிய ஆவணக் காப்பகத் தலைமை இயக்குநர் சஞ்ஜய் ரஸ்தோகி, தமிழ்நாடு உயர்கல்வித் துறை செயலர் பொ.சங்கர், தமிழ்நாடு ஆவணக் காப்பக முதன்மைச் செயலர் ஹர் சஹாய் மீனா உள்ளிட்டோர் பங்கேற்பு, சென்னை ஐடிசி கிராண்ட் சோழா, கிண்டி காலை 9.30.

**செங்கல்பட்டு மாவட்ட தடகள சங்கம் சார்பில் 39–ஆவது தமிழ்நாடு மாவட்டங்களுக்கு இடையேயான ஜூனியர் தடகள போட்டி தொடக்க விழா:** தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகம், வண்டலூர், பிற்பகல் 2.

**ஊழியர்கள் மாநில காப்பீட்டு கழகம் சார்பில் தொழிலாளர்கள், நிறுவன உரிமையாளர்கள் பதிவை மேம்படுத்தும் திட்டம் குறித்த மாநாடு:** இஎஸ்ஐ மண்டல ஆணையர் வேணுகோபால் பங்கேற்பு, வெள்ளி விழா அரங்கம், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (அய்மா), ஏடிசி சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, காலை 11.

**மயிலாப்பூர் ஆர்ட்ஸ் அகாதெமி – தெய்வ சேக்கிழார் எனும் தலைப்பில் நாடக நிகழ்ச்சி:** பாரதிய வித்யா பவன், கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், மாலை 6.30.

**உத்தர பிரதேச மாநில தோட்டக்கலை கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு – உருளைக்கிழங்கு வாங்குபவர்கள் – விற்பனையாளர்கள் சந்திப்பு:** ஹோட்டல் ஹாரிசன், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், காலை 10.

## நாளைய மின் தடை

*சென்னை, செப். 17:* மின்வாரிய பராமரிப்புப் பணி காரணமாக அடையாறு, மாத்தூர், செங்குன்றம், செம்பியம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளிக்கிழமை (செப். 19) காலை 9 முதல் பிற்பகல் 2 வரை மின் விநியோகம் நிறுத்தப்படும் என மின் வாரியம் அறிவித்துள்ளது.

**மின்தடை பகுதிகள்:**

**அடையாறு:** கஸ்தூரிபாய் நகர் 1–ஆவது பிரதான சாலை, குறுக்குத் தெரு, நேரு நகர் 1 முதல் 4–ஆவது வரையிலான தெருக்கள், பக்தவத்சலம் நகர் 2 முதல் 5–ஆவது வரையிலான தெருக்கள்.

**மாத்தூர்:** சின்னசாமி நகர், எம்எம்டிஎ பிரதான சாலை, ஓமகுலம் தெரு, சக்தி நகர், நேரு நகர், பெருமாள் கோயில் தெரு, டெலிகாம் நகர், பெரிய மாத்தூர், புது நகர், மஞ்சம்பக்கம், அச்சிஸ் நகர், அகர்சன் கல்லூரி சாலை.

**செங்குன்றம்:** சோத்துப்பெரும்பேடு, கிருதலாபுரம், பூதூர், அருமந்தை, விச்சூர், மேட்டுப்பாளையம், கண்டிகை, வெள்ளிவாயல்.

**செம்பியம்:** முத்தமிழ் நகர் 1 முதல் 7–ஆவது வரையிலான பிளாக், கொடுங்கையூர் சீனிவாசப் பெருமாள் தெரு, மீனாம்பாள் தெரு, கௌதமபுரம் ஹவுசிங் போர்டு, பெரியார் நகர், வியாசர்பாடி, திருப்பூர் குமரன் தெரு, எஸ்.எஸ்.வி. கோயில் தெரு, எம்.பி.எம். தெரு, சுப்பிரமணி நகர், அஞ்சுகம் நகர், செங்குன்றம் சாலை, புதிய காமராஜர் நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்.

## விழிப்புணர்வு...



வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் 100– ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னை காசிமேடு கடற்கரையில் அவரது அறக்கட்டளை சார்பில் கடற்கரை தூய்மை மற்றும் மீனவர் சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியை தொடங்கி வைத்த சுற்றுச்சூழல் துறைச் செயலர் சுப்ரியா சாஹு. உடன், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் எம். ஜெயந்தி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன்.

## அவதூறு பேச்சு: யூடியூபர் மீண்டும் கைது

**சென்னை, செப். 17:** சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்த தேரணிராஜன் குறித்து அவதூறாக பேசியதாக யூடியூபர் புதன்கிழமை மீண்டும் கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாடு மருத்துவக் கல்வி கூடுதல் இயக்குநரான எ.தேரணிராஜன், சென்னை கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் அண்மையில் புகார் அளித்தார். அதில், தான் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்தபோது அரசுப் பணத்தை கொள்ளையடித்ததாகவும், செவிலியர்களிடம் பணம் பெற்றதாகவும் சென்னை கிழக்கு தாம்பரத்தைச் சேர்ந்த யூடியூபர் கிருஷ்ணகுமார் என்ற வாராகி (51) என் மீது அவதூறு பரப்பும் வகையில் உண்மைக்கு புறம்பான கருத்துகளை எக்ஸ் தளத்திலும், யூடியூபிலும் தெரிவித்து வருகிறார். எனவே, அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கபட்டிருந்தது.

அந்தப் புகாரின் அடிப்படையில் போலீஸார் நடத்திய விசாரணையில், வாராகி உண்மைக்கு புறம்பான கருத்துகளை பரப்பி வருவது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து கீழ்ப்பாக்கம் போலீஸார் வாராகி மீது அவதூறு பரப்புதல், உண்மைக்கு புறம்பான தகவலை கூறுதல், தகவல் தொழில்நுட்பச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

ஏற்கெனவே சிபிசிஐடி தொடர்ந்த வழக்கில் கைது செய்யப்பட்டு, செங்கல்பட்டு சிறையில் இருக்கும் வாராகியை இந்த வழக்குத் தொடர்பாக கீழ்ப்பாக்கம் போலீஸார் மீண்டும் புதன்கிழமை கைது செய்தனர்.

பின்னர் அவரை, எழும்பூர் 2–வது நீதித்துறை நடுவர் மன்றத்தில் போலீஸார் ஆஜர்படுத்தினர். நீதித்துறை நடுவர், வாராகியை செப்.30–ஆம் தேதி வரை காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். இதையடுத்து வாராகி, செங்கல்பட்டு சிறையில் மீண்டும் அடைக்கப்பட்டார்.

## கல்லூரியில் ரத்த தான முகாம்

**சென்னை, செப். 17:** சென்னை மீனம்பாக்கம் அகுர்சந்த் மன்முல் (ஏ.எம்.) ஜெயின் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற ரத்த தான முகாமை மத்திய இணையமைச்சர் எல்.முருகன் தொடங்கி வைத்தார்.

ரத்ததான அமிர்தபெருவிழா 2.0 என்ற இயக்கத்தின் மூலம், ரத்த தான முகாம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

இதன் ஒருபகுதியாக சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள அகுர்சந்த் மன்முல் ஜெயின் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற ரத்த தான முகாமை மத்திய இணையமைச்சர் எல். முருகன் தொடங்கி வைத்தார்.

இதில், ஏ.எம். கல்லூரியின் தலைவர், முதல்வர் உள்ளிட்ட நிர்வாகிகள், கீழ்ப்பாக்கம் தெராபந்த் சபா நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு, ரத்த தானம் செய்தனர்.

## பொறியியல் கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



சென்னை கௌரிவாக்கம் நியூ பிரின்ஸ் ஸ்ரீபவானி பொறியியல் கல்லூரி, அமெரிக்கா அரோரா பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாற்ற நிகழ்வில் பங்கேற்ற பல்கலைக்கழக தொழில்நுட்பக் கல்வி துணைத் தலைவர் பெய்ஜ் டர்னர், நிர்வாக இயக்குநர் கெல்சே கோஜென்ஸ், கல்லூரி தலைவர் கே.லோகநாதன், துணைத் தலைவர் எல்.நவீன்பிரசாத், கேம்பஸ் அமெரிக்கா தலைமைச் செயல் அதிகாரி ஹரீஷ் அனந்த பத்மநாபன், கல்லூரி முதல்வர் டி.சரவணன், ஒருங்கிணைப்பாளர் என்.எஸ்.செந்தூர்.

**தாம்பரம், செப். 17:** சென்னை கௌரிவாக்கம் நியூ பிரின்ஸ் ஸ்ரீபவானி பொறியியல் கல்லூரியில், அமெரிக்காவின் அரோரா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அரோரா பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் கல்வி துணைத் தலைவர் பெய்ஜ் டர்னர், நியூ பிரின்ஸ் ஸ்ரீபவானி பொறியியல் கல்லூரித் தலைவர் கே.லோகநாதன் ஆகியோர் கையொப்பமிட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப்பரிமாறிக்கொண்டனர்.

இதுகுறித்து அரோரா பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர் பெய்ஜ் டர்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், 'கல்லூரி மாணவ–மாணவிகள், ஆசிரியர்களுக்கு சர்வதேச அளவிலான தொழில்நுட்பப் பரிமாற்றம், கூட்டுப் பயிற்சி, ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற தனித்திறன்களை மேம்படுத்திக்கொள்ள இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்கிறது' என்றார்.

நியூ பிரின்ஸ் ஸ்ரீபவானி பொறியியல் கல்லூரியின் துணைத் தலைவர் எல்.நவீன் பிரசாத் பேசுகையில், 'செயற்கை நுண்ணறிவாற்றல், தரவு அறிவியல், சைபர் பாதுகாப்பு தொழில்நுட்பம் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு போன்ற திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், மாணவர் பரிமாற்றத் திட்டம் மூலம் மாணவர்கள் வெளிநாடு சென்று வரும் வாய்ப்பும் கிடைக்கும்' என்றார்.

நிகழ்வில், அரோரா பல்கலைக்கழகத்தின் நிர்வாக இயக்குநர் கெல்சே கோஜென்ஸ், கேம்பஸ் அமெரிக்காவின் தலைமைச் செயல் அதிகாரி ஹரீஷ் அனந்த பத்மநாபன், கல்லூரி முதல்வர் டி.சரவணன், ஒருங்கிணைப்பாளர் என்.எஸ்.செந்தூர், கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.18 கோடி போதைப் பொருள் பறிமுதல்

**சென்னை, செப். 17:** அடிஸ் அபாபாவில் இருந்து கடத்தி வரப்பட்ட ரூ.18 கோடி மதிப்பிலான மெத்தாகுளோன் எனப்படும் போதைப் பொருளை சென்னை விமானநிலையத்தில் பறிமுதல் செய்த அதிகாரிகள், இதுதொடர்பாக இருவரை கைது செய்தனர்.

ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் இருந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை சென்னைக்கு வரும் பயணிகள் விமானத்தில் அதிக அளவில் போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக சென்னை மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் சென்னை விமான நிலையத்துக்கு வந்த அந்த விமானத்தில் பயணிகளின் உடைமைகளை அதிகாரிகள் சோதனையிட்டனர்.

அப்போது, அதில் சுற்றுலா பயணிகள் விசாவில் வந்த கென்யா நாட்டைச் சேர்ந்த 28 வயது இளைஞர் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து அவரை தனியறைக்கு அழைத்து சென்று விசாரித்து, அவரின் உடைமைகளை சோதனையிட்டனர்.

அதில், சாக்லேட் பொட்டலங்கள் போல ரூ.18 கோடி மதிப்பிலான 1.8 கிலோ மெத்தாகுளோன் என்ற போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றை பறிமுதல் செய்த அதிகாரிகள் கென்யா நாட்டு இளைஞரையும், போதைப் பொருளை வாங்க வந்த மற்றொரு நபரையும் கைது செய்து சென்னை தியாகராய நகரிலுள்ள மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.

## பெண்ணுக்கு பாலியல் தொல்லை: இளைஞர் கைது

**சென்னை, செப். 17:** சென்னை எம்ஜிஆர் நகரில் சாலையில் நடந்து சென்ற பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக இளைஞர் கைது செய்யப்பட்டார்.

எம்ஜிஆர் நகர் பகுதியைச் சேர்ந்த 40 வயது பெண், நெசப்பாக்கம் ராமன் தெருவில் கடந்த திங்கள்கிழமை நடந்து சென்றபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர், அந்தப் பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்துள்ளார்.

இதுகுறித்து அந்தப் பெண் அளித்த புகாரின்பேரில், எம்ஜிஆர் நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். அதில், இந்தச் செயலில் ஈடுபட்டது கோடம்பாக்கத்தைச் சேர்ந்த விக்னேஷ்வரன் (29) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

## 31–ஆவது நாளாக போக்குவரத்து ஊழியர்கள் காத்திருப்புப் போராட்டம்

**சென்னை, செப். 17:** போக்குவரத்து ஊழியர்களின் காத்திருப்புப் போராட்டம் தொடர்ந்து 31–ஆவது நாளாக புதன்கிழமை நீடித்தது.

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது, ஊதிய ஒப்பந்தத்தின்படி நிலுவைத் தொகையை வழங்குவது, ஓய்வு பெற்ற அனைவருக்கும் பணப் பலன்களை வழங்குவதற்கான காலவரையறையை நிர்ணயிப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து ஊழியர்கள் மாநிலம் முழுவதும் கடந்த 18–ஆம் தேதி முதல் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தந்த மாவட்டத்தின் போக்குவரத்துக் கழக பணிமனை முன் நடைபெற்றுவரும் இந்தத் தொடர் காத்திருப்புப் போராட்டம் புதன்கிழமையுடன் 31 நாள்களை கடந்துள்ளது.

இதுகுறித்து சென்னை பல்லவன் இல்லம் முன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போக்குவரத்துக் கழக ஓய்வூதியர்கள் சங்கத் தலைவர் குருசாமி கூறியதாவது:

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் போக்குவரத்து ஓய்வூதியர்கள் மற்றும் ஊழியர்களை அரசும், அதிகாரிகளும் கண்டுகொள்ளவில்லை. சமீபத்தில் நடைபெற்ற அமைச்சருடனான பேச்சுவார்த்தையிலும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வாய்மொழியான உறுதி மட்டுமே வழங்கப்படுகிறது. அதிகாரப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வுகாணும் வரை போராட்டம் தொடரும் என்றார் அவர்.

## வரி ஏய்ப்பு புகார்: நகைக் கடையில் வருமான வரித் துறை சோதனை

**சென்னை, செப். 17:** வரி ஏய்ப்பு புகார் தொடர்பாக சென்னை சௌகார்பேட்டையில் நகைக் கடையில் வருமான வரித் துறையினர் புதன்கிழமை சோதனை செய்தனர்.

சென்னை சௌகார்பேட்டை வீரப்பன் தெருவில் தங்க நகைகளை மொத்தமாக விற்கும் நகைக் கடை இயங்கி வருகிறது. இந்த நகைக் கடை நிர்வாகத்தினர், வரி ஏய்ப்பு செய்து வருவதாக வருமானவரித் துறையினருக்கு புகார்கள் வந்தன.

அதன் அடிப்படையில் வருமானவரித் துறையினர் நடத்திய விசாரணையில், வரி ஏய்ப்பு செய்தது தொடர்பாக சில ஆதாரங்கள் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

அதன் அடிப்படையில் அந்த நகைக் கடையில் வருமானவரித் துறையினர் புதன்கிழமை காலை 7 மணி முதல் சோதனையில் ஈடுபட்டனர்.

இந்தச் சோதனை இரவு நீண்ட நேரம் நீடித்தது.

சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. சோதனை முழுமையாக நிறைவடைந்த பின்னர், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்த விவரங்களை தெரிவிக்க முடியும் என வருமானவரித் துறையினர் தெரிவித்தனர்.

## குறைகேட்பு...



சென்னை வேப்பேரியில் உள்ள பெருநகர காவல் ஆணையரகத்தில் புதன்கிழமை நடைபெற்ற குறைதீர் முகாமில் பொதுமக்களின் புகார் மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்த ஆணையர் ஏ.அருண்.

## ரூ. 7 கோடி மோசடி: தனியார் நிறுவன இயக்குநர் கைது

**சென்னை, செப். 17:** ரூ.7 கோடி மோசடி வழக்கில் தலைமறைவாக இருந்த தனியார் நிறுவன இயக்குநரை பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

சென்னை ஊரப்பாக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கதுரை–பூர்ணிமா தம்பதி. இவர்கள் சேலையூர் மற்றும் ஊரப்பாக்கம் ஆகிய பகுதிகளில் தனியார் நிதி நிறுவனம் நடத்தி வந்தனர்.

இவர்கள், வாடகைக்கு ஒப்பந்தம் செய்த வீடுகளை குத்தகைக்கு அளிப்பதாக விளம்பரப்படுத்தி 91 பேரிடம் இருந்து ரூ.7 கோடிக்கு மேல் வசூலித்து ஏமாற்றியுள்ளனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின்பேரில், அசோக் நகர் பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தலைமறைவாக இருந்த பூர்ணிமாவை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

மேலும் இந்த நிறுவனம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் பொருளாதார குற்றப்பிரிவு, காவல் ஆய்வாளர், ஓ.செண்பகாதேவி கைப்பேசி: 99944 99091என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் என்று போலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## புழல் சிறை பண்ணையில் 2,000 கோழிகள் மர்மமாக உயிரிழப்பு

**சென்னை, செப். 17:** சென்னை புழல் சிறை பண்ணையில் இருந்த 2,000 கோழிகள் மர்மமான முறையில் உயிரிழந்தன.

தமிழக சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு வாரத்துக்கு இரு முறை கோழிக்கறி வழங்கப்படுகிறது. இதற்கு தேவையான கோழிக்கறியை சிறைக் கைதிகளே உற்பத்தி செய்து கொள்வதற்காக, தமிழக சிறைகளில் இறைச்சி கோழிப்பண்ணை அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

இந்தக் கோழிகள் சிறைக் கைதிகளுக்கும் பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. சிறை அதிகாரிகள் மேற்பார்வையில் சிறை கைதிகளால் இந்த கோழிப்பண்ணை பராமரிக்கப்பட்டு, நடத்தப்படுகிறது. அந்த வகையில், புழல் மத்திய சிறையிலும் கோழிப்பண்ணை உள்ளது.

இந்த பண்ணையில் இறைச்சிக்காக வளர்க்கப்பட்டிருந்த கோழிகளில் கடந்த 4 நாள்களில் 2,000 கோழிகள் மர்மமான முறையில் இறந்துள்ளதாகக் கூறப்படுகிறது. பறவைக் காய்ச்சல் காரணமாக கோழிகள் இறந்ததாகவும், இந்தக் காய்ச்சல் சிறை கைதிகளுக்கு பரவ வாய்ப்பு உள்ளதாகவும் அச்சம் எழுந்துள்ளதாக சிறை வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரம் குறித்து தற்போது உயர்நிலை விசாரணை நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து சிறைத் துறை அதிகாரிகள் கூறுகையில், 'புழல் சிறை வளாகத்தில் உள்ள பண்ணையில் அண்மையில் இறந்த சில கோழிகளை ஆய்வுக்காக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். அதன் முடிவில் கோழிகள் இறப்புக்கான காரணம் தெரியவரும்.

பண்ணையில் வேலை செய்த கைதிகளுக்கு எந்தத் தொற்றும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்' என்றனர்.

# வெற்றிக் கணக்கை கரூரிலிருந்து தொடங்குவோம்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்



**கரூர், செப். 17:** கரூரிலிருந்து வெற்றிக் கணக்கை தொடங்குவோம் என இளைஞரணிச் செயலரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

கரூர் கோடங்கிப்பட்டியில் புதன்கிழமை நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவுக்கு முன்னிலை வகித்து அவர் பேசியதாவது:

கட்சிக்கு எத்தனையோ சிறப்புகள், வரலாறுகள் உண்டு. அந்த வரலாறு வரிசையில் இந்த முப்பெரும் விழாவும் இடம் பெறும். முன்னாள் முதல்வர் கருணாநிதி முதல்முதலாக நின்று வென்ற இந்த மாவட்டத்திலிருந்து 2026 தேர்தலுக்கான வெற்றிக் கணக்கை தொடங்குவோம் என்றார் உதயநிதி ஸ்டாலின்.

**வெற்றி நிச்சயம்:** பெரியார் விருது பெற்ற கட்சியின் துணைப் பொதுச் செயலரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி பேசியதாவது: எனக்கு கனவாக இருந்த, முன்னாள் முதல்வர் கருணாநிதி பெற்ற பெரியார் விருதை பெற்றுள்ளேன். இதை எனக்கு வழங்கியதற்காக முதல்வரும், திமுக தலைவருமான ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பெருமழையிலும் இங்கு நின்றுக் கொண்டிருக்கும் கட்சியினரை பார்க்கும்போது, எந்தத் தேர்தலையும், எந்த பகைவர்களாக இருந்தாலும், அது நம்முடைய பரம்பரை பகைவர்களாக இருந்தாலும், புதிதாக வரக் கூடியவர்களாக இருந்தாலும் அனைவரையும் வென்று காட்டுவோம். வெற்றி நிச்சயம் என்றார் அவர்.

**தலைவர்களின் படங்களுக்கு முதல்வர் மரியாதை:** விழா மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர்களைத் தூவி முதல்வர் மு.க. ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

விழாவில் மூத்த நிர்வாகிகளுக்கு விருது வழங்கியதும், மாலை 5.20 மணிக்கு தனது பேச்சைத் தொடங்கினார். அப்போது பலத்த மழை பெய்தது.

இருப்பினும் தொண்டர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் இருக்கையை தலைக்கு மேல் பிடித்தபடி முதல்வர் பேச்சை கேட்டனர்.

# பிரதமர் மோடி பிறந்த நாள்: பாஜக நல உதவிகள் அளிப்பு

**சென்னை, செப்.17:** பிரதமர் நரேந்திர மோடி பிறந்தநாளையொட்டி பாஜக சார்பில், சென்னையில் 150 தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகளை தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் புதன்கிழமை வழங்கினார்.

பிரதமர் மோடியின் பிறந்தநாளையொட்டி, பாஜக மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன் ஏற்பாட்டில், திருவான்மியூர் தெற்கு மாட வீதியில் உள்ள காக்கும் கரங்களில் தங்கியுள்ள முதியவர்களுக்கு காலை சிற்றுண்டியுடன் ஹார்லிக்ஸ், பழங்கள், பிஸ்கெட், ரொட்டி பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

மேலும், மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 150 பேருக்கு, அவர்களது பணியை கௌரவிக்கும் வகையில் பொன்னாடை அணிவித்து, இனிப்பு வகைகள், புத்தாடைகள், பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. அவர்களுடன் நயினார் நாகேந்திரன் காலை சிற்றுண்டி சாப்பிட்டார். தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை செளந்தரராஜன், மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**நயினார் நாகேந்திரன் பேட்டி:** தொடர்ந்து, திருவான்மியூர் கடற்கரையில் தூய்மை பாரதம் நிகழ்ச்சியை தொடங்கி வைத்த நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பாஜக அடுத்த கட்சி பிரச்னையில் தலையிடாது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் சந்தித்துப் பேசியதில் எவ்வித தவறும் இல்லை. கூட்டணி கட்சித் தலைவர்கள் என்ற அடிப்படையில் சந்தித்து பேசியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அதிமுக பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது, அவர்களது உள்கட்சி பிரச்னை. அதை அந்தக் கட்சியின் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி பார்த்துக்கொள்வார். பேரவைத் தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள் உள்ளன. கூட்டணியில் கடைசி நிமிஷத்திலும் மாற்றம் வரலாம்.

அமித் ஷா சொன்னால், எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக பிரசாரம் செய்வேன் என ஏற்கெனவே டி.டி.வி. தினகரன் கூறியிருந்தார். இப்போது ஏன் மாற்றிப்பேசுகிறார் எனத் தெரியவில்லை என்றார் நயினார் நாகேந்திரன்.



பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளையொட்டி, சென்னை திருவான்மியூரில் புதன்கிழமை 150 தூய்மைப் பணியாளர்களை கௌரவித்து, புத்தாடைகள் உள்ளிட்ட நல உதவிகளை வழங்கி அவர்களுடன் உணவருந்திய பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன். உடன் துணைத் தலைவர் கரு.நாகராஜன், மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன்.

# ஆளுநர் மாளிகை, எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை,செப்.17:** சென்னையில் உள்ள தமிழக ஆளுநர் மாளிகை மற்றும் தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி வீட்டுக்கு புதன் கிழமை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்துக்கு புதன் கிழமை வந்த மின்னஞ்சலில், கிண்டியில் உள்ள தமிழக ஆளுநர் மாளிகை, ராஜா அண்ணாமலைபுரம் கிரீன்வேஸ் சாலையில் உள்ள எடப்பாடிகே.பழனிசாமி வீட்டில் வெடிகுண்டுவைக்கப்பட்டுள்ளதாகவும், அது சிறிது நேரத்தில் வெடிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதையடுத்து ஆளுநர் மாளிகை மற்றும் எடப்பாடி பழனிசாமி வீட்டில் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள்,மோப்ப நாய்கள் உதவியுடன் சோதனை செய்தனர். பல மணி நேரம் நடைபெற்ற சோதனையில், அங்கிருந்து எந்த வெடிபொருளும் கண்டெடுக்கப்படவில்லை.

வதந்தியை பரப்பும் நோக்கத்துடன் அந்த மின்னஞ்சல் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை செய்கின்றனர்.

# சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்து: இருவர் உயிரிழப்பு



வெடி விபத்தில் இடிந்து தரைமட்டமான கட்டடங்கள். (உள்படம்) வெடி விபத்தில் உயிரிழந்த காளிமுத்து, கௌரி.

**சாத்தூர்/சென்னை, செப். 17:** விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் புதன்கிழமை நிகழ்ந்த வெடி விபத்தில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

சிவகாசியைச் சேர்ந்த மாரிமுத்து (55) என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலை சாத்தூர் அருகேயுள்ள கங்கர்செவல்பட்டியில் இயங்கி வருகிறது. இங்கு 30-க்கும் மேற்பட்ட பட்டாசுகள் தயாரிக்கும் அறைகள் உள்ளன. இந்த ஆலையில் 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தீபாவளி பண்டிகைக்காக பட்டாசுகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆலையில் புதன்கிழமை பிற்பகலில் பேன்சி ரகப் பட்டாசுக்குத் தேவையான மூலப் பொருள் கலவையைத் தயார் செய்து கொண்டிருந்த போது, உராய்வு காரணமாக வெடி விபத்து ஏற்பட்டது. இதில் இரண்டு அறைகள் இடிந்து தரைமட்டமாகின. மூலப் பொருள் கலவை தயாரிப்பில் ஈடுபட்ட கண்டியாபுரம் இலங்கை மறுவாழ்வு முகாமைச் சேர்ந்த கௌரி (50) உடல் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த வெடி விபத்தில் கோமாளிபட்டியைச் சேர்ந்த காளிமுத்து (45), வெம்பக்கோட்டை பகுதியைச் சேர்ந்த மாரியம்மாள் (40), குமரேசன் (30), மணிமேகலை (21), சிவரஞ்சனி (39), ஜெயலட்சுமி (55) ஆகிய 6 பேர் பலத்த காயமடைந்து, சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு காளிமுத்து உயிரிழந்தார்.

இந்த வெடி விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், வெம்பக்கோட்டை தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து, மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

மேலும், இந்த விபத்து குறித்து ஆலங்குளம் போலீஸார் வழக்குப் பதிந்து, பட்டாசு ஆலை மேற்பார்வையாளர் சோமசுந்தரத்திடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**முதல்வர் நிவாரண நிதி:** பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழப்பு செய்தியை அறிந்து மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

காயமடைந்தோருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். உயிரிழந்தோர் குடும்பத்துக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.4 லட்சம், பலத்த காயமடைந்தோருக்கு தலா ரூ.1 லட்சம், லேசான காயமடைந்தோருக்கு தலா ரூ.50,000 வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


## வரி விளம்பரம்

PUBLIC NOTICE
CHANGE OF NAME

**CHANGE OF NAME**

My daughter, **V JERUSHA JOCHEBED,** born on 17th July 2008, (District of Birth : Chennai), residing at No. 226B, 3rd Cross Street, Poombuhar Nagar, Kolathur, Chennai- 600 099, shall henceforth be known as **V JERUSHA JOCHEBETH**

V Victor Ramesh (Father)
Chennai, 1st September 2025

**பெயர் மாற்றம்**

நான், ஜெய ஜுவாலா ரா. த/பெ. திரு. மு. ராமராஜ், பிறந்த தேதி: 25 மே 1992 வசிப்பிடம் பிளாக் எண்.1, பிளாட் எண்.8, ஹோம் பைன்டர்ஸ் எஸ்டேட், வள்ளுவர் சாலை, ராமாபுரம்,திருவள்ளூர், தமிழ்நாடு-600 089 என மேற்கண்ட விலாசத்தில் வசித்து வரும் நான் இனி முதற்கொண்டு ஜெய ஜுவாலா அ.ரா. என்று அழைக்கப்படுவேன்.

ஜெய ஜுவாலா ரா.

**பெயர் மாற்றம்**

எனது மகன், R சாம் விக்டர் (R SAM VICTOR) த/பெ. திரு. ராபர்ட் ஜோசப், பிறந்த தேதி : 22-07-2018 (பிறந்த மாவட்டம் : சென்னை) முகவரி: பழைய எண். 25, புதிய எண். 34, 3ஆவது தளம், பழனியம்மன் கோயில் (தெற்கு), 3ஆவது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005-இல் வசிக்கும் அவன் இனி R சேராபின் சாம் விக்டர் (R SERABIN SAM VICTOR) என அழைக்கப்படுவான்.

ஷீலா மேரி V (தாயார்)
சென்னை, 17.06.2025



தமிழ்நாடு அரசு

**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மாவட்டம்**

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (MGSMT) (Phase III) 2025-26

குறுகிய கால மறு மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.3468/2024/அ8 நாள்: 16.09.2025

குறுகிய கால மறு மின் ஒப்பந்தப்புள்ளி

1 முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.

2 நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்களால் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் MGSMT (Phase III) 2025-26 நாமக்கல் மாவட்டத்தில் எருமப்பட்டி மற்றும் புதுச்சத்திரம் வட்டாரத்தில் ஊரகச் சாலைகளை பலப்படுத்துதல் மற்றும் செப்பனிடுதல் பணிகளுக்கு சிப்பம் எண்-8 மற்றும் 51க்கு குறுகிய கால மறு மின் ஒப்பந்தப்புள்ளி (இரு உறைகள்) மூலம் வரவேற்கப்படுகிறது.

3. குறுகிய கால மறு மின் ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 18.09.2025 முதல் 24.09.2025 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i) குறுகிய கால மறு மின் ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 24.09.2025 - பிற்பகல் 03.00 மணி வரை

ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 24.09.2025 - பிற்பகல் 04.00 மணி முதல்

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்.

செ.ம.தொ.இ/5231/ஒப்பந்தப்புள்ளி/2025



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.13/2025-26/முவஅ/ நாள்: 16.09.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர் அவர்களால், **கோயம்புத்தூர் (நெ) சிறப்பு திட்டங்கள் கோட்டத்தைச் சார்ந்த ஒரு பணிக்கு மட்டும் இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளி 26.09.2025 முற்பகல் 11.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **20.09.2025**-ல் இருந்து https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர்.

செ.ம.தொ.இ/5196/ஒப்பந்தப்புள்ளி/2025



தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில்**

பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

இணைய வழி - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.60 / 2025-26 / நாள் 17.09.2025 ஒப்பந்தவகை : LUMPSUM

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூ.) | முன்வைப்புத் தொகை | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம், அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலில் புதியதாக கட்டப்பட்டு வரும் வரிசை மண்டபத்தில் கிரானைட் இருக்கை வசதிகளுடன் எஸ். எஸ். வரிசை அமைப்பு பணி | ரூ.1,36,54,636/- | ரூ. 78,300/- | 3 மாதங்கள் |

முன் வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டிய விவரம் : இணைய வழியில் மட்டுமே செலுத்த வேண்டும்

முக்கிய நாட்கள் : 1. ... 25.09.2025 முதல் 08.10.2025 பிற்பகல் 05.00 மணி வரை 2. ... 09.10.2025 பிற்பகல் 02.00 மணி வரை 3. ... 09.10.2025 பிற்பகல் 04.00 மணிக்கு முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் https://tntenders.gov.in ல் மட்டுமே வெளியிடப்படும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.

து.ரு.பிரகாஷ், செயல் அலுவலர் — அஞ்சன் லோகமித்ரா, பரம்பரை அறங்காவலர்

செ.ம.தொ.இ / 5217 / ஒப்பந்தப்புள்ளி / 2025



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், திருச்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.31/2025-2026/முவஅ/நாள்:13.09.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் **கண்காணிப்புப்பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி** அவர்களால் **மாநில நிதியின் கீழ் மதுரை (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்** கோட்டத்திற்கான **வேடசந்தூர்-தேவநாயக்கன்பட்டி சாலை கி.மீ.3/6-இல் தாம்போகிக்கு மாற்றாக உயர்மட்ட பாலம் கட்டும் பணிக்கு** இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **07.10.2025 அன்று முற்பகல் 11.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **20.09.2025 முதல்** தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி

செ.ம.தொ.இ/5228/ஒப்பந்தப்புள்ளி/2025



**IDBI BANK** — **ஐடிபிஐ வங்கி லிமிடெட்** எண் 115, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, Post Bag எண்.805, சென்னை 600015. Ph: 044-22202211/22202092, Website: www.idbibank.in

**கோரிக்கை அறிவிப்பு** — 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (SARFAESI சட்டம்)

இத்தகைய சூழலில், இந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்குறித்த தொகையை செலுத்துமாறு ... IDBI வங்கி கேட்டுக்கொள்கிறது.

தேதி : 18.09.2025
இடம் : சென்னை

Sd/- அதிகாரபூர்வ அதிகாரி / ஐடிபிஐ வங்கி லிமிடெட்



**Bank of Baroda** (बैंक ऑफ़ बड़ौदा)

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008. போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

**அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு**

"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி: கடன்தாரரின் பெயர் : Miss.S.சிப்போரல் த/பெ.திரு.சாக்ரியாஸ், கதவு எண்.2/197, 2/273, மனை எண்.31, பத்மலட்சுமி இல்லம், AGS காலனி, 5வது அவென்யூ, முகலிவாக்கம், சென்னை - 600 125, மேலும்: 54A, இந்திரா நகர், மரக்காணம் சாலை, கிடங்கல் கிராமம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் - 604 001. **மொத்த நிலுவை தொகை: 13.09.2025 அன்று வரை ரூ.60,96,514.36** மேலும் **14.09.2025** முதல் பின்வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய அசையா சொத்துக்களின் விவரங்கள் : சுவாதீன நிலை - ஆக்கப்பூர்வ சுவாதீனம்: திண்டிவனம் பதிவு மாவட்டம் மற்றும் திண்டிவனம் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுகா, கிடங்கல் கிராமத்தில் (திண்டிவனம் நகராட்சி எல்லை மற்றும் பாண்டிச்சேரி சாலை மற்றும் மரக்காணம் சாலை சந்திப்பில் உள்ளது) புஞ்சை சர்வே எண்.1/6A 1A-ன் படி மொத்தமுள்ள 0.33 செண்ட் (உட்பிரிவு புதிய சர்வே எண்.1/9) நிலத்தில் 0.07 செண்ட் (3097 சதுர அடி) நிலம் மற்றும் அதனுடன் 1200 சதுர அடி கொண்ட RCC கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும், இதன் மின்சார இணைப்பு எண்கள் : 196 மற்றும் 198 மற்றும் அதன் வைப்பு தொகை, நகராட்சி வீட்டு வரி எண். 043/020/01218 மற்றும் எல்லைகள் : வடக்கில் : பொது வழி, தெற்கில் : நக்ஷத்திரம் அவர்களின் மனை, மேற்கில்: விமல்டா மேரி அவர்களின் வீடு, கிழக்கில் : தெசந்தா அவர்களின் மனை, அளவுகள்: கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 32 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 44 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 69 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 94 அடி. **அட்சரேகை: 12.217933, தீர்க்கரேகை: 79.663910**

**குறைந்த பட்ச விலை : ரூ. 66,76,000/- | முன் வைப்பு தொகை : ரூ. 6,67,600/- | ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-**

இந்த சொத்து வங்கியின் அசல் சுவாதீனத்தில் இல்லை மற்றும் ஏல கொள்முதல்தாரர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

a. சொத்து அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏல கொள்முதல்தாரர் தனது சொந்த முயற்சியிலேயே மற்றும் பொறுப்பில் அடையாளப்பூர்வ சுவாதீன சொத்தை கொள்முதல் செய்ய வேண்டும்.
b. வங்கியானது சொத்தினை அடையாளப்பூர்வ சுவாதீனமாக மட்டுமே ஒப்படைக்கும் மற்றும் ஏல கொள்முதல்தாரர் வங்கியிடமிருந்து அசல் சுவாதீனத்தை கோரமுடியாது.
c. அசல் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது.
d. ஏல கொள்முதல்தாரர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உரிமை கோருவதற்கு உரிமை இல்லை.
e. வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் மின்-ஏலத்திற்கு பிறகு மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (A முதல் D வரை) உறுதிப்படுத்தும் உறுதிமொழி உடன்படிக்கையை உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
f. விற்பனைக்குப் பிறகு, வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் பிரகடனம் மற்றும் ஒப்பந்தத்தை சமர்ப்பிக்கத் தவறினால் ஏல முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 29.10.2025 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |
| சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 18.10.2025 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை |

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் போர்ட்டல் https://baanknet.com. மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 044-28885428 - கைபேசி எண். 99874 78064-ல் தொடர்பு கொள்ளவும்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 16.09.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா



**CUB** — **சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001, மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, ஃபேக்ஸ்: 0435-2431746

2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கம் ஆக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் சொத்துக்கள் அமலாக்க சட்டப்பிரிவு 13(2)-ன் படி 11.08.2025 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட கேட்பு அறிவிப்பு

இடம் : கும்பகோணம், தேதி : 18.09.2025 அதிகாரப்பூர்வ அதிகாரி



தமிழ்நாடு அரசு

**நீர்வளத்துறை**

பவானி வடிநில வட்டம், ஈரோடு -11

மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 11/2025-26/ ப.வடவ/ஈரோடு/நாள். 16.09.2025

தமிழ்நாடு ஆளுநருக்காக அவரது சார்பில் நீர்வளத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் பணிக்கான மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கீழ் கையொப்பம் இட்டவரால் 23.10.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) | முன் வைப்புத் தொகை | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| | மொத்த வகை ஒப்பந்தம் - இனம் வாரி ஒப்பந்தப்புள்ளி (இரு உறை முறை) | | | |
| 1 | ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், காலிங்கராயன் வாய்க்கால் மைல் 12-3-348 முதல் மைல் 15-4.5-195 வரை புதுப்பித்தல் பணி. | ரூ.8103.17 இலட்சம் | ரூ.40,65,000/- | 24 மாதங்கள் |

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தக்காரரின் உரிய பதிவு வகுப்பு | வகுப்பு-IA (ரூ.25.00 கோடிக்கு மேல்) நீ.வ.து - மின் புதிய விதிகள்படி (அ) வகுப்பு - I (ரூ.10.00 கோடி மேல்) நீ.வ.து - மின் பழைய விதிகள்படி |
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட காலம் | 23.09.2025 முற்பகல் 11.00 மணி முதல் 23.10.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் | 23.10.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 4 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படும் நாள் | 24.10.2025 பிற்பகல் 3.30 மணி |
| 5 | ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக, ஒப்பந்தப்புள்ளி அழைப்பு முதல் பணி ஆணை வழங்குதல் வரையிலான அனைத்து ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளும்/செயல்முறைகளும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக மின்னணு முறையிலேயே மேற்கொள்ளப்படும். | |

குறிப்பு : i) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் ஒப்பந்தப்புள்ளியில் செய்யப்படும் திருத்தம் / மாற்றம் தொடர்பாக, திருத்தத்தினை சரிபார்த்து ஒப்பந்தப்புள்ளிகளை பதிவேற்றம் செய்வது ஒப்பந்ததாரின் பொறுப்பாகும். ii) இணைய வழி இணைப்பு கிடைக்காமலும், வலைதள மின்னல் போக்குவரத்து காரணமாகவும், விடுமுறை நாட்கள் மற்றும் இதர காரணங்களாலும் ஒப்பந்தப்புள்ளிகள் பதிவேற்றம் செய்வது கால தாமதமானாலோ அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் பதிவேற்றம் செய்யப்படாமல் போனாலோ, இணையவழியில் முன்வைப்புத் தொகை செலுத்த இயலாமல் போனாலோ ஒப்பந்தப்புள்ளி அதிகார அமைப்பு பொறுப்பேற்காது. iii) ஒப்பந்தப்புள்ளி அதிகார அமைப்பினால் ஒப்பந்தப்புள்ளி எந்தவொரு நிலையிலும் இரத்து செய்யப்படும். iv) ஒப்பந்தப்புள்ளிக்கான முன் வைப்புத் தொகை இணையவழி வழியாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து,
பவானி வடிநில வட்டம், ஈரோடு -11



தமிழ்நாடு அரசு

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலை முறை (இரு உறை முறை)

மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.14/வபி/கோ.114N/2025, நாள்-15.09.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் தலைமைப் பொறியாளர், மீன்பிடி துறைமுக திட்ட வட்டம், சென்னை அவர்களால் இரண்டு பணிகளுக்கு நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறைல் பதிவு செய்துள்ள தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து (மின்னணு முறையில் மட்டுமே) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் **08.10.2025 மாலை 03.00 மணி வரை** இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
2) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி **08.10.2025, மாலை 03.00 மணி வரை** (மின்னணு முறை)
3) ஒப்பந்தப்புள்ளி **09.10.2025 மாலை 03.30 மணியளவில்** திறக்கப்படும் (மின்னணு முறை)

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வேலையின் தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை விவரங்கள், பணிக்காலம் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் மற்றும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் /மாறுதல்கள் ஏதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

தலைமைப் பொறியாளர்,
மீன்பிடி துறைமுக திட்ட வட்டம்,
சென்னை-35

செ.ம.தொ.இ/5188/ஒப்பந்தப்புள்ளி/2025




# நெல்லை ரயில் நிலையத்தில் பயணிகளை கட்டையால் சரமாரியாக தாக்கிய பிகார் இளைஞர்

## ஒருவர் உயிரிழப்பு; இருவர் காயம்

**திருநெல்வேலி, செப். 17:** திருநெல்வேலி ரயில் நிலையத்தில் பயணிகளை, பிகார் மாநில இளைஞர் கட்டையால் சரமாரியாக தாக்கியதில் கோவையைச் சேர்ந்த முதியவர் உயிரிழந்தார். 2 பேர் காயமடைந்தனர். இதுதொடர்பாக பிகார் இளைஞர் கைது செய்யப்பட்டார்.

திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை இரவு பயணிகள் ரயிலுக்காக காத்திருந்தனர். அப்போது, 4-ஆவது நடைமேடைக்கு வந்த வெளிமாநில இளைஞர், அங்கு நின்றிருந்தோரை கட்டையால் தாக்கிவிட்டுத் தப்பினார்.

இதில், தூத்துக்குடி மாவட்டம், வாஞ்சிமணியாச்சியைச் சேர்ந்த கந்தசாமி மகன் பாண்டித்துரை (29), கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த எஸ். தங்கப்பன் (72), கேரள மாநிலம் கண்ணூர் அருகே கடத்தின்கடவு பகுதியைச் சேர்ந்த பிரசாத் (49) ஆகிய 3 பேர் காயமடைந்தனர்.

சந்திப்பு ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் பிரியா மோகன் தலைமையிலான போலீஸார் காயமடைந்தோரை மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்குள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தபோது, இச்சம்பவத்தில் ஈடுபட்டவர் பிகார் மாநிலம், லக்கிஸ்வரா மாவட்டத்தைச் சேர்ந்த ராம்தானி மகன் சூரஜ் (25) என்பதும், தங்கப்பனிடமிருந்து கைப்பேசியைப் பறித்துச் சென்றதும் தெரியவந்தது. அவரை போலீஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தங்கப்பன் புதன்கிழமை அதிகாலை உயிரிழந்தார். இதையடுத்து, சூரஜ் மீது 3 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# 10.5% இட ஒதுக்கீட்டை வென்றெடுப்போம்

## மருத்துவர் ராமதாஸ்

**விழுப்புரம், செப்.17:** வன்னியர்களுக்கான 10.5 சதவீத இட ஒதுக்கீட்டை வென்றெடுப்போம் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் தெரிவித்தார்.

வன்னியர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் தனி இட ஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி வன்னியர் சங்கம் சார்பில் 1987-ஆம் ஆண்டில் நடைபெற்ற போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 21 பேருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஆண்டுதோறும் செப்டம்பர் 17-ஆம் தேதி வன்னியர் சங்கம், பாமக சார்பில் நடைபெறுவது வழக்கம்.

**தனித்தனியே...:** அதன்படி, நிகழாண்டில் 38-ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் தலைமையில் திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்ட வளாகத்திலும், அக்கட்சியின் தலைவர் இரா.அன்புமணி தலைமையில் திண்டிவனத்தில் தனியார் திருமண மண்டபத்திலும் கட்சி நிர்வாகிகள், வன்னியர் சங்கத்தினர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கும், நினைவிடத்திலும் தனித்தனியே புதன்கிழமை மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தைலாபுரம் தோட்ட வளாகத்தில் உள்ள பாமக அரசியல் பயிலரங்கக் கூடத்தில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு ராமதாஸ் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு கட்சியின் சார்பில் உதவிகளை வழங்கினார்.

அப்போது, ராமதாஸ் பேசியதாவது: 1987-இல் நடைபெற்ற வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் தியாகத்தால், இந்த சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பலர் கல்வி, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை பெற்று பயனடைந்து வருகின்றனர். தியாகிகளின் உயிர்த் தியாகம் வீண்போகவில்லை. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பாமக சார்பில் முடிந்த அளவுக்கு உதவிகளை செய்து வருகிறோம்.

ஆனாலும், மக்கள் தொகைக்கு ஏற்ப வன்னியர்களுக்கு 10.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராடி வருகிறோம்.

இந்தப் போராட்டத்தில் நிச்சயமாக வெற்றிபெறுவோம். வன்னியர்களுக்கான தனி இட ஒதுக்கீட்டை வென்றெடுப்போம். பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள் என்றார்.

நிகழ்ச்சியில் பாமக கௌரவத் தலைவர் ஜி.கே.மணி, அரசியல் ஆலோசனைக் குழுத் தலைவர் தீரன், நிர்வாகக் குழு உறுப்பினர் ஸ்ரீகாந்தி, வன்னியர் சங்கத் தலைவர் பு.தா.அருள்மொழி, தலைமை நிலையச் செயலர் அன்பழகன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்ட வளாகத்தில் உள்ள அரசியல் பயிலரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ். (வலது) திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பாமக தலைவர் அன்புமணி.

# டிச.17-இல் சிறை நிரப்பும் போராட்டம்: அன்புமணி

**சென்னை, செப்.17:** வன்னியர் இட ஒதுக்கீடு கோரி டிச.17-இல் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டு 1,267 நாள்களாகும் நிலையில், வன்னியர்களுக்கு சமூகநீதி வழங்க திமுக அரசு எதுவும் செய்யவில்லை.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்த நாள் முதல் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதாக வாக்குறுதி அளித்து வந்த திமுக அரசு, இப்போது ஜாதிவாரி மக்கள் தொகை விவரம் இல்லாததால் தான் இட ஒதுக்கீடு வழங்க முடியவில்லை என்று கூறுகிறது.

எனவே, வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க மறுக்கும் திமுக அரசைக் கண்டித்தும், வன்னியர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று வலியுறுத்தியும் வருகிற டிச.17-ஆம் தேதி காலை 11 மணிக்கு பாமக அமைப்பு ரீதியிலான அனைத்து மாவட்டங்களிலும் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார் அன்புமணி.

# செங்கோட்டை சிறப்பு ரயிலுக்கு கூடுதல் நிறுத்தங்கள்

**சென்னை, செப்.17:** சென்னை-செங்கோட்டை இடையே இயக்கப்படும் வாராந்திர சிறப்பு ரயில், கூடுதலாக 3 நிறுத்தங்களில் நின்று செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை சென்ட்ரல் - செங்கோட்டை சிறப்பு ரயில் (எண் 06121) செப்.24-ஆம் தேதி முதல், செங்கோட்டை - சென்னை சென்ட்ரல் சிறப்பு ரயில் (எண் 06122) செப்.25-ஆம் தேதி முதல் சேரன்மகாதேவி, கீழக் கடையம், பாவூர்சத்திரம் ரயில் நிலையங்களில் 2 நிமிஷங்கள் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் விஷ வாயு தாக்கி மூவர் உயிரிழப்பு

**தூத்துக்குடி, செப். 17:** தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் மிதவைக் கலனின் தொட்டியை சுத்தப்படுத்தியபோது விஷ வாயு தாக்கியதில் மூவர் புதன்கிழமை உயிரிழந்தனர்.

தூத்துக்குடி பழைய துறைமுகத்திலிருந்து 'பார்ஜர்கள்' எனப்படும் ராட்சத இரும்பு மிதவைக் கலன்கள் மூலம் மாலத்தீவுக்கு கருங்கல், ஜல்லிக் கற்கள், கட்டுமானப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்தக் கலன்களின் கீழ்பகுதியில் உள்ள தொட்டிகள் அவ்வப்போது திறந்து சுத்தப்படுத்தப்படும்.

இந்நிலையில், மாலத்தீவில் கருங்கற்களை இறக்கிவிட்டு தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்த ஒரு ஷிப்பிங் நிறுவனத்தின் மிதவைக் கலனை சுத்தப்படுத்தும் பணியில் ஊழியர்கள் புதன்கிழமை ஈடுபட்டனர். திருநெல்வேலி மாவட்டம் உவரியைச் சேர்ந்த தொழிலாளி சிரோன்ஜார்ஜ் (32) மிதவைக் கலனின் கீழ்பகுதியில் உள்ள தொட்டிக்குள் இறங்கினார்.

அவரைத் தொடர்ந்து ராஜஸ்தான் மாநிலத் தொழிலாளி சந்தீப்குமார் (27), தூத்துக்குடி மாவட்டம் புன்னைக்காயலைச் சேர்ந்த ஜெனிஸ்டன் தாமஸ் (35) ஆகியோரும் சென்றனர்.

வெகுநேரமாகியும் மூவரும் வெளியேவரவில்லை. இதனால் சந்தேகமடைந்த சக தொழிலாளர்கள் காவல் துறைக்கும், தீயணைப்புத் துறைக்கும் தகவல் தெரிவித்தனர்.

மாவட்ட தீயணைப்பு அலுவலர் கணேசன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள், மத்திய பாகம் போலீஸார், மரைன் போலீஸார் சென்று தொட்டியின் மூடியை வெல்டிங் இயந்திரம் மூலம் அகற்றினர். பின்னர், தொட்டிக்குள் இறங்கி ஒரு மணி நேரத் தேடலுக்குப் பிறகு, மூவரையும் சடலங்களாக மீட்டனர். அதையடுத்து, சடலங்கள் கூறாய்வுக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

டவுன் கூடுதல் எஸ்.பி. மதன், மத்திய பாகம் காவல் ஆய்வாளர் பாஸ்கர், மரைன் காவல் ஆய்வாளர் பேச்சிமுத்து, போலீஸார் சென்று விசாரணை நடத்தினர். மிதவைக் கலனின் தொட்டி நீண்ட நாள்களாக மூடியிருந்ததால் விஷ வாயு தாக்கியதில் 3 தொழிலாளர்களும் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.


Bank of India
Relationship beyond banking

சென்னை மண்டல அலுவலகம்,
# 30/17, எர்ரபாலு தெரு, ஜார்ஜ் டவுன்,
சென்னை - 600 001. Ph: +91-044-66777500

**லாக்கரை உடைத்து திறக்கும் அறிவிப்பு**

இது, சென்னை மண்டல அலுவலகத்தின் கீழ் உள்ள பேங்க் ஆஃப் இந்தியாவின் பின்வரும் கிளைகளில் வாடகைக்கு லாக்கர்களை எடுத்து ஒப்பந்தத்தை மீறிய எங்கள் வாடகைதாரர்களுக்கான அறிவிப்பு. ரிசர்வ் வங்கி / வங்கியின் வழிகாட்டுதல்களின் படி வாடகைதாரர்களுக்கு அவர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிகளில் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் வாங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. லாக்கர் வைத்திருப்பவர்களை அவர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிகளில் நேரில் தொடர்பு கொள்ள முயற்சித்தாலும் அவர்கள் தற்போது இருக்கும் இடத்தைக் கண்டறிய முடியவில்லை. வேறு வழியின்றி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நபர்களும் கிளைத் தொடர்பு கொள்வதற்கும் மற்றும் 7 நாட்களுக்குள் வங்கியின் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கும் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. செலுத்த தவறும் பட்சத்தில் வாடிக்கையாளர்களின் செலவு, ஆபத்து மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வங்கி லாக்கரைத் திறக்கும்.

| வ. எண். | தனி அடையாள எண். & வங்கி கிளை | நிலுவைத் தொகையை செலுத்தாத வாடிக்கையாளரின் பெயர் | லாக்கர் எண் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | 8020 & திருவல்லிக்கேணி | வீரபாலன் K. | 000139 | ரூ.12,000/- |
| 2. | 8020 & திருவல்லிக்கேணி | வீரமணிகண்டன் P. | 000058 | ரூ.6000/- |
| 3. | 8020 & திருவல்லிக்கேணி | இளங்கோவன் R. | 000060 | ரூ.4500/- |
| 4. | 8000 & சென்னை | குலாம்அலி ரியாஸ் அலி | 000126 | ரூ.10,000/- |
| 5. | 8000 & சென்னை | வெங்கடேசன் K R & ஜெயந்தி T S | 000536 | ரூ.32,500/- |
| 6. | 8000 & சென்னை | ஓட்மல் B | 000623 | ரூ.7500/- |
| 7. | 8000 & சென்னை | தாஹிர் S.ஹரிகசன் | 000626 | ரூ.7500/- |
| 8. | 8000 & சென்னை | முஸ்தபா & தூரியா முஸ்தபா | 000696 | ரூ.15,000/- |
| 9. | 8000 & சென்னை | ஸ்ரீனிவாசலு N & சாவித்திரி N S | 000704 | ரூ.15,000/- |
| 10. | 8009 & எழும்பூர் | தக்கீன் பகி | 001019 | ரூ.8000/- |
| 11. | 8009 & எழும்பூர் | ராகுல் பமீன் மாப்பிள்ளை | 001066 | ரூ.12,000/- |
| 12. | 8009 & எழும்பூர் | சாகுல் ஹமீது O T S A | 001072 | ரூ.12,000/- |
| 13. | 8009 & எழும்பூர் | உமா மகேஸ்வரி S M | 001054 | ரூ.12,000/- |
| 14. | 8009 & எழும்பூர் | டேனிட் சுசில்குமார் சாமுவேல் | 003012 | ரூ.11,200/- |
| 15. | 8009 & எழும்பூர் | ஆனந்த ராஜா | 004005 | ரூ.9000/- |
| 16. | 8019 & உஸ்மான் ரோடு | அன்புமுகன் T | 000350 | ரூ.20,000/- |

தேதி:18.09.2025
இடம்: சென்னை

ஒப்பம்/- அதிகாரபூர்வ அலுவலர்
பேங்க் ஆஃப் இந்தியா



**இந்துஜா லேலண்ட் ஃபைனான்ஸ் லிமிடெட்**
பெருநிறுவன அலுவலகம்: எண்.27/A, டெவலப்டு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: எண்.480, 7வது தளம், கிர்ராஜ் காம்ப்ளக்ஸ் - 2, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600 035
CIN: U65993MH2008PLC384221.

**உரிமை அமலாக்கச்சட்டம், 2002, விதிகள் 8(5) மற்றும் 9(1)-ன் கீழ் கடன்தாரர்களின் அசையாச் சொத்துக்கள் விற்பனை அறிவிப்பு**

[illegible]

| கடன்தாரர் மற்றும் இணை கடன்தாரர்பெயர் மற்றும் முகவரி | கட்டவேண்டிய தொகை | பதிவிரக்கான பார்வையிடுதற்கான இடம் |
|---|---|---|
| 1. திரு.P.V.சுப்ரமணி - கடன்தாரர், 2. திருமதி.சாவித்திரி சுப்ரமணி - இணை-கடன்தாரர், 3. திரு.S.கௌசிக் - இணை கடன்தாரர் ... [illegible] | 09.09.2025 அன்று வரை ரூ.12,75,74,305/- ... [illegible] | M/s. இந்துஜா லேலண்ட் பைனான்ஸ் லிமிடெட், எண்.480, 7வது தளம், கிர்ராஜ் காம்ப்ளக்ஸ்-2, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600 035 |

விலைப்புள்ளிகள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்: 30.10.2025 அன்று காலை 11.00 மணிக்கு

ஒப்பந்த எண். TNCHCHC00073

குறைந்தபட்ச விலை: ரூ.2,00,00,000/- (ஒவ்வொரு சொத்திற்கும் ரூ.1,00,00,000/-)

முன்வைப்பு தொகை (10%): ரூ.10,00,000/- ஒவ்வொரு சொத்திற்கும்

**ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

[illegible]

www.hindujaleylandfinance.com

நாள் : 17.09.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்துஜா லேலண்ட் பைனான்ஸ் லிமிடெட்



பஞ்சாப் நேஷனல் வங்கி
...the name you can BANK upon!

ARMB, PNB டவர், தரை தளம்,
எண். 46-49, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Ph: 9789922002, 9392387502,
E-mail: cs3612@pnb.co.in;

**அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**அசையா சொத்துக்களின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**
**17.10.2025 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை**

[illegible]

வ.எண். 1: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்:
கிளை: ஆவடி - 298000 (தற்போது ARMB சென்னை-இல் இணைக்கப்பட்டுள்ளது) Cus Id :EKP004567, கணக்கு எண்.298000NC00034539 - C. V. விஜய் ... [illegible]

வ.எண். 4: கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், கிளையின் பெயர் மற்றும் கணக்கு எண்:
கிளை: புரசைவாக்கம் (251100) (தற்போது ARMB சென்னை-இல் இணைக்கப்பட்டுள்ளது) நித்தியா பிரசாந்த் - Cus id : DS0017529, கணக்கு எண்.251100NC00129448 - திருமதி.நித்தியா பிரசாந்த் க/பெ. திரு.S.பிரசாந்த், கதவு எண்.1, புதிய எண்.1, கிருஷ்ணா அப்பார்ட்மென்ட், பழைய கதவு எண்.2A, வாரன் சாலை, பக்தவத்சலம் சாலை மயிலாப்பூர், சென்னை-600004. S.பிரஷாந்த், கதவு எண்.1, புதிய எண்.1, கிருஷ்ணா அபார்ட்மென்ட்ஸ், பழைய கதவு எண்.2A, வாரன் சாலை, பக்தவச்சலம் சாலை, மயிலாப்பூர்- சென்னை -600004 சொத்து ID- PUNB36120134.

[illegible]

SARFAESI சட்டம் 2002 விதி 8 & 9 ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு

தேதி : 17.09.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி

# 2002, 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் அடிப்படையில் தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தம்

## தேர்தல் துறை முடிவு

**சென்னை, செப். 17:** தமிழகத்தில் 2002, 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல்களின் அடிப்படையில் சிறப்பு தீவிர திருத்தப் பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிகாரைப் போன்று நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப் பணியை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் இந்தப் பணிக்காக, 2002-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சிறப்பு தீவிர திருத்தத்தின் அடிப்படையிலான வாக்காளர் பட்டியல் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

2002-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பட்டியலில் பலருடைய பெயர்கள் விடுபட்டதாகப் புகார்கள் எழுந்தன. குறிப்பாக, பெருநகரப் பகுதிகளில் வாக்காளர்கள் தங்களுடைய விவரங்களை அளிப்பதற்கான கால அவகாசம் சரியாக வழங்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன. இதையடுத்து, பெருநகரங்களில் உள்ள சட்டப்பேரவைத் தொகுதிகளில் மீண்டும் சிறப்பு தீவிர திருத்தப் பணியை இந்திய தேர்தல் ஆணையம் 2005-ஆம் ஆண்டு மேற்கொண்டது.

முக்கியமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், தருமபுரி, சேலம், கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 37 தொகுதிகளில் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பணியை அடிப்படையாகக் கொண்டு, 2005-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

**கணக்கில் எடுக்க முடிவு:** தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணியை மேற்கொள்வதற்கான அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பூர்வாங்கப் பணிகளை தேர்தல் துறை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது.

2002-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு சிறப்பு தீவிர திருத்தப் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தாலும், தமிழகத்தைப் பொருத்தவரை 2005-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மறு சிறப்பு தீவிர திருத்தப் பணி அடிப்படையிலான வாக்காளர் பட்டியலையும் கணக்கில் எடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், இரண்டு வகையான வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட இருப்பதாக தமிழக தேர்தல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சுதந்திரப் போராட்ட வீராங்கனை வேலுநாச்சியார் சிலை நாளை திறப்பு

**சென்னை, செப். 17:** சென்னையில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வேலுநாச்சியாரின் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (செப்.19) திறந்து வைக்கிறார்.

இது குறித்து தமிழக அரசு சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

சுதந்திரப் போராட்ட வீராங்கனையாகத் திகழ்ந்த வேலுநாச்சியாரின் வீரத்தை வருங்கால தலைமுறையினர் அறிந்து போற்றும் வகையில், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் சிலை நிறுவப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், ரூ.50 லட்சத்தில் புதிதாக சிலை நிறுவும் பணியை செய்தி மக்கள் தொடர்புத் துறை மேற்கொண்டது.

தற்போது பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, திறப்பு விழாவுக்காக சிலை தயாராக உள்ளது. இதை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கிறார்.

இந்த நிகழ்வில், அமைச்சர்கள், மேயர், எம்.பி.-க்கள், எம்எல்ஏ-க்கள் உள்பட பலர் பங்கேற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் பவுனுக்கு ரூ.80 குறைவு

**சென்னை, செப்.17:** சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.80 குறைந்து விற்பனையானது.

சென்னையில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில், இந்த வாரம் தொடக்கம் முதலே சற்று ஏற்ற, இறக்கமாக இருந்து வருகிறது. கடந்த செப்.15-இல் தங்கம் விலை பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.81,680-க்கு விற்பனையான நிலையில், செப்.16-இல் பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.82,240-க்கு விற்பனையாகி புதிய உச்சத்தை தொட்டது. தொடர்ந்து புதன்கிழமை தங்கம் விலை மீண்டும் சற்று சரிந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு ரூ.10 குறைந்து ரூ.10,270-க்கும், பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.82,160-க்கும் விற்பனையானது.

அதேபோல் வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.2 குறைந்து ரூ.142-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1.42 லட்சத்துக்கும் விற்பனையானது.

# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு பாரத ரத்னா: அமித் ஷாவிடம் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை

**சென்னை, செப்.17:** சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம், அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி கோரிக்கை விடுத்தார்.

தில்லிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற எடப்பாடி பழனிசாமி, அங்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். பின்னர் உள்துறை அமைச்சர் அமித் ஷா சந்தித்துப் பேசினார்.

இதுதொடர்பாக எடப்பாடி பழனிசாமி, 'எக்ஸ்' தளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவு:

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை, அதிமுக தலைமை நிர்வாகிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு சந்தித்தேன். அப்போது, தேச விடுதலைக்காகப் பாடுபட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு, இந்தியத் திருநாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா வழங்க வேண்டும் என கடிதம் அளிக்கப்பட்டது என அதில் அப் பதிவில் குறிப்பிட்டுள்ளார் எடப்பாடி பழனிசாமி.

# ஆகாஷ் பாஸ்கரன் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அபராதம்: அமலாக்கத் துறை மேல்முறையீடு

**சென்னை, செப். 17:** ஆகாஷ் பாஸ்கரன் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை தகவல் தெரிவித்துள்ளது.

டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக திரைப்படத் தயாரிப்பாளரான ஆகாஷ் பாஸ்கரன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதில், பல்வேறு ஆவணங்களைக் கைப்பற்றினர். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், ஆகாஷ் பாஸ்கரனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களைத் திரும்ப ஒப்படைக்க அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்டது. மேலும், இந்த வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என்று இடைக்காலத் தடை விதித்திருந்தது.

ஆனால், இந்த உத்தரவை மீறி விசாரணைக்கு நேரில் ஆஜராக ஆகாஷ் பாஸ்கரனுக்கு அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியது. இதை எதிர்த்து அவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு, அமலாக்கத் துறை உதவி இயக்குநர் விகாஸ் குமாரை நேரில் ஆஜராக உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, எஸ்.செளந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜு மற்றும் சிறப்பு வழக்குரைஞர் எம்.ரமேஷ் ஆகியோர் இந்த வழக்கில் அமலாக்கத் துறைக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என்று கூறினர்.

அப்போது, ஆகாஷ் பாஸ்கரன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் விஜய் நாராயண், இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு முன்பாக விசாரணைக்குப் பட்டியலிட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கை சம்பந்தப்பட்ட இரு நீதிபதிகள் அமர்வுக்கு பட்டியலிட தலைமை நீதிபதிக்கு பரிந்துரைத்தனர்.

# தவாக நிர்வாகி வெட்டிக் கொலை

**ஒசூர், செப்.17:** கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகே தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிர்வாகி புதன்கிழமை வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

ஒசூரை அடுத்த சொங்கோடசிங்கனள்ளியைச் சேர்ந்த ரவிசங்கர் (35), பன்றி வளர்க்கும் தொழில் செய்து வருகிறார். இவர் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கெலமங்கலம் கிழக்கு ஒன்றியப் பொருளாளராக இருந்தார்.

இந்த நிலையில், ராயக்கோட்டை அருகே உள்ள அஞ்சாளம் கிராமத்துச் சென்ற ரவிசங்கரை மர்மநபர்கள் இருவர் விரட்டி சென்று அரிவாளால் வெட்டிவிட்டு தப்பியோடினர். காயங்களுடன் கீழே விழுந்த ரவிசங்கரை அப்பகுதியினர் மீட்டு ஆம்புலன்ஸில் ராயகோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

அங்கு, அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வழியிலேயே ரவிசங்கர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து சூளகிரி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தொழில்போட்டி காரணமாக ரவிசங்கர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# பதுக்கிய நாட்டு வெடிகள் வெடித்ததில் 4 பேர் காயம்

**ஒசூர், செப்.17:** ஒசூர் அருகே கொட்டகையில் பதுக்கிவைத்திருந்த நாட்டுவெடி வெடித்ததில் தம்பதி உள்பட 4 பேர் காயமடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரை அடுத்த உத்தனப்பள்ளி, தேவசானப்பள்ளியைச் சேர்ந்தவர் பெரியசாமி (40). இவரது சகோதரர் மகன் சரண் (13) புதன்கிழமை மாட்டுக்கொட்டகை அருகே இறைச்சியை தீயில் சுட்டுக் கொண்டிருந்தார். அப்போது, கொட்டையில் இருந்த நாட்டு வெடி மீது தீப்பொறி விழுந்ததால் தீ விபத்து ஏற்பட்டது.

இதில் மாட்டுக்கொட்டகை சேதமடைந்ததோடு அங்கிருந்த பெரியசாமி, அவரது மனைவி புஷ்பா (36), சரண் (13) மற்றும் பெரியசாமியின் உறவினர் ஹரிஷ் (30) ஆகிய நால்வரும் காயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் ஒசூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுகுறித்து வழக்குப் பதிந்த உத்தனப்பள்ளி போலீஸார் மாட்டுக்கொட்டகையில் நாட்டுவெடி வைத்திருந்தது குறித்து விசாரித்து வருகின்றனர்.


சென்னை, கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் - II, அவர்கள் முன்னிலையில்
(6வதுதளம், கூடுதல் அலுவலகக் கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, சென்னை-600 006)
**O.A. எண். 899/2024**
**யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சொத்து மீட்பு கிளை,**
எண். 09, எல்காண்சோ கட்டிடம், காசா மேஜர் சாலை, எழும்பூர், சென்னை-08. : விண்ணப்பதாரர்
எதிர்
1. M/s. Immunogene Healthcare Pvt. Ltd.,
2. Dr. முத்து ராமசாமி
3. திருமதி. ராதா முத்து : பிரதிவாதிகள்
பெறுநர்,
1. M/s. Immunogene Healthcare Pvt. Ltd., எண்:95, T T K சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018.
2. Dr. முத்து ராமசாமி, ஃபிளாட் E3, AR REGALIA, எண்.171/84, 2 வது தளம், G P லேன், G P சாலை, அண்ணாசாலை, சென்னை – 600 002.
3. திருமதி. ராதா முத்து, ஃபிளாட் E3, AR REGALIA, எண்.171/84, 2 வது தளம், G P லேன், G P சாலை, அண்ணாசாலை, சென்னை – 600 002. :பிரதிவாதிகள்
இதன் மூலம் ரூ.29,96,025.18 அதனுடன் வட்டி மற்றும் இதர கட்டணங்களை வசூலிக்கும் பொருட்டு மற்றும் பிணைச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காகவும் மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் வங்கி மேற்குறிப்பிட்ட OA தாக்கல் செய்துள்ளார்கள். மேற்குறிப்பிட்ட OA 30.09.2025 அன்று காலை 11.30 மணிக்கு தாங்கள் ஆஜராவதற்காக இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மேற்குறிப்பிட்ட தேதியில் காலை 11.30 மணிக்கு ஆஜராகி ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் தெரிவிக்கவும், தவறினால் இந்த விஷயம் தாங்கள் இல்லாமலேயே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.
**R.கௌதம நாராயணன்,**
விண்ணப்பதாரர் வங்கியின் வழக்கறிஞர்.



**கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் - III**
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.
TRC எண்.935/2023 **மின்-ஏல விற்பனை** தேதி: 16.09.2025
OA எண்.299/2016 இன் யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, SAMV சென்டர் சென்னைக்கு செலுத்த வேண்டிய 30.06.2025 அன்றுள்ளபடி ரூ.90,64,73,868/- (ரூபாய் தொண்ணூறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று அறுபத்து எட்டு மட்டும்) & O.A.எண்.69/2011 இன் DRC எண்.509/2017 இன் TRC எண்.2198/2023, பேங்க் ஆஃப் இந்தியா, ARB கிளைக்கு 31.08.2023 அன்றுள்ளபடி நிலுவையில் உள்ள தொகையான ரூ.122,71,47,415.41 (ரூபாய் நூற்று இருபத்து இரண்டு கோடியே எழுபத்து ஓர் இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நானூற்று பதினைந்து மற்றும் பைசா நாற்பத்து ஒன்று மட்டும்) M/s.Helios & Matheson Information Technology Ltd & 5 பிறநபர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கீழே குறிப்பிட்ட சொத்துக்கள் இணையவழி வாயிலாக மின்-ஏல விற்பனை https://www.bankeauctions.com மூலம் விற்கப்பட உள்ளன.
**சொத்தின் விவரங்கள்:**
அட்டவணை-A: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தி.நகர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சர்வே எண்கள்.122/1, 122/2 (பகுதி) மற்றும் T.சர்வே எண்.6550, பிளாக் எண்.141 இல் அடங்கிய சென்னை-600 017, தியாகராயர் நகர், தெற்கு போக் சாலை, மனை எண்.5, ADWAVE Towers, கதவு எண்.9 புதிய எண்.17 (பழைய கதவு எண்.4) இல் அமைந்துள்ள 5கிரவுண்டு 2360ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: மாம்பலத்தின் சர்வே எண்.122/1 மற்றும் 122/2 (பகுதி) T. சர்வே எண்.6549, இன் மனை எண்.4; தெற்கில்: மாம்பலத்தின் சர்வே எண்.122/2 (பகுதி), T.சர்வே எண்.6551 இன் மனை எண்.6; கிழக்கில்: மாம்பலத்தின் சர்வே எண்.122/1 மற்றும் 122/2 (பகுதி), T.சர்வே எண். 6575, 6574 மற்றும் 6576 இன் மனை எண்.30; மேற்கில்: தியாகராயர் நகர், போக் சாலை; நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்: 205அடி, கிழக்கு மேற்காக தென் புறம்: 205அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 70அடி, வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 70அடி. அட்டவணை - B: 2240 சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட 1650 சதுர அடி தரைப்பரப்பில் தரை தளத்தில் உள்ள ஃப்ளாட் எண்.96/1. அட்டவணை A சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 510 ச.அடி நிலம்.
நிர்ணய விலை: ரூ.1,90,00,000/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூறு இலட்சம் மட்டும்)

| | |
|---|---|
| மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் | 24-10-2025, காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை |
| டேவணித்தொகை | நிர்ணய விலையில் 10 % |
| ஏல உயர்வு தொகை | குறைந்தபட்சம் ரூ.5,00,000/- |
| சொத்து பார்வையிடுதல் | 03-10-2025 |

டேவணித் தொகை கைப்பு மூலம் டேவணித் தொகையுடன் ஏல படிவத்தை சமர்ப்பிக்கும் கடைசி தேதி: "The Recovery Officer, DRT-3, Chennai" ... 1633... IOBA0000109 ... FT/NEFT/RTGS ... 22-10-2025
https://www.bankeauctions.com என்ற இணையதளத்தில் பெறலாம் மற்றும் சேவை முகவரான திரு.M.பிரபாகரன்-7418281709 அவர்களை தொடர்பு கொள்ளலாம்.
மேலும் சொத்துக்கள் பற்றிய ஏதேனும் விவரங்களுக்கு: யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, ARB கிளை, சென்னை, எண்.168, லிங்கிசெட்டி தெரு, சென்னை 600 001. தொடர்பு கொள்ளும் Ms.D.திபா தேவி, முதன்மை மேலாளர், யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, (கைபேசி: 8056159406) மின்னஞ்சல்: ubin0817309@unionbankofindia.bank தொடர்பு கொள்ளலாம்.
(P.பிரேம்குமார்)
மீட்பு அதிகாரி



**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
மண்டல அலுவலகம்-சென்னை-I
அலெக்ஸ் பில்டிங், 3வது தளம், 763, அண்ணாசாலை, சென்னை - 600 002.
**அசையா சொத்துக்களின் இ - ஏல விற்பனை அறிவிப்பு**
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரரிடமிருந்து வரவேண்டிய கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகையினை வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கியிடம் பிணையப்படுத்தப்பட்ட / அடு வைக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான சுவாதீனம் செய்து கொண்ட கீழ்கண்ட அசையாச் சொத்துக்களை 10.10.2025 தேதியன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துகிறது. இந்த சொத்துகள் "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" விற்கப்படும். குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித்தொகை விவரம் பின்வருமாறு:-
**கில் நகர் கிளை: வீட்டு எண்.14/40, காமராஜ் நகர், 4வது தெரு, குளமேடு, சென்னை - 600 094. Ph : 044-2361 0333 E-mail : iob2319@iob.in**
வ.எண்.1: கடன்தாரர்கள் / அடமானதாரர்கள்: Mr.P.ராமராஜ், S/o.பிச்சைக்கனி & Mrs.R.பகவதி, W/o.Mr.P.ராமராஜ், வீட்டு எண். 20/2, திரு நகர், 1வது தெரு, வடபழனி, சென்னை-600026; கடன் நிலுவைத்தொகை: 31.08.2025 அன்றுள்ளபடி ₹ 59,69,978.26 (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து எட்டு மற்றும் பைசா இருபத்து ஆறு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள்.
**அசையா சொத்து விவரம்**
புலம் எண்.19, பிளாக் எண்.1, T.S.எண்.34/22 & 35/14 (பட்டா C.A.No.396/99-2000 – பிளாக் எண்.1, T.S.எண்.34/22 – பரப்பு 1185 சதுர அடி மற்றும் பிளாக் எண்.1, T.S.எண்.35/14 – பரப்பு 1215 சதுர அடி) புலியூர் கிராமம், எழும்பூர் தாலுகா, சென்னை ...
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 37,00,000/- | டேவணித்தொகை ₹ 3,70,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-
மேற்கண்ட தொகையைச் செலுத்த வேண்டிய கிளை: ... எஸ்பிளனேடு கிளை ... சென்னை-600 018 Ph : 044 - 2534 0917 Email Id: iob0048@iob.in
வ.எண்.2: கடன்தாரர்: 1.M/s.Ignatius Steel Private Limited ...
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,08,30,000/- | டேவணித்தொகை ₹ 10,83,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 2,00,000/-
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,26,35,000/- | டேவணித்தொகை ₹ 12,63,500/- | ஏல உயர்வுத்தொகை ₹ 2,00,000/-
இ-ஏலம் நடைபெறும் தேதி & நேரம்
10.10.2025 காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை
https://baanknet.com
HELP DESK: Mr.V R Hemanth Kumar - Mob: 81081 87929 & Mr.Jagadeeshwaran Mob: 73583 63464
விவரமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, சேவை வழங்குனர் இணையதளமான https://baanknet.com பார்க்கவும்
இடம்: சென்னை, தேதி: 16.09.2025 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி



**பாங்க் ஆஃப் பரோடா / Bank of Baroda**
**ராங்கராஜபுரம் கிளை**
எண்.25, 1வது தெரு, நாகார்ஜுனா நகர், ராங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை-600024.
போன் : 044 -24802070
**சுவாதீன அறிவிப்பு**
கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12) வது பிரிவின் கீழ் ... கடன்தாரர் M/s. பிரேம்ஸ் & டேல்ஸ் ஸ்டுடியோ அதன் பிரதிநிதியாக உரிமையாளர் திரு. M. உதயகுமார், ... எண்.1004, 16வது குறுக்குத் தெரு, G பிளாக், அண்ணாநகர் மேற்கு, சென்னை-600040 மற்றும் திரு. M. உதயகுமார் ... M/s. பிரேம்ஸ் & டேல்ஸ் ஸ்டுடியோ R/o எண்.43, 2வது பிரதான சாலை, ... சென்னை-600049 அவர்கள் 04.12.2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 18,47,217.64 (ரூபாய் பதினெட்டு லட்சத்து நாற்பத்தேழாயிரத்து இருநூற்று பதினேழு மற்றும் அறுபத்து நான்கு காசுகள் மட்டும்) மேலும் 01.12.2024 தேதி முதல் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி ...
இடம் : சென்னை, தேதி : 15.09.2025 அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் பாங்க் ஆஃப் பரோடா



**அடையாள சுவாதீன அறிவிப்பு**
**ICICI Bank**
கிளை அலுவலகம்: ICICI வங்கி லிமிடெட், பிளாட் எண்-23, ஷால் டவர், 3ஆவது தளம், புதிய ரோஹ்தக் சாலை, கரோல் பாக், புது தில்லி-110005
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI பேங்க்-இன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டப் பிரிவு 13(12)-ன் கீழும், அதனுடன் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகளில் விதி 3-இன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாள்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரினார்.
ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதனுடன் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் (Symbolic Possession) எடுத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI பேங்க் லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

| வ. எண். | கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண் | சொத்து விவரம் / அடையாள சுவாதீன தேதி | கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின்படி தொகை (ரூ.) | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | ஷக்யா அகமது/சோபியா அகமது/ முகமது ஹைத் பின் ஷமீம்/ LBKAN00005327218 (LBKAN00005332453) | ஃபிளாட் எண். 301, 3வது தளம், ஹாப்பிடேட் அபார்ட்மெண்ட் பிளாட் எண். 7/107, அமைவிடம்: ஸ்வரூப் நகர், கான்பூர், உத்தரபிரதேசம்-208002 / 12.09.25 | 04/06/2025 ரூ.1,46,65,418.93/- | கான்பூர்/ சென்னை |

எனவே, மேற்சொன்ன கடன்தாரர்(களுக்கும்) / ஜாமீன்தாரர்(களுக்கும்) மேற்படி கடன் பாக்கியை செலுத்துமாறு 30 நாள் அறிவிப்பு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. செலுத்தத் தவறினால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 & 9-ன் கீழான ஷரத்துகள்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாள்கள் முடிந்த பின் மேற்படி அடமான சொத்துகள் விற்கப்படும்.
தேதி: 18-09-2025 உண்மையுள்ள அதிகாரபூர்வ அலுவலர்
இடம்: சென்னை ICICI வங்கி லிட்-க்காக



**TAMIL NADU VETERINARY AND ANIMAL SCIENCES UNIVERSITY**
**'e'- TENDER NOTICE**
(Two cover system)
'e'- Tender Notice No.11/E.O/DB/Tender/2025-2026, dt : 12.09.2025
For and on behalf of the Vice-Chancellor, Tamil Nadu Veterinary and Animal Sciences University 'e'- tenders are invited by the Estate Officer, Tamil Nadu Veterinary and Animal Sciences University Madhavaram Milk Colony, Chennai-51 online for item vice rate bids are invited from the eligible contractors for the following work.

| Sl. No | Description of work | Approximate value of work (including GST) | Eligibility class of Registered contractor | EMD (Rs) (including GST) | Opening of tenders Cover – I (PQ) | Form of contract | Starting and End date for downloading and uploading tender | Period of completion |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | Creation of facilities in Madhavaram Campus such as Construction of Boys & Girls Hostel, Residential Blocks 'A', 'B' & 'C', Evaluation Hall and Modern Piggery shed at Madhavaram Milk Colony, Chennai-51. | Rs. 28.66 Crores | Class – IA (State level) | 14,54,000/- | 22.10.2025 at 11.00 AM | LS | 22.09.2025 10.00 AM to 21.10.2025 at 10.00 AM | Eighteen months including Monsoon |

Starting and End date for downloading and uploading tender : From 22.09.2025 - 10:00 A.M. to 21.10.2025 - 10:00 A.M.
Last date for submission of bid : 21.10.2025 upto 10.00 A.M.
Opening of Tender : 22.10.2025 at 11:00 A.M.
Tender notice and Tender documents will be available only from the website i.e. http://tntenders.gov.in
Subsequent corrigendum / addendum if any shall only be available in website indicated above.
DIPR/ 5115 /TENDER/2025
ESTATE OFFICER, TANUVAS., CHENNAI-51



**கனரா வங்கி**
**தாம்பரம் சேலையூர் கிளை**
#63, அகரம் சாலை, இந்திரா நகர், சேலையூர், தாம்பரம், சென்னை-600073
தொ.எண்.: 9444305652/22292644
**மின் ஏல விற்பனை அறிவிப்பு**
2002ம் ஆண்டின் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் விதி 8(6)இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துகள் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சீரமைத்தல் மற்றும் பிணை வட்டி அமலாக்க சட்டம் 2002 விதி 8 (6) ன் கீழ் கனரா வங்கியின் தாம்பரம் சேலையூர் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் 1) M/s. லக்ஷ்யா எக்ஸ்போர்ட்ஸ், (கடன்தாரர்) உரிமையாளர் ஆவுடையப்பா மணிகண்டன், எண் 10 சதாஸ்வார் தெரு, முகப்பேர் மேற்கு சென்னை-600 037, 2) திரு. ஆவுடையப்பா மணிகண்டன் (கடன்தாரர் / அடமானதாரர்) T3 VGN பார்க் மேற்கு தேவதாஸ் தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை-600 037. ஆகியோர் கனரா வங்கியின் தாம்பரம் சேலையூர் கிளைக்கு 01.09.2025 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 95,55,451.32 (ரூபாய் தொண்ணூற்று ஐந்து லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நானூற்று ஐம்பத்தொன்று மற்றும் காசுகள் முப்பத்து இரண்டு மட்டும்) மேலும் 02.09.2025 தேதி முதல் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி மற்றும் இதர செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் 06.10.2025 அன்று மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.
அசையா சொத்து விவரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: சொத்து விவரம் : சொத்து எண்.1: காஞ்சிபுரம் ...
நிர்ணய விலை : ரூ. 12,00,000/- | டேவணித்தொகை : ரூ. 1,20,000/- | ஏலத் தொகை அதிகரிக்கும் : ரூ. 15,000/-
மின் ஏல நாள் மற்றும் நேரம்: 06.10.2025, காலை 11:30 மணி முதல் 12:30 மணி வரை
டேவணித் தொகை செலுத்த கடைசி நாள் 04.10.2025 மாலை 4.00 மணி
https://baanknet.com
தேதி : 17.09.2025; இடம் : சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கனரா வங்கி

# தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வியாழக்கிழமை 18–9–2025
விசுவாவசு புரட்டாசி 2 ஹிஜ்ரி 1447 ரபீவுல் அவ்வல் 25


## இது சீற்றமல்ல, எச்சரிக்கை!

தென்மேற்குப் பருவமழை செப்டம்பர் 17-ஆம் தேதியில் நிறைவுக்கு வரும் என்பது இந்திய வானிலை ஆய்வு மையத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. அப்படி இருக்கும்போதுதான், உத்தரகண்டிலும், ஹிமாசல பிரதேசத்திலும் செப்டம்பர் 16-ஆம் தேதி ஏற்பட்ட திடீர் மழைப்பொழிவு, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு என்று பரவலாக சேதமேற்படுத்தி பலரை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

விடிய விடிய கொட்டித் தீர்த்த அடைமழை வெள்ளத்தில் பலர் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். சிலர் உயிரிழந்திருக்கும் நிலையில் பலரைக் காணவில்லை. ஆங்காங்கே சிக்கித் தவித்து வரும் நூற்றுக்கணக்கானவர்களைத் தேடிப் பிடித்து மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

உத்தரகண்ட் மாநிலத்தில் தொடர்ந்து பெய்த பலத்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு காரணமாக ஏராளமான வீடுகள், கட்டடங்கள், சாலைகள் உள்ளிட்டவை கடுமையாக சேதமடைந்திருக்கின்றன. டேராடூன் மாவட்டத்தில் சஹஸ்திரதாரா, மால்தேவ்தா, சாண்ட்லாதேவி, தாலன்வாலா உள்ளிட்ட பகுதிகள் கடும் பாதிப்பை எதிர்கொள்கின்றன. 24 மணி நேரத்தில் சஹஸ்திரதாராவில் 192 மி.மீ., மால்தேவ்தாவில் 141 மி.மீ. மழை பதிவாகி இருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவில் தம்சா, கங்கை, யமுனை நதிகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. அதில் பல வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஹிமாசலில் 650 சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதுவரையில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது.

கடந்த ஜூன் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 13-ஆம் தேதி வரையில் 840.3 மி.மீ. மழைப் பொழிவு நிகழ்ந்திருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது (784.3 மி.மீ.) இது 7% அதிகம். ஒருபுறம் சேதங்கள், உயிரிழப்புகள், கட்டமைப்பு பாதிப்புகள் இருந்தாலும் இன்னொருபுறம் தென்மேற்குப் பருவமழை காரீஃப் பருவ நடவுக்கு உதவி இருக்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும். செப்டம்பர் 5-ஆம் தேதி வரையிலான தகவலின்படி, 110.54 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் காரீஃப் பருவப் பயிரிடல் நடைபெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் சாகுபடிப் பரப்பளவு 2.5% அதிகரித்திருப்பதாக வேளாண் அமைச்சகம் தெரிவிக்கிறது. கடந்த ஆண்டைவிட 4.7% அதிகமாக 43.82 மில்லியன் ஹெக்டேரில் நெல்லும், 12.2% அதிகமாக 9.46 மில்லியன் ஹெக்டேரில் சோளமும் பயிரிடப்பட்டிருக்கிறது. ஒருபுறம் பருவமழையால் பயனடையும் அதே வேளையில் இன்னொருபுறம் நாம் பேரழிவுகளையும் சந்திக்கிறோம் என்பதுதான் வேதனையான போக்கு.

மழைப்பொழிவு காரணமாக ஆங்காங்கே ஏற்படும் பேரழிவுக்குக் காரணம் 'கிளவுட் பர்ஸ்ட்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் 'அடைமழைப் பொழிவு' என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு நாளில் 200 மி.மீ.-க்கும் அதிகமாக மழை பெய்தால் அதை கன மழை என்கிறோம். 10 சதுர கி.மீ. பரப்பில் ஒரு மணி நேரத்தில் 100 மி.மீ. மழை திடீரென பொழிவுற்றால் அடைமழைப் பொழிவு என்கிறார்கள்.

ஈரப்பதமான காற்று, மேகங்களில் சேர்ந்துகொண்டே வருகிறது. அவை பெரிதாக மேல்புறத்தில் திரண்டு சேருகின்றன. அவை உடனடியாக மழையைப் பொழியாமல் திரள்கின்றன. அந்தப் பெருந்திரள் மேகங்கள் திடீரென ஒரு குறிப்பிட்ட பகுதியில் இடியுடன் பொழியத் தொடங்குகின்றன. கண்ணிமைக்கும் நேரத்தில் அடைமழைப் பொழிவைத் தொடங்கி அடுத்த ஒரு மணி நேரத்தில் கடுமையான சேதத்தை ஏற்படுத்தி அடங்கி விடுவதைத்தான் 'அடைமழைப் பொழிவு' (கிளவுட் பர்ஸ்ட்) என்கிறார்கள்.

இமயமலைப் பகுதியில் அண்மைக்காலமாக இதுபோன்ற அடைமழைப் பொழிவு ஏற்படுவது அதிகரித்திருக்கிறது. கன மழை பெய்யக்கூடும் என்பதைத்தான் முன்கூட்டியே கணிக்க முடியுமே தவிர, அடைமழைப் பொழிவைச் செயற்கைக்கோள் படங்களின் உதவியுடன் எச்சரிக்க முடியாது. மலைப் பகுதிகளில் மட்டுமல்லாமல் பிற பகுதிகளிலும் அடைமழைப் பொழிவுகள் நடக்கும் என்பதற்கும் பல எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும்.

பனிச்சிகரங்கள் உருகுவதாலும், அதிகரித்த பருவமழைப் பொழிவாலும் சமீப ஆண்டுகளாக பாகிஸ்தான் பெரும் பாதிப்பை சந்தித்து வருகிறது. நேபாளமும், வங்க தேசமும், இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களும் பருவநிலை மாற்றத்தாலும், பருவ மழை அதிகரிப்பாலும், வெள்ளப் பெருக்காலும் நிலச்சரிவுகளையும் எதிர்கொள்கின்றன.

நூறு கோடிக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கிறது இமயமலை. தண்ணீர், உணவு, எரிசக்தி என்று இமயம் மனித இனத்துக்கு அள்ளித்தரும் கொடைகள் ஏராளம். பருவநிலை மாற்றம் மட்டுமே, அடைமழைப் பொழிவுகளும், இமயமலைப் பகுதிகள் எதிர்கொள்ளும் இயற்கைச் சீற்றங்களுக்கும் காரணமல்ல.

2012-இல் பாகீரதி சூழலியல் வளம் என்று வரையறுக்கப்பட்ட 4,100 சதுர கி.மீ. பகுதியில் பாறைகளைக் குடைந்து சாலைகள் அமைப்பதும், கட்டடங்கள் எழுப்புவதும் தொடர்கின்றன. மரங்கள் வெட்டப்படுகின்றன; நதிநீர் வழித்தடங்கள் தடுக்கப்படுகின்றன.

சேதப்படுத்தப்படும் மலையையும், வெட்டிச் சாய்க்கப்படும் மரங்களையும், ஆக்கிரமிக்கப்படும் நதிநீர்ப் படுகைகளையும் மீண்டும் உருவாக்கப் பல தலைமுறைகள் தேவைப்படும் என்பதை அடைமழைப் பொழிவுச் சீற்றத்தால் எச்சரிக்கிறது இயற்கை. ஆறு அறிவு மனிதனுக்கு இதுகூடப் புரியவில்லையே!

**ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்.**

மேன்மேலும் உயர்வோம் என்று விரும்பி முயல்கின்றவர் நம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயலைச் செய்யாமல் விட வேண்டும்.

**திருக்குறள் (எண் 653) அதிகாரம்: *வினைத்தூய்மை***

# அலைகடலுக்கு அப்பால்...



**பாறப்புறத் இராதாகிருஷ்ணன்**

உயர்படிப்பு, தொழில், வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம், பொருளாதார மேம்பாடு எனப் பல்வேறு காரணங்களுக்காக இந்தியர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தங்குகிறார்கள். மே, 2024 நிலவரப்படி உலக அளவில் மொத்த வெளிநாட்டு இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் 3.54 கோடி. இதில் சுமார் 1.59 கோடி வெளிநாட்டு இந்தியர்கள் மற்றும் சுமார் 1.95 கோடி இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுவாழ் இந்தியர்கள், இந்தியாவில் உள்ள தங்கள் குடும்பம் மற்றும் உறவினர்களுக்கு அனுப்பும் பணம் நம் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கச் செய்கிறது. கடந்த ஆகஸ்ட் 15-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு 1.49 பில்லியன் டாலர் அதிகரித்து 695.11 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. இவ்வாறு தங்களின் வாழ்வாதாரத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் மீதான இனவெறித் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, ஐரோப்பிய நாடான பிரிட்டனின் ஒரு பகுதியான அயர்லாந்தில் அண்மைக்காலமாக இந்தியர்கள் மீதான இனவெறித் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

அயர்லாந்தில் வெளிநாட்டினர் அதிகமாக குடியேறுவதை எதிர்த்து 2023-ஆம் ஆண்டு நவம்பரில் போராட்டங்கள் வெடித்தன. அது இறுதியில் வன்முறையில் முடிந்தது. அப்போது, அயர்லாந்து பிரதமராக இருந்தவர் லியோ வரத்கர்; இவரது தந்தை மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர். அயர்லாந்தில் குடியேறும் வெளிநாட்டினரை எதிர்த்து பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்த போதிலும், கடந்த இரு மாதங்களாக இந்தியர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஜூலை 19-ஆம் தேதி இந்தியாவைச் சேர்ந்த 40 வயதான அமேசான் ஊழியர் டப்ளினின் டல்லாஹட்டில் பதின்மபருவ இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளார். பின்னர், டப்ளின் நகரில் 32 வயதான சந்தோஷ் யாதவ் தான் தங்கியிருந்த அடுக்ககம் அருகில் தாக்கப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த லக்வீர் சிங் கார் ஓட்டுநர். கடந்த ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி அயர்லாந்து, பாலிமுன் பகுதியில் இவரது காரில் ஏறிய இளைஞர்கள், இவரை போப்பின்ட்ரீ என்ற இடத்துக்குச் செல்லுமாறு கூறியுள்ளனர். அவர்கள் இடம் வந்தவுடன், இறங்கும் போது லக்வீர் சிங் தலையில் கண்ணாடி குப்பியால் கடுமையாகத் தாக்கி, 'இந்தியாவுக்கு திரும்பிப் போ' என ஆவேசத்துடன் கூச்சலிட்டு தப்பியோடியுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 4-ஆம் தேதி, வாட்டர் போர்டில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆறு வயது சிறுமி, தனது வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது, அங்கு வந்த சிறுவர்கள் அச்சிறுமியைப் பார்த்து 'சுகாதாரமற்ற இந்தியர்கள், இந்தியாவுக்கு திரும்பிச் செல்லுங்கள்' என்று கத்தியபடி மிதிவண்டியால் தாக்கி, அத்துமீறி இனவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த இரு மாதங்களாக அயர்லாந்தில் வசித்துவரும் இந்திய மக்கள் மீது இனவெறி ரீதியான தாக்குதல் அரங்கேறி வருகிறது. அங்கு சிறுவர்கள் மற்றும் பதின்ம பருவத்தினரிடையே அதிகரித்து வரும் போதைப் பழக்கமே இத்தகைய தாக்குதல்களுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

'இவை பழுப்புநிற தோலின் தன்மை உள்ளவர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட சீரற்ற தொடர் தாக்குதல்கள் என நினைக்கிறேன். இத்தகைய தாக்குதல்களுக்கு பின்னால் இருப்பவர்கள் சமூக நலனில் அக்கறையற்றவர்கள். தங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டதாகக் கருதுபவர்கள்' என்கிறார் அயர்லாந்து இந்திய சபை உறுப்பினர் ஆனந்த் குமார் பாண்டே. 'இந்தியர்கள் தங்கள் வழக்கப்படி பண்டிகைகள் கொண்டாடுவதையோ, கலாசார ஊர்வலங்கள் நடத்துவதையோ அயர்லாந்து மக்கள் விரும்பவில்லை.

ஊர்வலங்கள் மூலம் இந்தியர்கள் ஐரிஷ் தெருக்களைக் கைப்பற்றிவிட்டதாகவும், அது அவர்களுக்குள் வெறுப்பைத் தூண்டுவதாகவும் சமூக ஊடகங்களில் பிரசாரம் செய்கிறார்கள். இந்திய கலாசாரத்தின் மிகையான வெளிப்படையான கொண்டாட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அனைத்து இன மக்களிடையே சகவாழ்வு நிலவ, ஐரிஷ் கலாசாரத்துக்கு சமமான மரியாதை தேவை. நாம் நடத்தும் கலாசார கொண்டாட்டங்கள் மூலம் ஐரிஷ் சமூகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடாது. ஐரிஷ் அரசின் கொள்கை மற்றும் சட்டங்களில் மாற்றங்கள் தேவை. ஐரிஷ் மக்களுடன் நல்லுறவைப் பேணுவதன் மூலம் நமது இலக்கை எட்டலாம்' என்கிறார் அயர்லாந்து - இந்திய சபையின் தலைவர் பிரசாந்த் சுக்லா.

இதேபோன்று ஆஸ்திரேலியா மெல்போர்னின் அல்டோனா மெடோவ் பகுதியைச் சேர்ந்த இந்திய மாணவர் செளரப் ஆனந்த் என்பவர் கடந்த ஜூலை மாதம் 19-ஆம் தேதி ஐந்து சிறுவர்களால் இனரீதியாக தாக்கப்பட்டார். அடிலெய்ட் நகரில் தங்கிப் படித்து வரும் இந்திய மாணவர் சரண்பீரித் சிங் கடந்த ஜூலை மாதம் 27ஆம் தேதி தனது வீட்டின் அருகே இரு சக்கர வாகனத்தை நிறுத்திய தகராறில் தாக்கப்பட்டுள்ளார்.

மேலும், கடந்த 15.08.2025 அன்று பிரிட்டனில் உள்ள வால்வர்ஹாம்டன் ரயில் நிலையத்தில் சீக்கிய ஆண்களை மூன்று இளைஞர்கள் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். கடந்த ஆகஸ்ட் 24-ஆம் தேதி கிழக்கு லண்டனில் இந்தியர்களால் நடத்தப்பட்ட உணவகம் (இண்டியன் அரோமா) தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது.

'கடந்த ஐந்து ஆண்டுகளில் 91 இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் வன்முறையால் தாக்கப்பட்டுள்ளனர். மேலும், இது போன்ற தாக்குதல்களால் 30 பேர் உயிரிழந்துள்ளனர். அதிக எண்ணிக்கையிலான தாக்குதல்கள் கனடாவில் நடந்துள்ளன. அங்கு 16 இந்தியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்' என கடந்த ஏப்ரல் மாதம் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**கடந்த ஐந்து ஆண்டுகளில் 91 இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் வன்முறையால் தாக்கப்பட்டுள்ளனர். மேலும், இதுபோன்ற தாக்குதல்களால் 30 பேர் உயிரிழந்துள்ளனர். அதிக எண்ணிக்கையிலான தாக்குதல்கள் கனடாவில் நடந்துள்ளன. அங்கு 16 இந்தியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 'அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்கு' (மேக் அமெரிக்கா கிரேட் அகெய்ன்) என முழங்கி வருகிறார். இது குறித்தான இயக்கத்தையும் அவர் தொடங்கியுள்ளார். அமெரிக்காவில் குடியேற்றம், தொழில்நுட்பம் சார்ந்த பணிகள், பெருநிறுவனங்களில் இந்தியர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவது குறித்து அவ்வப்போது 'அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்கு' இயக்கத்தினர் அதிருப்தியும், கவலையும் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்க அதிபர் டிரம்ப், அமெரிக்காவிலுள்ள முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களுடன், ஐந்து அமெரிக்க வாழ் இந்திய தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு கடந்த 4.9.2025 அன்று வெள்ளை மாளிகையிலுள்ள ரோஜா தோட்டத்தில் இரவு விருந்து அளித்து கௌரவித்தது பலரின் புருவத்தை உயர்த்தியது.

இந்த விருந்தில் மைக்ரோ சாஃப்ட் நிறுவனம், கூகுள், மைக்ரோன் டெக்னாலஜிஸ் ஆகிய நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் முறையே, சத்யா நாதெள்ளா, சுந்தர்பிச்சை, சஞ்சய்மெஹ்ரோத்ரா, டிப்கோ (தி இன்ஃபர்மேஷன் பஸ் கம்பெனி) மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் விவேக் ரணதிவே, பழந்திர் மென்பொருள் நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ஷியாம் சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தனர்.

முன்னதாக, அமெரிக்க இளைஞர்களிடையே செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துவது குறித்து அமெரிக்காவின் முதல் பெண்மணி மெலனியா டிரம்ப் தலைமையில் விவாதம் நடைபெற்றது. அப்போது, வெள்ளை மாளிகையில் செயற்கை நுண்ணறிவு குறித்த மூத்த கொள்கை ஆலோசகராக உள்ள சென்னையைச் சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணனும் உடனிருந்தார். இவர் அமெரிக்க நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவுக் கொள்கையை வடிவமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

தேசத்தின் நலனுக்கும், முன்னேற்றத்துக்கும், வளத்துக்கும், பெருமைக்கும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பங்கு அலாதியானது. எனவேதான், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என முழங்கினார் கணியன் பூங்குன்றனார். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றார் ஔவை பெருமாட்டி. தமிழ்நாடு அரசு, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் மூலம் வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு தேவைப்படும் உதவிகளைச் செய்து வருகிறது.

இந்தியா, 'வசுதைவ குடும்பகம்' என்ற மஹா உபநிடத்தில் காணப்படும் வாக்கியத்தின் அடிப்படையில் உலகத்தை ஒரு குடும்பமாகப் பார்க்கிறது. வெளிநாட்டினர் இந்தியாவை ஒரு புனித பூமியாகவே கருதுகின்றனர். நம் நாட்டின் கல்வி, கலை, கலாசாரம், அறம் சார்ந்த விழுமியங்களைக் கண்டு வியந்து போற்றிப் பாராட்டுகின்றனர். தாங்கள் சுற்றுலா செல்ல விரும்பும் நாடுகளில் இந்தியாவையே முதன்மைப் படுத்துகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் செய்யும் ஒரு சிறு தவறும் இந்தியாவை தலைகுனியச் செய்யும் என்பதை மறந்து விடக்கூடாது. உலகம் முழுவதும் இந்தியர்களின் பங்களிப்பு குறிப்பிட்ட அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால் 'பாருக்குள்ளே நல்ல நாடாக' பாரதம் விளங்கி வருகிறது. எனினும், வெளிநாட்டில் கல்வி கற்கச் சென்றவர்கள், தொழில்முனைவோர்கள், பணியாளர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் கடந்த பிறகு மீண்டும் இந்தியாவுக்கே திரும்பி வந்து சேவையாற்ற வேண்டும்.

கட்டுரையாளர்:
**எழுத்தாளர்.**

# பெண் கல்வி: நாட்டின் முதலீடு!

**வழக்குரைஞர் ஆர்.சங்கீதா**

ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை கல்வி. ஆனால், வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக, பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்ந்தோம். ஆண்களுக்கு மட்டுமே கல்வி அளிப்பது, பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைப்பது போன்ற கட்டுப்பாடுகள் நிலவின. ஆனால், நவீன உலகில் இந்த எண்ணங்கள் மாறி வருகின்றன. பெண்கள் கல்வி பெறுவது என்பது தனிப்பட்ட வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை உலகம் உணர்ந்துள்ளது.

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு, கல்வியில் பாலின சமத்துவமின்மை ஒரு பெரும் சவாலாக இருந்தது. 1951-ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த எழுத்தறிவு விகிதம் வெறும் 18.33%-ஆக இருந்த நிலையில், பெண்களின் எழுத்தறிவு விகிதம் வெறும் 8.61% மட்டுமே. இது ஆண்கள், பெண்கள் இடையே உள்ள மிகப் பெரிய கல்வி இடைவெளியாக இருந்தது. இந்தப் பெரிய இடைவெளி, பாலினப் பாகுபாடு, சமூகத் தடைகள், பொருளாதாரச் சுமைகள் மற்றும் பாரம்பரியக் கட்டுப்பாடுகள் போன்ற பல காரணங்களால் ஏற்பட்டது.

இந்திய அரசு, பெண்களின் கல்வியை மேம்படுத்தப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியது. தேசிய கல்வி இயக்கம் சர்வ சிக்ஷா அபியான் மற்றும் மத்திய அரசின் பல்வேறு கல்வி உதவித் திட்டங்கள் மூலம் பெண்கள் பள்ளிக்குச் செல்வதை ஊக்குவித்தது. இதன் விளைவாக, படிப்படியாகப் பெண்களின் எழுத்தறிவு விகிதம் அதிகரித்தது. 1951-இல் பெண்களின் கல்வி விகிதம் 8.61%-லிருந்து 2001-இல் 53.67%-ஆகவும், 2011-இல் 65.46%-ஆகவும் அதிகரித்து.

இப்படி இந்தியாவில், கடந்த சில ஆண்டுகளாகப் பெண்களின் கல்வி விகிதம் அதிகரித்திருந்தாலும், இன்னும் சில சவால்கள் உள்ளன. கிராமப்புறங்களில், பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்துவது, குழந்தை திருமணம் மற்றும் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவது போன்ற காரணங்கள் இன்னும் நீடிக்கின்றன.

இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு பெண்களுக்கான கல்வியில் ஒரு தனித்துவமான சாதனையைப் படைத்துள்ளது. கேரளத்துக்கு அடுத்தபடியாக, பெண்கள் எழுத்தறிவு விகிதத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உள்ளது.

2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பெண்களின் எழுத்தறிவு விகிதம் 73.4%-ஆக இருந்தது. இது தேசிய சராசரியான 65.46%-ஐ விட அதிகமாகும். தமிழகத்தின் இந்த வெற்றிக்குக் காரணம், அரசின் திட்டமிட்ட முயற்சிகளும், சமூக சீர்திருத்த இயக்கங்களுமே.

தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம், இலவச சீருடை, புத்தகங்கள், காலணிகள், மிதிவண்டி போன்றவற்றை வழங்குவதன் மூலம் பிள்ளைகளுக்கான கல்விச் செலவுகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. 'மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்' போன்றவை மூலம் பெண் குழந்தைகளுக்கு உயர் கல்வி பெற நிதி உதவி வழங்கப்பட்டது. தமிழக அரசின் புதுமைப் பெண் திட்டம், மத்திய அரசின் 'பிரகதி' போன்ற திட்டங்களும் பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்துணையாக உள்ளன.

ஒரு பெண் கல்வி கற்றால், முதலில் பயன்பெறுவது அவரது குடும்பம்தான். படித்த தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளைச் சரியாகப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள்; அவர்களுக்கு வீட்டுப் பாடங்களில் உதவுகிறார்கள். மேலும், அவர்களின் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்துகிறார்கள். கல்வி பெற்ற தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் உடல்நலம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் குறித்து நன்கு அறிந்திருப்பதால், குழந்தைகளின் இறப்பு விகிதமும் குறைகிறது.

எழுத்தறிவு பெற்ற பெண்கள், தங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கும், குடும்பத்தினருக்கும் உடல் நலம் மற்றும் தடுப்பூசிகளின் அவசியம், சுத்தமான தண்ணீர், உணவைப் பயன்படுத்துதல் மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் குறித்து நன்கு அறிந்திருக்கிறார்கள். இது குடும்பத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும், உடல் நலனையும் மேம்படுத்துகிறது.

ஒரு குடும்பத்தில், குறிப்பாக பொருளாதார முடிவுகள் எடுப்பதில், பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். கல்வி கற்ற பெண்கள், நிதி மேலாண்மை, முதலீடு மற்றும் செலவினங்கள் குறித்துத் திறம்பட முடிவெடுக்க முடிகிறது. கல்வி என்பது பாலின சமத்துவத்துக்கு வழிவகுக்கிறது. கல்வி கற்ற பெண்கள் தங்களது உரிமைகளுக்காகப் போராடவும், சமூகத் தடைகளை எதிர்த்து நிற்கவும் தயங்குவதில்லை. இது பெண்களுக்கு எதிரான பாகுபாட்டைக் குறைத்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாய்ப்புகளை உருவாக்குகிறது.

ஒரு நாட்டில் பெண்கள் வேலை செய்தால், அது நாட்டின் பொருளாதார உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. படித்த பெண்கள் மருத்துவர்கள், நீதிபதிகள், ஆசிரியர்கள், பொறியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்ற பணிகளில் திறம்பட செயலாற்றுகிறார்கள்.

இது நாட்டின் மனிதவளத்தை முழுமையாகப் பயன்படுத்த உதவுகிறது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் நடத்திய ஆய்வின்படி, பெண்களின் கல்வியில் முதலீடு செய்வது, வறுமையைக் குறைத்து, ஒரு நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

படித்த பெண்கள் அரசியல் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். அவர்கள் வாக்களிப்பது, தேர்தலில் போட்டியிடுவது மற்றும் அரசியல் முடிவுகளை எடுப்பது போன்ற செயல்பாடுகளில் அதிக அளவில் பங்கேற்கிறார்கள். இது ஒரு ஜனநாயக நாட்டின் வலிமையை அதிகரிக்கிறது.

ஒரு பெண் கல்வி பெற்றால், ஒரு தலைமுறையே கல்வி பெறும். இது வளமான, வலிமையான தேசத்தைக் கட்டமைக்க உதவும். எனவே, பெண்களுக்குக் கல்வி அளிப்பது என்பது ஒரு நாட்டின் எதிர்காலத்துக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த முதலீடாகும்.

## அன்புள்ள ஆசிரியருக்கு...
edit.dinamani@gmail.com

### சுய லாபத்துக்காக...

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைத்திருக்கிறது ('தவறு திருத்தப்படுகிறது!'–ஆசிரியர் உரை, 10.09.25). செல்லாத வாக்குகள் தெரிந்தே பதிவாகியிருக்கலாம். அவர்கள் தங்களின் சுய லாபத்துக்காகக்கூட அவ்வாறு வாக்களித்திருக்கலாம். வரும் நாடாளுமன்றத் தேர்தல் கருப்பு ஆடுகளை அடையாளம் காட்டும். குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர் தேர்தல்களில் வட இந்தியா, தென்னிந்தியா எனப் பாகுபடுத்தி வாய்ப்பளிப்பது பிரிவினையை ஊக்குவிப்பதுபோல் ஆகிவிடாதா என கேட்கத் தோன்றுகிறது. எல்லோரும் இந்தியர்கள் என்பதை ஊக்குவிப்பதே நாட்டின் நலனுக்கு உகந்தது. பொறுப்புடனும் நடுநிலையுடனும் செயல்பட்டு தமிழகத்தின் பெருமையை சிபிஆர் காப்பாற்றுவார் என நம்பலாம்.

**த.முருகவேள், விழுப்புரம்.**

### காலத்துக்கேற்ற நடவடிக்கை

மத்திய அரசின் ஜிஎஸ்டி வரியே விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ற பிம்பத்தை மக்கள் மன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஏற்படுத்தி வைத்திருந்ததை வரிக் குறைப்பு நடவடிக்கை சிதைத்து விட்டது ('தீபாவளி பரிசு கிடைக்க...'–கட்டுரை–முனைவர் வைகைச் செல்வன், 10.09.25). உண்மை வெளியே வந்து இருக்கிறது. குறு, சிறு, நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கவும், நுகர்வோர் பொருள்களின் விற்பனையை அதிகரிக்கவும் எடுக்கப்பட்ட காலத்துக்கேற்ற சீர்திருத்த நடவடிக்கை இது. பேச்சளவிலும், பெயரளவிலும் இருந்த ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறையை நாடு முழுவதும் துணிச்சலுடன் செயல்படுத்திய சாதனை பிரதமர் நரேந்திர மோடி அரசையே சாரும். தற்போது, தொழில்முனைவோரின் சுமை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

**சீ.காந்திமதிநாதன், கோவில்பட்டி.**

### ஓரடுக்கு வரி வேண்டும்

சுதந்திர இந்தியாவில் இதுவரை எந்தப் பொருளும் விலை குறைந்ததில்லை. அது அதிகரிக்காமல் இருந்திருக்கின்றன என்று கூறலாம் ('தீபாவளி பரிசு கிடைக்க...'–கட்டுரை–முனைவர் வைகைச் செல்வன், 10.09.25). ஜிஎஸ்டி விகிதம் குறைக்கப்பட்டதால் விலைவாசியும் குறையும் என எதிர்பார்க்க முடியாது. இதுவரை நான்கு அடுக்குகளில் வரி விதிப்பு இருந்தது ஏன் என்ற மக்களின் கேள்விகளுக்கு மத்திய அரசிடம் பதில் இருக்காது. இதில் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஓரடுக்கு வரி விதிப்புமுறை அமலில் உள்ள நாடுகள் பொருளாதாரத்தில் சிறப்பாக உள்ளன. அங்கு நுகர்வோரும் பாதிக்கப்படவில்லை. அதுபோன்று ஓரடுக்கு வரி விதிப்பு அறிவிப்பை மத்திய அரசு விரைவில் வெளியிட்டால் நல்லது.

**கிருஷ்ணசாமி, சிதம்பரம்.**

### அரசியல் தலைவர்களே...

அரசியல்வாதிகள் கச்சத்தீவை தாரை வார்த்து விட்டார்கள்; அதனால் பிரச்னை ஓயவில்லை எனக் கூறி வருகின்றனர் ('தீவு மீட்பல்ல தீர்வு!'–ஆசிரியர் உரை, 11.09.25). சுற்றுலாத் தலமாக இருந்த இந்தப் பகுதி கலவரப் பகுதியாக மாறி வருவதன் காரணம், இரண்டு நாடுகளிலும் உள்ள மதவாதிகளும், அரசியல் தலைவர்களும்தான். பயங்கரவாதிகளைப்போல் வெளிப்படையாக வெடிகுண்டுகளை வைத்து அப்பாவிகளைக் கொல்லும் செயல்களைப்போல் இல்லாமல், சிலர் மறைமுகமாக சிக்கல்களை உருவாக்குகிறார்கள் என்பதுதான் உண்மை. இரு நாட்டுத் தலைவர்களும் பேசி கச்சத் தீவை பொதுவான பகுதியாக்கி சுற்றுலாத் தலமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கோ.ராஜேஷ் கோபால், மணவாளக்குறிச்சி.**

### மகாகவி வழிநடப்போம்!

இந்திய விடுதலைக்காக, தனது பாடல்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார் ('பாரதி–மண் விடுதலையும், பெண் விடுதலையும்!'–கட்டுரை–பேராசிரியர் மணிகண்டன், 11.09.25). பெண்கள் முன்னேறுவதற்காக சமூகத்தில் புரையோடிப் போயிருந்த மூட நம்பிக்கைகளைக் களைவதற்காக தனது பாடல்கள், பேச்சு மூலம் புரட்சிகர கருத்துகளை மகாகவி பாரதி பரப்பினார். நாட்டின் விடுதலைக்கு அவரது பங்கு அளப்பரியது. அன்றைக்கு அவர் விதைத்துச் சென்ற கருத்துகள் இன்றைக்கும் பேசப்படுகின்றன. இதைப் பார்க்கும்போது, அவரது தொலைநோக்குப் பார்வை புலனாகிறது. இந்த மகத்தான கவிஞர் தமிழகத்தில் அவதரித்தது நமக்குப் பெருமை. அவரின் கருத்துகள் வழிநடந்து அவருக்குப் புகழ் சேர்ப்போம்.

**மா. பழனி, கூத்தப்பாடி.**

### தேசப்பற்றின் தீச்சுடர்

வறுமையில் வாடிய போதும், மானுடம் சிறக்க தமது எழுத்தால் அரும்பாடு பட்டவர் மகாகவி பாரதியார் ('பாரதி–மண் விடுதலையும், பெண் விடுதலையும்!'–கட்டுரை–பேராசிரியர் ய.மணிகண்டன், 11.09.25). அவற்றில் மண் விடுதலை அனைவரும் அறிந்தது. பொட்டுக் கட்டி விடும் கொடிய பழக்கத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று பம்பாய் பிரமுகர்கள் பிரிட்டிஷ் அரசுக்கு விண்ணப்பித்த நிலையில், அதை அவர்களது தயவின்றி நாமே ஒழிக்க வேண்டும் என்று மகாகவி பாரதியார் கருதியது அவரது அசைக்க முடியாத தேச பக்திக்குச் சான்றாகிறது. நாடு அடிமைப்பட்டிருந்த இருண்ட காலத்தில், காகிதத்தை ஆயுதமாக்கிப் போராடிய மகாகவி பாரதியைப்போல் யாரும் இருந்ததில்லை என்பது வரலாறு நமக்குக் காட்டும் சாட்சியம். மகாகவி பாரதிக்கும் விடுதலைக்கும் அப்படி ஒரு தொடர்பு.

**ஆர்.தீனதயாளன், காரமடை.**

# மதுராந்தகத்தில் 2,000 ஏக்கரில் சர்வதேச நகரம்

## ஒப்பந்தப்புள்ளி கோரியது தமிழக அரசு

**சென்னை, செப். 17:** செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் 2,000 ஏக்கரில் சர்வதேச நகரத்துக்கான பெருந்திட்டம் தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

நிகழாண்டுக்கான (2025-26) நிதிநிலை அறிக்கையை தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கடந்த மார்ச் மாதம் சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். அதில், பொதுமக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் ஒருங்கிணைந்த புதிய நகரங்கள் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில், சென்னைக்கு அருகே 2,000 ஏக்கரில் பள்ளிகள், கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், வீட்டு வசதிகள் மற்றும் பூங்காக்கள் கொண்ட புதிய உலகத் தரம் வாய்ந்த நகரம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி, 2,000 ஏக்கரில் சர்வதேச நகரம் உருவாக்க, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஐந்து இடங்கள் அடையாளம் காணப்பட்டன. அதுகுறித்த ஆய்வறிக்கை தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்துக்கு அனுப்பப்பட்டது.

இந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் 2,000 ஏக்கரில் புதிய சர்வதேச நகரம் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. இந்நிலையில், சர்வதேச நகரம் அமைப்பதற்கான பெருந்திட்டம் தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது. மதுராந்தகத்தில் புதிய சர்வதேச நகரம் அமைக்கப்பட்டதும் அங்கு, பல்வேறு பன்னாட்டு முதலீடுகள் வரும் என்பதுடன் ஏராளமான வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனிமொழிக்கு பெரியார் விருது...



கரூரில் புதன்கிழமை நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், கட்சியின் துணைப் பொதுச் செயலர் கனிமொழி எம்.பி.க்கு பெரியார் விருது வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி, ஆ.ராசா எம்.பி. உள்ளிட்டோர்.

# தமிழக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ரூ.127 கோடி விடுவிப்பு

நமது நிருபர்

**புது தில்லி, செப். 17:** தமிழக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15-ஆவது நிதிக் குழு மானியமாக ரூ.127.58 கோடியை மத்திய அரசு புதன்கிழமை விடுவித்துள்ளது.

மத்திய அரசு நடப்பு (2025-26) நிதியாண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான 15-ஆவது நிதிக் குழுவின் மானியத்தை விடுவித்திருக்கிறது. இதில், தமிழகத்துக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத்தின் முதல் தவணையாக ரூ.127.586 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி 2,901 தகுதியுடைய ஊராட்சிகள், 74 தகுதியுடைய ஊராட்சி வட்டாரப் பகுதிகள், 9 தகுதியுடைய மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மேலும், 2024-25ஆம் நிதியாண்டுக்காக அஸ்ஸாம் மாநிலத்துக்கு ரூ.214.542 கோடியையும் மத்திய அரசு விடுவித்துள்ளது. பஞ்சாயத்து ராஜ் மற்றும் நீர்வள அமைச்சகங்களின் குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்காக 15-ஆவது நிதிக் குழுவின் மானியங்களை விடுவிக்க மாநிலங்களுக்கு மத்திய அரசு பரிந்துரை செய்கிறது. அதன் பின்னர், நிதியமைச்சகத்தின் மூலம் நிதி விடுவிக்கப்படுகிறது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியங்கள், ஒரு நிதியாண்டில் 2 தவணைகளாக விடுவிக்க பரிந்துரைக்கப்பட்டு, விடுவிக்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்களை, ஊதியம் மற்றும் இதர செலவுகள் தவிர, அரசியல்சாசனத்தின் 11-ஆவது பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி, அந்தந்தப் பகுதிகளின் தேவைகளுக்காக ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளும் பயன்படுத்தும்.

குறிப்பிட்ட நோக்கங்களுக்கான உள்ளாட்சி அமைப்புக்கான மானியங்கள், தூய்மைக்கான அடிப்படை சேவைகள், திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத நிலையைப் பராமரித்தல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தப்படும். இதில் வீட்டுக் கழிவுகளை நிர்வகித்தல் மற்றும் சுத்திகரித்தல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

குறிப்பாக, மனிதக் கழிவுகளை அகற்றுதல், குடிநீர் விநியோகம், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி ஆகியவற்றுக்காக இந்த மானியங்கள் பயன்படுத்தப்படலாம் என மத்திய பஞ்சாயத் ராஜ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# கொடிக் கம்பங்கள் விவகாரம்: அரசாணையைப் பின்பற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை

## உயர்நீதிமன்றம் எச்சரிக்கை

**சென்னை, செப். 17:** கொடிக் கம்பங்கள் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட அரசாணை மற்றும் வழிகாட்டு விதிமுறைகளைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகம் முழுவதும் பொது இடங்கள், மாநில, தேசிய நெடுஞ்சாலைகள், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான இடங்களில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், ஜாதி, மத அமைப்புகள் மற்றும் சங்கங்களின் கொடிக் கம்பங்களை ஏப்.28-ஆம் தேதிக்குள் அகற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதி ஜி.கே. இளந்திரையன் கடந்த ஜன.27-ஆம் தேதி உத்தரவிட்டார். மேலும், இந்த உத்தரவு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை தாக்கல் செய்யவும் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர்களும் ஆஜராகினர்.

அரசுத் தரப்பில் ஆஜரான கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் ஜெ.ரவீந்திரன், கொடிக் கம்பங்கள் வைப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக மண்டல மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த செப்.16-ஆம் தேதி அதுதொடர்பான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறி அதைத் தாக்கல் செய்தார்.

அதில், புதிய சிலை வைத்தல், பழைய சிலைகளை மாற்றுதல், ஏற்கெனவே உள்ள சிலைகளை இடமாற்றம் செய்வது, தனியார் கட்டடம் மற்றும் நிலத்தின் வெளியே தெரியும்படியோ, தெரியாதபடியோ சிலைகள் வைப்பது குறித்து முடிவெடுக்க பல துறை அதிகாரிகளைக் கொண்ட மாநில, மாவட்ட மற்றும் மண்டல அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான குழுவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மை செயலர் தலைவராக இருப்பார். வருவாய்த் துறை ஆணையர் ஒருங்கிணைப்பாளராகவும், சட்டம்-ஒழுங்கு கூடுதல் டிஜிபி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் இயக்குநர், வனத் துறை தலைமை முதன்மை பாதுகாவலர், பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை இயக்குநர் ஜெனரல் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மாவட்டக் குழுவின் தலைவராக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் இருப்பர். காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர், நகராட்சி ஆணையர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், மாநில நெடுஞ்சாலைத் துறையின் மண்டல பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.



மாநகராட்சிப் பகுதிகளில் மாநகராட்சி ஆணையர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை ஆணையர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். மண்டல அளவிலான குழுவில் சார் ஆட்சியர், காவல் துணைக் கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர், வட்டாட்சியர், நீர்வளத்துறை உதவிப் பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர், நெடுஞ்சாலைத்துறை உதவி மண்டல பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று அதில், தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு தற்காலிககொடிக் கம்பங்களை சாலையைத் தோண்டியோ, சாலைத் தடுப்பு சுவர்களிலோ அமைக்கக் கூடாது உள்ளிட்ட வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதி, கொடிக் கம்பங்களை அகற்றுவது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. அதன்படி, பெரும்பாலான மாவட்டங்களில் 90 சதவீத கொடிக் கம்பங்கள் அகற்றப்படவில்லை. அதேநேரம் கொடிக் கம்பங்கள் விவகாரத்தில் அரசு தரப்பில் குழு அமைத்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

இருப்பினும், இந்த வழிகாட்டு விதிமுறைகள் மற்றும் அரசாணையைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும்படி பாரபட்சமின்றி அவற்றை பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்து விசாரணையை அக்.15-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## பாமக தலைவர் பதவி

# தேர்தல் ஆணையத்தில் ராமதாஸ் தரப்பில் புகார் மனு

நமது நிருபர்

**புது தில்லி, செப். 17:** பாமக தலைவர் பதவி, சின்னம் விவகாரம் தொடர்பாக அக்கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தரப்பில் தில்லியில் உள்ள தலைமைத் தேர்தல் ஆணையத்தில் புதன்கிழமை புகார் மனு அளிக்கப்பட்டது.

அன்புமணி தலைமையிலான பாமகவை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளதாகவும், அவரது தரப்புக்கு மாம்பழம் சின்னம் கிடைக்கும் என்றும், இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றதாகவும் அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் வழக்குரைஞர் பாலு தெரிவித்தார்.

இத் தகவலை ஆட்சேபிக்கும் வகையில் பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தரப்பில் அக்கட்சியின் சேலம் தொகுதி எம்எல்ஏ அருள், சட்ட ஆலோசகர் அருள் உள்ளிட்டோர் தில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் உள்ளிட்ட அதிகாரிகளை புதன்கிழமை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

இதன் பிறகு இருவரும் செய்தியாளர்களிடம் கூறியது: பாமக சட்ட விதிகளின்படி கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மருத்துவர் ராமதாஸ்தான். அவர் நிகழாண்டு மே 30-ஆம் தேதி முதல் தலைவராக இருந்து வருகிறார். அதுகுறித்த விவரத்தை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பியுள்ளோம். இத்தகவல் தேர்தல் ஆணையத்திடம் மறைக்கப்பட்டு, பொய்த் தகவல்களை அளித்து பாமகவுக்கு அன்புமணி தலைவராக இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து தலைமைத் தேர்தல் ஆணையரைச் சந்தித்து முறையிட்டோம். இதை மாற்றி அமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கோரி, அதற்கான ஆவணங்களையும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளோம். தலைமைத் தேர்தல் ஆணையர் எங்கள் கோரிக்கையை கவனமாகக் கேட்டறிந்தார். ஏற்கெனவே இந்த விவகாரம் தொடர்பாக 12 கடிதங்களை தேர்தல் ஆணையத்துக்கு அளித்திருந்தோம். அதற்கு பதில் ஏதும் வரவில்லை என்பதையும் ஆணையத்திடம் பதிவு செய்தோம்.

அன்புமணியின் பதவிக் காலம் முடிந்த பிறகுதான் ராமதாஸ் தலைவராகப் பதவியேற்றார். அந்தத் தகவல் தேர்தல் ஆணையத்திடம் மறைக்கப்பட்டிருக்கிறது. பொதுக் குழுவைக் கூட்ட அவருக்கு அதிகாரம் இல்லை என்பதையும் தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்தோம். மேலும், சட்டபூர்வ விவரங்களைத் தெளிவாக எடுத்துரைத்தோம். நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம் என்றனர்.

# அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மீதான வழக்குகள்: உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு பிரமாண பத்திரம் தாக்கல்

நமது நிருபர்

**புது தில்லி, செப். 17:** தமிழகத்தில் தற்போது அமைச்சராக உள்ளவர்கள், முன்னாள் அமைச்சர்கள் அல்லது சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எதிராக அனுமதிக்கப்பட்ட வழக்குகள் விசாரணை முடிவு வருவதற்கு முன்னரே கைவிடப்படவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது ஆளும் திமுக அரசில் சில அமைச்சர்களுக்கு எதிராக மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றை விரைந்து விசாரிக்க உத்தரவிடுவது அல்லது அந்த வழக்குகளை சிறப்பு நீதிமன்றத்துக்கோ தமிழகத்துக்கு வெளியில் வேறு நீதிமன்றத்துக்கோ மாற்றக் கோரி கருப்பையா காந்தி என்ற வழக்குரைஞர் உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்துள்ளார்.

அந்த மனுவில், தற்போதைய தமிழக அரசில் நியாயமான விசாரணை நடத்தப்படும் என்ற நம்பிக்கை இல்லை.

தமிழக அமைச்சர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் இருந்த பல வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன அல்லது அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக மாநில அரசு மேல்முறையீடு செய்யவில்லை. விடுதலை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட விதம் கடுமையான சந்தேகத்தை எழுப்புகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதுபோன்ற சொத்து குவித்ததாக தொடரப்பட்ட வழக்குகளில் இருந்து சில அமைச்சர்கள் விடுவிக்கப்பட்ட விவகாரத்தை சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் தாமாக முன்வந்து வழக்காக விசாரணைக்கு ஏற்று, அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் விடுவிக்கப்பட்ட முந்தைய உத்தரவை மறுஆய்வுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, உச்சநீதிமன்ற உத்தரவின்படி இந்த வழக்கில் தமிழக அரசு அண்மையில் தேதி பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது. அதில், எந்தவொரு அமைச்சர் அல்லது முன்னாள் அமைச்சர் அல்லது சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீதான வழக்குகளில் விசாரணை முடிவுக்கு வருவதற்கு முன்பே குற்றவியல் வழக்குகள் கைவிடப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் சூர்ய காந்த், உஜ்ஜல் புயான், என்.கே. சிங் ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு முன்பாக புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு தாக்கல் செய்த பிரமாண பத்திரத்துக்கு பதிலளிக்க மனுதாரர் சார்பில் அவகாசம் கோரப்பட்டது. அதற்கு அனுமதி வழங்கிய நீதிபதிகள் அடுத்த விசாரணையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

## விஜய் பிரசாரத்துக்கு அனுமதி

# காவல் துறைக்கு உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு

**சென்னை,செப்.17:** தவெக தலைவர் விஜய் மேற்கொள்ளும் பிரசாரத்துக்கு அனுமதி கோரி அளிக்கப்படும் விண்ணப்பங்களை பாரபட்சமின்றி பரிசீலிக்க காவல் துறைக்கு அறிவுறுத்த டிஜிபிக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் துணை பொதுச் செயலர் சி.டி. ஆர்.நிர்மல்குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தவெக தலைவர் விஜய் கடந்த செப்.13-ஆம் தேதி திருச்சியில் பிரசாரத்தை தொடங்கினார். தொடர்ந்து வரும் செப்.20 முதல் டிச.20-ஆம் தேதி வரை தமிழகம் முழுவதும் பிரசாரம் மேற்கொள்ளவிருக்கிறார். திருச்சியில் நடைபெற்ற பிரசாரத்தின் போது காவல்துறை தரப்பில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டன.

தமிழகத்தில் ஆளும் கட்சி உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள், ரோடு ஷோ போன்றவற்றுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி அனுமதிவழங்கப்படுகிறது. ஆனால், தவெக சார்பில் அனுமதி கோரும்போது கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

எனவே, தவெக தலைவர் மேற்கொண்டு வரும் பிரசாரத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் மனுக்களை பாரபட்சமின்றி பரிசீலித்து அனுமதி வழங்க மாநிலம் முழுவதும் உள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்த டிஜிபிக்கு உத்தரவிட வேண்டும் என அதில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சத்துணவு ஊழியர்கள் சார்பில் நவம்பரில் கோரிக்கை மாநாடு

**சென்னை,செப்.17:** கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில மாநாடு வருகிற நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் மு.வரதராஜன் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக சத்துணவு திட்டத்தில் தற்போது 85 ஆயிரம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. சத்துணவு ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.7,850 வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தும், அதை தமிழக அரசு இதுவரை அமல்படுத்தவில்லை.

இந்த தீர்ப்பை அமல்படுத்தி மருத்துவக் காப்பீடு, அகவிலைப்படியுடன் ஓயவூதியத்தை குடும்ப ஓய்வூதியமாக மாற்றி வழங்க வேண்டும் என்பது எங்களது கோரிக்கை.

இதை வலியுறுத்தி தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் சங்கங்களின் மாநில மாநாட்டை சென்னையில் வருகிற நவம்பர் மாதம் நடத்தவுள்ளோம். இந்த மாநாட்டில் பங்கேற்க முதல்வர், துணை முதல்வருக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

தமிழகத்தில் மொத்தம் 2.5 லட்சத்துக்கும் மேற்பட்ட சத்துணவு ஊழியர்கள் உள்ளனர். எங்களது வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஜனவரி முதல் வாரத்தில் கூடி முடிவெடுத்து தேர்தலில் யாருக்கு வாக்களிப்போம் என்பதை தெரிவிப்போம் என்றார் அவர்.

# சிறப்பு தீவிர திருத்தம்: பாதிக்கும் மேற்பட்டோர் ஆவணம் சமர்ப்பிக்க தேவையிருக்காது

## தேர்தல் அதிகாரிகள் தகவல்

**புது தில்லி, செப். 17:** நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யும் பணி தொடங்க உள்ள நிலையில், 'பெரும்பாலான மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இருக்காது' என்று தேர்தல் அதிகாரிகள் புதன்கிழமை தெரிவித்தனர்.

பிகார் மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இதில் முதல் கட்டமாக, அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்க உள்ள தமிழகம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் நிகழாண்டு இறுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது. இதற்காக, முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளுமாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

முன்னதாக, பிகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க மறுத்தது பெரும் சர்ச்சையானது. இதுதொடர்பான வழக்கில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் அனுமதிக்கப்பட்ட கடவுச் சீட்டு, பிறப்புச் சான்று உள்பட 11 ஆவணங்களுடன் ஆதார் அட்டையையும் 12-ஆவது அடையாள ஆவணமாக ஏற்குமாறு தேர்தல் ஆணையத்தை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.

அதனடிப்படையில், ஆதார் அட்டையையும் வாக்காளர்களின் அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்றது. அதேநேரம், ஆதாரை குடியுரிமை ஆவணமாக ஏற்க முடியாது என்பதையும் தெளிவுபடுத்தியது. இதனிடையே, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக பிகார் மாநிலத்துக்கு பிறப்பித்த உத்தரவு, நாடு முழுமைக்கும் பொருந்தும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், பெரும்பாலான மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது பாதிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் எந்தவொரு ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தேர்தல் அதிகாரிகள் புதன்கிழமை கூறியதாவது: பிகாரில் கடைசியாக கடந்த 2003-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யப்பட்டது. எனவே, 2003-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, அந்த மாநிலத்தில் அண்மையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, 2003-ஆம் ஆண்டுக்கு முன்பு பிகாரில் வாக்காளர்களாகப் பதிவு செய்த 60 சதவீதம் பேர், அண்மையில் நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தத்தின்போது கூடுதல் ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்காமல், வாக்காளர்களாகத் தொடர அனுமதிக்கப்பட்டனர். ஆனால், 2003-க்குப் பிறகு வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்கள் உள்பட 40 சதவீதம் பேர், 12 ஆவணங்களில் ஏதாவது ஒன்றைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

அதுபோல, பெரும்பாலான மாநிலங்களில் 2002 மற்றும் 2004-ஆம் ஆண்டுகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆண்டின் வாக்காளர் பட்டியல் அடிப்படையிலேயே தற்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படும். இதற்கான தேதியை தேர்தல் ஆணையம் விரைவில் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், முந்தைய வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் அடிப்படையிலான வாக்காளர் பட்டியலை பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடத் தயாராக இருக்குமாறு அனைத்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளையும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. இதில் சில மாநிலங்கள் இந்த வாக்காளர் பட்டியலை தங்களின் வலைதளங்களில் வெளியிட்டுவிட்டன.

குறிப்பாக, தமிழகத்தில் முந்தைய சிறப்பு தீவிர திருத்தத்தின் அடிப்படையில் 2002-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலும், தில்லியில் 2008-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலும், உத்தரகண்டில் 2006-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, இந்த ஆண்டுகளுக்கு முன்னரே வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்கள் தற்போதைய சிறப்பு தீவிர திருத்தத்தின்போது எந்தவொரு கூடுதல் ஆவணங்களையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை. அதன்படி, பல்வேறு மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் எந்தவொரு கூடுதல் ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமிருக்காது என்றனர்.

## பிரதமர் மோடி பிறந்த நாள்

# நாடு முழுவதும் பாஜக கொண்டாட்டம்

**புது தில்லி, செப். 17:** பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளையொட்டி, நாடு முழுவதும் பாஜக சார்பில் புதன்கிழமை (செப்.17) கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பிரதமரின் பிறந்த நாளில் இருந்து காந்தி ஜெயந்தி வரை (அக்.2) இரண்டு வார கால சேவை பிரசாரத்தையும் பாஜக தொடங்கியது.

குஜராத்தின் மெஹ்சனா மாவட்டத்தில் உள்ள சிறிய நகரான வத்நகரில் சாதாரண குடும்பத்தில் கடந்த 1950, செப்டம்பர் 17-ஆம் தேதி பிறந்தவர் பிரதமர் மோடி.

ஆர்எஸ்எஸ் பிரசாரகராக பயணத்தை தொடங்கியதில் இருந்து நாட்டின் பிரதமரானது வரை அவரது அரசியல் பயணம் நீண்ட நெடியது; பல்வேறு சவால்களை உள்ளடக்கியது.

கடந்த 1980-களில் வாஜ்பாய், எல்.கே.அத்வானி ஆகியோரின் இரட்டை தலைமையின்கீழ் காங்கிரஸுக்கு பிரதான சவாலாக பாஜக உருவெடுத்தது என்றால், கடந்த 2014-இல் பாஜகவை பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்திய மோடியின் தலைமையால் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகவே தொடர்கிறது.

தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற காங்கிரஸ் அல்லாத முதல் பிரதமர், நேருவுக்கு அடுத்து தொடர்ந்து நீண்ட காலம் பிரதமராக பதவி வகிக்கும் இரண்டாவது பிரதமர் என்ற பெருமைகளுக்கு உரியவர்.

அவரது பிறந்த நாளை பாஜகவினர் உற்சாகத்துடன் கொண்டாடினர். அக்கட்சி சார்பில் இரண்டு வார கால சேவை பிரசாரம் தொடங்கப்பட்டது. இக்காலகட்டத்தில் மருத்துவ முகாம்கள், தூய்மை இயக்கம், கருத்தரங்குகள், உள்ளூர் பொருள்களை ஊக்குவிக்கும் கண்காட்சிகள், ரத்த தான முகாம்கள், ஓவியப் போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

மத்திய அரசு மற்றும் பாஜக ஆளும் மாநில அரசுகள் சார்பில் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**சொந்த ஊரில்..:** பிரதமர் மோடியின் சொந்த ஊரான வத்நகரில் அவரது உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

**வாரணாசியில் சிறப்பு வழிபாடு:** பிரதமர் மோடியின் பிறந்த நாளையொட்டி, அவரது தொகுதியான வாரணாசியில் (உ.பி.) உள்ள காசி விஸ்வநாதர் கோயிலில் புதன்கிழமை சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.



பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த தினத்தை முன்னைட்டு தில்லியில் உள்ள பாலிகா பூங்காவில் புதன்கிழமை நடைபெற்ற தூய்மை பிரசார நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 75 கிலோ லட்டு.

## நிர்வாகத் திறனால் சிறந்த உலகத் தலைவராக உருவெடுத்தவர் மோடி

### புதின் புகழாரம்

**மாஸ்கோ, செப். 17:** சிறந்த நிர்வாகத் திறனால் இந்தியாவை வலுவான நாடாக முன்னிறுத்தியதன் மூலம் நாட்டு மக்களின் உயர்ந்த மரியாதையைப் பெற்றதுடன் சிறந்த உலகத் தலைவராக பிரதமர் நரேந்திர மோடி உருவெடுத்துள்ளார் என்று ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் புகழாரம் சூட்டியுள்ளார்.

புதின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், 'இந்திய-ரஷியா உறவை மேம்படுத்தியதில் பிரதமர் மோடியின் பங்களிப்பு வெகு சிறப்பு வாய்ந்தது. சிறந்த நிர்வாகத் திறனால் இந்தியாவை வலுவான நாடாக முன்னிறுத்தியதன் மூலம் நாட்டு மக்களின் உயர்ந்த மரியாதையைப் பெற்றதுடன் சிறந்த உலகத் தலைவராக மோடி உருவெடுத்துள்ளார்' என்று கூறியுள்ளார். தொலைபேசியில் பிரதமர் மோடியை தொடர்பு கொண்டும் புதின் வாழ்த்து தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், 'உங்கள் வாழ்நாளில் இந்தியாவுக்காக நீங்கள் நிறைய சாதனைகளில் பங்களித்துள்ளீர்கள். நாம் இணைந்து இந்திய-இஸ்ரேல் நட்புறவின் மூலமும் அதிகம் சாதித்துள்ளோம். இரு நாட்டு உறவு தொடர்ந்து வலுவடைய வேண்டும்' என்று கூறியுள்ளார்.

மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் விடியோ மூலம் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், 'உலகின் வளர்ச்சியில் இந்தியா சிறப்பான பங்களிப்பை செலுத்தி வருகிறது. நல்ல ஆரோக்கியத்துடன் இதேபோல வலுவாக தொடர்ந்து பணியாற்ற பிறந்த நாளில் வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனேசி, நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன், பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக், ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வோன்டர் லேயென் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களும் பிரதமர் மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பிரதமர் மோடியை தொலைபேசியில் செவ்வாய்க்கிழமை தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

## குடியரசுத் தலைவர் புகழாரம்

தனது தலைசிறந்த தலைமை மற்றும் உச்சபட்சமான கடின உழைப்பின் வாயிலாக நாட்டில் மிக உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை எட்டும் கலாசாரத்தை பிரதமர் மோடி வளர்த்துள்ளார். அவரது வழிகாட்டுதலின் மீது சர்வதேச சமூகம் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது என குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்:** பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், உலக அரங்கில் முத்திரை பதித்து, வளர்ந்த நாடு என்ற இலக்கை நோக்கி உறுதியுடன் பயணிக்கிறது இந்தியா. தேசத்தின் சேவைக்காக, அவர் நீண்ட, ஆரோக்கியமான, நிறைவான வாழ்வை வாழ வாழ்த்துகள்.

**மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா:** பிரதமரின் திறன்மிக்க தலைமையின்கீழ், வளர்ந்த இந்தியாவை உருவாக்க ஒவ்வோர் இந்தியரும் அயராமல் பாடுபடுகின்றனர்.

**உள்துறை அமைச்சர் அமித் ஷா:** 50 ஆண்டுகளுக்கும் மேலாக அயராமல் மக்கள் பணியாற்றி வருபவர் பிரதமர் மோடி. தேசமே முதன்மையானது என்ற லட்சியத்துக்கு வாழும் உதாரணம் அவர்.

**பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்:** பிரதமரின் தொலைநோக்கு தலைமைத்துவம், அர்ப்பணிப்பு, அயராத கடின உழைப்பு ஆகியவை நாட்டுக்கு புதிய சக்தி மற்றும் திசையை வழங்கியுள்ளது.

**முன்னாள் பிரதமர் ஹெச்.டி.தேவெகௌடா:** காங்கிரஸால் மட்டுமே நாட்டின் ஒற்றுமை, நிலைத்தன்மையை பராமரித்து, நல்லாட்சி வழங்க முடியும் என்று கட்டமைக்கப்பட்ட கட்டுக்கதையை தகர்த்தெறிந்தவர் பிரதமர் மோடி.

**திபெத் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா:** இந்தியாவின் நீண்ட கால விருந்தினரான நான், சமீப ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தொலைநோக்கு வளர்ச்சி மற்றும் வளமையை கண்கூடாக காண்கிறேன். நல்லிணக்கம்-ஸ்திரத்தன்மைக்கு உலகுக்கு உதாரணமாக விளங்குகிறது இந்தியா.

**கார்கே, ராகுல் வாழ்த்து:** காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, 'பிரதமர் மோடி நல்ல ஆரோக்யம் மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, 'பிரதமர் மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்; அவர் உடல் நலத்துடன் வாழ வாழ்த்துகிறேன்' என்று கூறியுள்ளார்.

**தமிழக முதல்வர் வாழ்த்து:** பிரதமர் நரேந்திர மோடி பிறந்த தினத்தையொட்டி, அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்தார்.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் அவர் புதன்கிழமை வெளியிட்ட பதிவு: இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். அவர் நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

### விஸ்வகர்மா ஜெயந்தி!


விஸ்வகர்மாவின் ஜெயந்தி தினத்தையொட்டி திரிபுரா மாநிலம் அகர்தலாவில் உள்ள ஒரு காவல் நிலையத்தில் இயந்திர துப்பாக்கிகளுக்கு பூஜை செய்த அர்ச்சகர்.

## விஸ்வகர்மா ஜெயந்தி: பிரதமர் வாழ்த்து

**புது தில்லி, செப். 17:** விஸ்வகர்மா ஜெயந்தியையொட்டி, மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

படைப்பு தொழில்களின் கடவுளான விஸ்வகர்மாவின் ஜெயந்தி தினம், பல்வேறு மாநிலங்களில் புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'படைப்பாளரை வழிபடும் இப்புனிதமான தருணத்தில், புதிய படைப்பில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகள். வலுவான, வளமான மற்றும் திறன்மிக்க இந்தியாவை உருவாக்குவதில் படைப்பாளர்களின் திறமையும் கடின உழைப்பும் மதிப்புமிக்கவை' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் ஏற்றுமதி 6% உயரும்: பியூஷ் கோயல் நம்பிக்கை

**மும்பை, செப். 17:** கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், நடப்பாண்டில் நாட்டின் ஏற்றுமதி 6 சதவீதம் உயரும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் புதன்கிழமை நம்பிக்கை தெரிவித்தார்.

உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் இந்தியாவின் வர்த்தக செயல்பாடுகள் வலுவாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். மும்பையில் செய்தியாளர்களுக்கு புதன்கிழமை அளித்த பேட்டியில் பியூஷ் கோயல் கூறியதாவது:

இந்தியப் பொருளாதாரம் 4 டிரில்லியன் டாலர் (ரூ.350 லட்சம் கோடி) என்பதில் இருந்து 30 டிரில்லியன் டாலர் (ரூ.2,633 லட்சம் கோடி) என்ற இலக்கை நோக்கி நகர்கிறது. வலுவான வளர்ச்சியால், தொழில் புரிவதற்கு ஏற்ற இடமாக இந்தியா மாறியுள்ளது. ஒட்டுமொத்த உலகும் இந்தியாவுடன் நெருங்கி செயலாற்ற விரும்புகிறது.

உலக அளவில் வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக விளங்கும் இந்தியாவில் ஜிஎஸ்டி 2.0 (வரி விகிதங்கள் குறைப்பு) அமலாக்கத்துக்குப் பின் நுகர்வோர் தேவை அதிகரிக்கும். உள்கட்டமைப்புத் திட்டங்களும் உத்வேகம் பெறும். இது, முதலீடு அதிகரிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், வர்த்தக-தொழில் விரிவாக்கத்துக்கு மேலும் ஊக்கமளிக்கும். கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், நாட்டின் ஏற்றுமதி 6 சதவீதம் உயரும். வேலையின்மை விகிதம் 5.1 சதவீதமாக குறைந்துள்ளது.

பல்வேறு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன. இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையே இறுதிச் சுற்று பேச்சுவார்த்தை சிறப்பாக நடந்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்துடன் வெறும் 88 நாள் பேச்சுவார்த்தையில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.

உலக அளவில் மிக விரைவாக எட்டப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இது.

ஆப்பிரிக்க பிராந்தியம், வளைகுடா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் வாயிலாக விளங்கும் ஐக்கிய அரபு அமீரகம், இந்தியாவின் முக்கிய வர்த்தக கூட்டாளியாகும்; 25 லட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வாழ்கின்றனர்.

அந்நாட்டுடன் இருதரப்பு வர்த்தகம் வேகமாக வளர்வதுடன், முதலீடுகளும் அதிகரிக்கின்றன. பெரு, சிலி, நியூஸிலாந்து, ஓமன் ஆகிய நாடுகளுடனும் தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்றார் அவர்.


மும்பையில் பிரதமரின் பிறந்தநாளையொட்டி, தூய்மைப் பணியில் ஈடுபட்ட பள்ளி மாணவிகளைப் பாராட்டிய மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்.

### 'இந்தியா-அமெரிக்கா உறவு நேர்மறையானது'

இந்தியா - அமெரிக்கா இடையே மீண்டும் வர்த்தகப் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ள நியைில், இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த கோயல், 'இந்தியாவும், அமெரிக்காவும் நட்பு நாடுகள். இரு நாடுகளின் தலைவர்களும் நண்பர்கள். இருதரப்பு நல்லுறவு நேர்மறையாகவே தொடர்கிறது. அனைத்து சூழ்நிலைகளுக்கும் திருப்திகரமான தீர்வு எட்டப்படும்' என்றார்.

## நிகழாண்டுக்குள் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

### ஐரோப்பிய யூனியன்

**புது தில்லி, செப். 17:** இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே நிகழாண்டு இறுதிக்குள் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய யூனியனின் வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கொள்கையின் பிரதிநிதி காஜா காலஸ் வெளியிட்ட ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

புவி அரசியல் நிலவரங்கள் மாறி வரும் சூழலில், இந்தியாவுடன் ஐரோப்பிய யூனியன் கொண்டிருக்கும் நெருங்கிய கூட்டுறவின் முக்கியத்துவம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

**உறவுக்கு குறுக்கே ரஷியா:** ரஷியாவின் ராணுவப் பயிற்சிகளில் இந்தியாவின் பங்கேற்பு, ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது ஆகியவை இந்தியா-ஐரோப்பிய யூனியன் உறவுக்கு குறுக்கே இடர்ப்பாடாக இருக்கிறது. ஏனெனில் இந்தியா-ஐரோப்பிய யூனியன் உறவு என்பது வர்த்தகம் சார்ந்தது மட்டுமல்ல; அது விதிமுறைகளை அடிப்படையாக கொண்ட உலக ஒழுங்குக்கு ஆதரவாக இருப்பதையும் சார்ந்துள்ளது.

பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கியத் துறைகளில் இந்தியா-ஐரோப்பிய யூனியன் ஒன்றிணைந்து செயல்படுவதை அதிகரிப்பதற்கு உத்திசார்ந்த புதிய செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல்திட்டம் இருதரப்புக்கு இடையே உள்ள உறவில் முக்கிய மைல்கல்லாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வோன்டர் லேயென் கூறுகையில், 'ஏற்கெனவே இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக ஐரோப்பா உள்ளது. இந்நிலையில், நிகழாண்டுக்குள் இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் ஐரோப்பிய ஆணையம் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய செயல்திட்டம் இருதரப்புக்கு இடையிலான வர்த்தகம், முதலீடு உள்ளிட்டவற்றை மேம்படுத்தும். கூட்டுப் பொருளாதார பாதுகாப்பை வலுப்படுத்தி, பாதுகாப்புத் துறையில் தொழில் துறை ஒத்துழைப்பை ஆழமாக்கும்' என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளும் புதிய செயல்திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதன் பின்னர், அது அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் நடைபெறக் கூடிய இந்தியா-ஐரோப்பிய யூனியன் உச்சிமாநாட்டில் ஏற்கப்படும்.

## உலக அளவில் சிறந்த 100 வணிக கல்வி நிறுவனங்கள்: பெங்களூரு, அகமதாபாத், கொல்கத்தா ஐஐஎம்-கள் இடம்பெற்றன

**புது தில்லி, செப்.17:** உலக அளவில் சிறந்த 100 வணிக கல்வி நிறுவனங்களின் பட்டியலில் பெங்களூரு, அகமதாபாத், கொல்கத்தா ஐஐஎம்கள் இடம்பிடித்துள்ளன.

இதுதொடர்பாக பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள உலகளாவிய உயர்கல்வி பகுப்பாய்வு நிறுவனமான குவாக்கரெல்லி சைமன்ட்ஸ் (க்யூஎஸ்) வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில், உலக அளவில் வணிக கல்வியில் சிறந்து விளங்கும் முதல் 100 கல்வி நிறுவனங்களில் இந்தியாவின் 14 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் கடந்த ஆண்டு 53-ஆவது இடத்தில் இருந்த இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் (ஐஐஎம்)-பெங்களூரு நிகழாண்டு ஓரிடம் முன்னேறி 52-ஆவது இடம் பிடித்துள்ளது. அகமதாபாத் ஐஐஎம் 2 இடங்கள் முன்னேறி 56-ஆவது இடத்தையும், கொல்கத்தா ஐஐஎம் 64-ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

மொத்தம் 80 நாடுகள் மற்றும் நில பிரதேசங்களில் உள்ள 390 கல்வி நிறுவனங்களை பகுப்பாய்வு செய்து இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதுகுறித்து க்யூஎஸ் நிறுவனத்தின் தலைவர் நன்சியோ குவாக்கரெல்லி கூறுகையில், இந்திய வணிக கல்லூரிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டி வருவதாக தெரிவித்தார்.

**வணிக கல்வி நிறுவனம் (க்யூஎஸ் தரவரிசை)**

| | |
|---|---|
| 1 | பென் (அமெரிக்கா) |
| 2 | ஹார்வர்ட் வணிக கல்லூரி (அமெரிக்கா) |
| 3 | எம்ஐடி ஸ்லோன் (அமெரிக்கா) |
| 4 | ஸ்டான்ஃபோர்ட் கிராஜுவேட் வணிக கல்லூரி (அமெரிக்கா) |
| 5 | ஹெஇசி பாரீஸ் (பிரான்ஸ்) |
| 6 | லண்டன் வணிக கல்லூரி (பிரிட்டன்) |
| 7 | கேம்பிரிட்ஜ் ஜட்ஜ் (பிரிட்டன்) |
| 8 | இன்ஸீட் (பிரான்ஸ்) |
| 9 | நார்த்வெஸ்டர்ன் கெல்லாக் (அமெரிக்கா) |
| 10 | கொலம்பியா வணிக கல்லூரி (அமெரிக்கா) |

## உத்தரகண்டில் மழை, வெள்ளம்: 2,500 சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவிப்பு

**டேராடூன், செப்.17:** உத்தரகண்டில் மழை, வெள்ளம் காரணமாக முசௌரியில் சுமார் 2,500 சுற்றுலாப் பயணிகள் சொந்த ஊர் திரும்ப முடியாமல் சிக்கித் தவித்து வருகின்றனர்.

கடந்த 2 மாதங்களாக மழை, வெள்ளம், நிலச்சரிவுகளால் உத்தரகண்ட், ஹிமாசல பிரதேச மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்நிலையில், அந்த மாநிலங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் மிக பலத்த மழை பெய்தது.

உத்தரகண்டில் மேகவெடிப்பால் பலத்த மழை பெய்து வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டதில் 18 பேர் உயிரிழந்தனர். 16 மாயமாகினர். பல்வேறு இடங்களில் சிக்கிய 900-க்கும் மேற்பட்டோரை மீட்கும் பணி நடைபெற்றது.

மழை, வெள்ளத்தால் கடுமையாகப் பாதிப்பு ஏற்பட்டபோதிலும், அத்தியாவசிய சேவைகளை விரைந்து இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்தார்.

அந்த மாநிலத்தில் உள்ள மலை வாசஸ்தலமான முசௌரிக்குச் செல்லும் பாதை கடுமையாக சேதமடைந்துள்ளது. இதனால் அங்கு சுமார் 2,500 சுற்றுலாப் பயணிகள் சொந்த ஊர் திரும்ப முடியாமல் பரிதவித்து வருகின்றனர்.


உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் வெள்ளத்தால் சேதமடைந்த கட்டடம். நாள்: புதன்கிழமை

### ஹிமாசலில் ரூ.4,582 கோடிக்கு சேதம்

ஹிமாசல பிரதேசத்தில் 2 நாள்கள் மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிட மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி தலைமையில் உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. சிம்லாவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில், 'செப்டம்பரில் ஹிமாசல பிரதேசத்தில் மழை 136 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது. அபாயகரமான கட்டடங்களில் தங்கியுள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

நிகழாண்டு மழைக்காலத்தில் மாநிலத்தில் இதுவரை 417 பேர் உயிரிழந்தனர். 45 பேரை காணவில்லை. ரூ.4,582 கோடிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது' என்றார்.

இதுகுறித்து அந்த மாநில அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த ஜூன் 20 முதல் தொடங்கிய மழைக்காலத்தில் பலத்த மழை, வெள்ளம், நிலச்சரிவால் 1,500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை இழந்தன. 46 மேகவெடிப்புகள், 98 வெள்ளம், 145 நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன' என்று தெரிவித்தனர்.

# நடிகை திஷா பாடனி வீடு முன்பு துப்பாக்கிச்சூடு: இருவர் மீது என்கவுன்டர்

**புது தில்லி, செப்.17:** ஹிந்தி நடிகை திஷா பாடனி வீடு முன்பு துப்பாக்கிச்சூடு நடத்திய இருவரை காவல் துறையினர் புதன்கிழமை என்கவுன்டரில் சுட்டுக் கொன்றனர்.

உத்தரபிரதேச மாநிலம் பரேலி மாவட்டத்தில் உள்ள திஷா பாடனியின் வீட்டுக்கு வெளியே கடந்த செப்.12-ஆம் தேதி அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கியால் பலமுறை சுட்டபின் தப்பிச் சென்றனர்.

இது அந்தப் பகுதியில் பீதியை ஏற்படுத்தியது.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளோரிடம் பணம் பறிப்பதற்கு மிரட்டல் விடுக்கும் தந்திரமாக இந்த சம்பவம் நடைபெற்றிருக்கக் கூடும் என்று காவல் துறை சந்தேகித்தது.

கண்காணிப்பு கேமரா காட்சிகள், உளவுத் தகவல்கள், அண்டை மாநிலங்களில் இருந்து கிடைத்த ஆவணங்கள் மூலம், துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் கோல்டி பிரார், ரோஹித் கொதாரா ஆகிய தாதாக்களின் கும்பலைச் சேர்ந்த ரவீந்திரா, அருண் ஆகியோர் என்பதை உத்தர பிரதேச காவல் துறை உறுதி செய்தது.

அவர்கள் இருவரும் ஹரியாணாவைச் சேர்ந்தவர்கள் என்பதால் தில்லி, உத்தர பிரதேசம், ஹரியாணா காவல் துறை கூட்டாக தேடிவந்தன.

காஜியாபாதில் இருந்த ரவீந்திராவையும், அருணையும் பிடிக்க உத்தர பிரதேசம், தில்லி காவல் துறை புதன்கிழமை முயன்றபோது, இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.

இதில் ரவீந்திராவும் அருணும் பலத்த காயமடைந்து உயிரிழந்தனர். உத்தர பிரதேசம், தில்லி காவல் துறையைச் சேர்ந்த 4 பேர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புள்ள மற்றவர்களை கண்டுபிடிக்க தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ரூ.2 லட்சம் கோடி முதலீட்டுக்கு வழி வகுத்துள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தம்

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்

**விசாகப்பட்டினம், செப்.17:** 'மத்திய அரசு மேற்கொண்ட ஜிஎஸ்டி சீர்திருத்தம் மக்களின் கைகளில் அதிக பணம் இருப்பதை உறுதி செய்யும் என்பதோடு, நாட்டின் பொருளாதாரத்தில் ரூ. 2 லட்சம் கோடி முதலீடு செய்யப்படுவதற்கும் வழி வகுத்துள்ளது. இல்லையெனில், அந்தத் தொகை வரியாக வசூலிக்கப்பட்டிருக்கும்' என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

நாட்டில் 5%, 12%, 18%, 28% ஆகிய நான்கு விகிதங்களில் ஜிஎஸ்டி வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், அவை 5% மற்றும் 18% என இரு விகிதங்களாக குறைக்கப்பட்டுள்ளன. உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் பொருள்கள் மற்றும் ஆடம்பர பொருள்களுக்கு புதிதாக 40 சதவீத வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வரும் செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் இந்த வரி விகிதக் குறைப்பு அமலாகிறது.

இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது:

ஜிஎஸ்டி சீர்திருத்தம் காரணமாக 12 சதவீத ஜிஎஸ்டி விதிப்பின் கீழ் இருந்த 90 சதவீத நுகர்வோர் பொருள்கள், 5 சதவீத வரி விகிதத்தின் கீழ் வந்துள்ளன. அதுபோல, 28 சதவீத ஜிஎஸ்டி விதிப்பின் கீழ் இருந்த 90 சதவீத பொருள்கள், 18 சதவீத ஜிஎஸ்டி வரம்புக்குள் வந்துள்ளன.

இந்த வரிக் குறைப்பு காரணமாக, நுகர்வோர் பொருள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் பல பெரிய நிறுவனங்கள், பொருள்களின் விலையை தாமாக குறைக்க முன் வந்துள்ளன. அதாவது, ஜிஎஸ்டி சீர்திருத்தம் வரும் 22-ஆம் தேதி நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, அதன் பலன் நுகர்வோரைச் சென்றடைய உள்ளது.

இந்த 2 விகித ஜிஎஸ்டி சீர்திருத்தம் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தில் ரூ. 2 லட்சம் கோடி முதலீடு செய்யப்படுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

மக்களின் கைகளில் அதிக பணம் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தம் மேற்கொள்ளாவிடில், அந்தப் பணம் வரியாக வசூலிக்கப்பட்டிருக்கும் என்றார்.



ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஜிஎஸ்டி சீர்திருத்தம் தொடர்பான கலந்துரையாடலில் பேசிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

# 22 மாநிலங்களுக்கு ரூ.3.6 லட்சம் கோடி வட்டியில்லா கடன்

'50 ஆண்டுகளுக்கு வட்டி இல்லாத கடனுதவி திட்டத்தின் கீழ் 22 மாநிலங்களுக்கு இதுவரை ரூ. 3.6 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது' என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

விசாகப்பட்டினத்தில் புதன்கிழமை நடைபெற்ற இந்திய தொழில்கூட்டமைப்பின் (சிஐஐ) வர்த்தக மாநாட்டில் பங்கேற்ற அவர் பேசியதாவது:

கடந்த 2013-14-ஆம் ஆண்டில் இந்தியாவின் மூலதன முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 1.7 சதவீதமாக இருந்தது, 2024-25-ஆம் ஆண்டில் 4.1 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டுக்கான வாய்ப்புகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரவைப் பெறும் வகையில், 50 ஆண்டுகள் வட்டியில்லா கடனுதவித் திட்டத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் கீழ், அனைத்து மாநிலங்களுக்கும் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 3.6 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதை 22 மாநிலங்கள் பயன்படுத்தியுள்ளன. இதன் மூலம், மாநிலங்கள் தங்களின் சொந்த வளங்களிலிருந்து மேற்கொள்ளும் மூலதன செலவினம் 10 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளது என்றார்.

மேலும், 'மத்திய பாஜக அரசின் கடந்த 11 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 88 புதிய விமான நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்படும் நிலைக்கு கொண்டுவரப்பட்டன. 31,000 கி.மீ. தொலைவுக்கு புதிய ரயில் வழித் தடம் போடப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் வழித் தடம் 4 மடங்குக்கு மேல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. துறைமுகங்களின் திறன் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் வழித்தடம் 60 சதவீதத்துக்கும் மேல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பிரதமர், அவரின் தாயார் தொடர்பான ஏஐ விடியோவை நீக்க வேண்டும்

## காங்கிரஸுக்கு பாட்னா உயர்நீதிமன்றம் உத்தரவு

**பாட்னா, செப். 17:** பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரின் மறைந்த தாயாரைச் சித்தரித்து செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட விடியோவை சமூக ஊடக பக்கங்களிலிருந்து நீக்குமாறு காங்கிரஸ் கட்சிக்கு பாட்னா உயர்நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

வழக்குரைஞர் விவேகானந்த் சிங் மற்றும் பிறர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இது தொடர்பான மனுவை விசாரித்த பாட்னா உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி பி.பி.பஜந்த்ரி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

'இந்த விடியோ அவதூறான வெளியீடு மட்டுமன்றி, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் அரசியல் கட்சிகளுக்கு உள்ள கட்டுப்பாடுகளையும் மீறும் செயல்' என்று தங்களின் மனுவில் அவர்கள் குறிப்பிட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மத்திய அரசு, இந்தியத் தேர்தல் ஆணையம் ஆகியோரை பிரதிவாதிகளாக தங்களின் மனுவில் அவர்கள் சேர்த்திருந்தனர்.

மனுவை விசாரித்த தலைமை நீதிபதி (பொறுப்பு) பஜந்த்ரி, சர்ச்சைக்குரிய விடியோவை தனது ஊடக பக்கங்களிலிருந்து நீக்குமாறு காங்கிரஸ் கட்சிக்கு உத்தரவிட்டார்.

இதுகுறித்து மத்திய அரசுத் தரப்பில் வழக்கு விசாரணையில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் கே.என்.சிங் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'வழக்கின் அடுத்த விசாரணை தேதி வரை காங்கிரஸ் கட்சி தனது சமூக ஊடக பக்கங்களில் இந்த விடியோவை இடம்பெறச் செய்யக் கூடாது என்று உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது' என்றார்.

தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் சித்தார்த் பிரசாத் கூறுகையில், 'இந்த விடியோ வெளியீடு தொடர்பாக பதிலளிக்குமாறு முகநூல், எக்ஸ், கூகுள் வலைதள நிறுவனங்களுக்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டது' என்றார்.

செயற்கை நுண்ணறிவு விடியோவில் பிரதமர் மோடியின் கனவில் அவரது தாயார் தோன்றி, அவரது அரசியல் செயல்பாடுகளை விமர்சிப்பது போன்று சித்தரிக்கப்பட்டிருந்தது. இது, தாய்-மகனின் சுவாரஸ்யமான உரையாடல் என்றும் பிகார் காங்கிரஸ் பதிவிட்டது.

இதற்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்தது. 'ராஜதர்மம் குறித்து ஒரு மகனுக்கு தாயார் கற்பிக்க முயற்சிப்பதில் என்ன தவறு இருக்கிறது?' என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியது.

# வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படம்

## பிகார் தேர்தலில் அறிமுகம்

**புது தில்லி, செப்.17:** பிகார் சட்டப்பேரவைத் தேர்தல் முதல் அனைத்து தேர்தல்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் இடம்பெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2015-ஆம் ஆண்டுமுதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் ஒட்டப்படும் வேட்பாளர்களின் புகைப்படங்கள் கருப்பு வெள்ளை நிறத்தில் உள்ளன. இதனால் வாக்களிக்கும்போது வேட்பாளர்களை அடையாளம் காண்பதில் வாக்காளர்களுக்கு சிரமம் நிலவுகிறது. இந்நிலையில், தேர்தல் ஆணையம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் ஒட்டப்படும் வேட்பாளர்களின் புகைப்படங்கள், மேலும் தெளிவாக தெரியும் வகையில் அச்சடிக்க, தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961-இன் 49பி பிரிவின் கீழ் உள்ள வழிகாட்டுதல்கள் திருத்தப்பட்டுள்ளன. இதையடுத்து வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் ஒட்டப்படும். அந்த இயந்திரங்களில் புகைப்படங்கள் இடம்பெறும் இடத்தில் வேட்பாளரின் முகம் பெரிதாக இடம்பெறும். இந்த நடைமுறை பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் இருந்து அனைத்து தேர்தல்களிலும் பின்பற்றப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இணையவழியில் மிரட்டி பணம் பறிப்பு: பெண் மருத்துவர் மாரடைப்பால் உயிரிழப்பு

**ஹைதராபாத், செப். 17:** ஹைதராபாதில் இணையவழியில் மிரட்டி பணம் பறிக்கும் கும்பலிடம் சிக்கிய ஓய்வுபெற்ற அரசு பெண் மருத்துவர் மாரடைப்பால் உயிரிழந்தார்.

76 வயதாகும் அந்த பெண் மருத்துவரை, கடந்த 5-ஆம் தேதி தொடர்பு கொண்ட அந்த கும்பல், சர்வதேச ஆள் கடத்தல் கும்பல் தொடர்பான வழக்கில் அவரின் பெயரும் இடம் பெற்றுள்ளதாகக் கூறி, போலியான விசாரணை அறிக்கைகள், நீதிமன்றம் உத்தரவுகளைக் காட்டி மிரட்டி பணம் பறித்துள்ளது.

மேலும், இணையவழி கைது என்று தொடர்ந்து மூன்று நாள்கள் வேறு நபர்களைத் தொடர்பு கொள்ள விடாமல் செய்துள்ளனர். மொத்தம் ரூ.6.60 லட்சத்தை அவரது வங்கிக் கணக்கில் இருந்து மிரட்டி பறித்துள்ளனர். இந்நிலையில் கடந்த 8-ஆம் தேதி அவர் மாரடைப்பால் உயிரிழந்தார். அவரது குடும்பத்துக்கு இந்த மிரட்டல் பணப் பறிப்பு தெரியாத நிலையில், அவரது இறுதிச் சடங்கும் முடிந்துவிட்டது.

இந்நிலையில், உயிரிழந்த பெண் மருத்துவரின் கைப்பேசியை அவரது மகன் பரிசோதித்தபோது, அவரை ஒரு கும்பல் மிரட்டி பணம் பறித்தது தெரியவந்தது. அவர் இறந்ததுகூட தெரியாமல் தொடர்ந்து அவரிடம் பணம் கேட்டு மிரட்டி குறுஞ்செய்திகளை அனுப்பி வந்துள்ளனர்.

இதையடுத்து, அந்த பணம் பறிக்கும் கும்பல் பெண் மருத்துவரிடம் பேசிய உரையாடல் பதிவு, வங்கிப் பணப்பரிவர்த்தனை விவரங்கள் உள்ளிட்ட ஆதாரங்களுடன் அவரின் மகன் காவல் துறையில் புகார் அளித்தார்.


sidbi

**இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி**
சிறப்பு கடன்வசூல் கிளை / கடன்வசூல் வெர்டிகல் யூனிட், 756-L, ஓவர்சீஸ் டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை-600 002, போன்: 044-66636019 / 66636055, இணையதளம்: www.sidbi.in

**கேட்பு அறிவிப்பு**

**பிணையநலன் உருவாக்கம் மற்றும் நிதி சொத்துகளை மறுசீரமைத்தல் மற்றும் பிணையநலன் அமலாக்கச் சட்டம் 2002, (சர்பேசிச் சட்டம்) உடன் பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002 பிரிவு 13(2)ன் கீழான கேட்பு அறிவிப்பு**

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI)யால் வழங்கப்படும் Priority Assistance To MSME Based On Hybrid Or Alternate-Security Model (PRATHAM)ன்கீழ் ரூ.1,88,00,000/-, Assistance to Re-Energize Capital Investment By SMES (ARISE)ன்கீழ் ரூ.97,65,000/-, நிதி உதவி ஜெனோம் லேப்ஸ் இன்டர்நேஷனல் (கடன்தாரர்) அனுமதிக்கப்பட்டு, இதற்கென, கடன்தாரர்/அடமானதாரர்/உத்தரவாதமளித்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள அசையும் சொத்துகளின் மீது கீழ்குறிப்பிட்டவாறு பிணையநலன் உருவாக்கியுள்ளார். அடிக்கடி தவணை தவறியதன் விளைவாக கடன்தாரரின் கணக்கு 08.02.2025 அன்று தவணை தவறிய கடன் என வரையறுக்கப்பட்டது. SIDBI வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சர்பேசிச் சட்டம் 2002ன் பிரிவு 13(2)ன் கீழ் கடன்தாரர்/அடமானதாரர்/உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரின் விலாசங்களுக்கு 30.07.2025 அன்று ஒரு கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆயின் மேற்படி அறிவிப்பு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவருக்கு பட்டுவாடா செய்யப்படாததன் விளைவாக இந்தப்பொது அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இந்த வெளியீட்டின் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரருடன், உத்தரவாதமளித்தவர்களும் சேர்ந்து ஒப்பந்தப்படியான வட்டி வீதத்தில் 2% அபராத கட்டணம் ஆண்டொன்றுக்கு, மாதாந்திரம் கணக்கிடப்படும் கூட்டுவட்டி விதத்திலான வட்டியுடன், பிற கட்டணங்களும், நிலுவையிலுள்ள தொகையும் சேர்த்து SIDBI வங்கிக்கு அந்த அறிவிப்பு வெளியான 60 தினங்களுக்குள் செலுத்திவிடுமாறும், தவறினால் பாதுகாக்கப்பட்ட கடன் ஈந்தோர் என்ற முறையில் பிணையநலன் அமலாக்கத்துக்கு சர்பேசிச் சட்டத்தில் மூன்றாம் அத்தியாயத்துடன், பிணையநலன் (அமலாக்க) விதிகள் 2002ன் படியும் தமக்களிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அல்லது அனைத்து அதிகாரங்களின்படியும் பிணையச் சொத்துகளை சுவாதீனம் மேற்கொள்ளும் வரையறை மற்றும் அல்லது வங்கிக்கு பிணையப்படுத்தப்பட்டுள்ள கீழ் குறிப்பிட்டுள்ள பிணையச்சொத்துகளை தங்களது சொந்த இடர்பாடுகள் மற்றும் விளைவுகளின் கீழ் விற்பனை செய்து கீழே குறிப்பிட்டுள்ள நிலுவைகளை வசூலிக்க நேரிடும் எனத் தெரிவிக்கலாகிறது.

| வ. எண் | கடன்தாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) பெயர் மற்றும் விலாசம் | நிலுவைத் தொகை |
|---|---|---|
| 1. | **உரிமையாளர் :** **ஜெனோம் லேப்ஸ் இன்டர்நேஷனல்,** பதிவு அலுவலகம்: எண்.1, நானா தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 600 017. | ரூ.1,10,57,633/– (ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று முப்பத்து மூன்று மட்டும்) உடன் வட்டி, மேல்வட்டி, அபராத வட்டி / அபராத கட்டணத்துடன் மற்றும் பிற கட்டணங்கள் 10.07.2025 வரையான நிலுவை உடன் அதன்பின்னர் ஒப்பந்தப்படியான வட்டி வீதம் மற்றும் 10.07.2025 முதல் SIDBI வங்கிக்கு தொகை முழுதும் செலுத்தும் நாள் வரையானவை சேர்ந்தது. |
| 2. | **திரு.ஆனந்த் துரைசாமி (உத்தரவாதமளித்தவர்),** (i) எண்.24/4, 1வது தளம், கதவு எண்.03, GRN அபார்ட்மெண்ட்ஸ், 45வது தெரு, நங்கநல்லூர், சென்னை – 600 051. (ii) எண்.45/50, தந்தை பெரியார் நகர், 1வது தளம், அயனாவரம், சென்னை – 600 023. (iii) எண்.10, 62, தரைத்தளம், குரு கஸ்தூரி ஃப்ளாட்ஸ், 18வது வீதி, நங்கநல்லூர், சென்னை – 600 061. (iv) எண்.3/63, மண்ணாடியம்மன் கோயில் தெரு, மடிப்பாக்கம், சென்னை – 600 091. | |

**பிணையப்படுத்தப்பட்டுள்ள அசையும் சொத்தின் விபரம்:** கடன்தாரரின் திட்டத்திற்குத் (ப்ராஜெக்ட்) தொடர்புடைய, மற்றும் கீழ்க்கண்ட விலாசங்களிலமைந்த கடன்தாரரின் அனைத்து அசையும் சொத்துக்களின் அடமானம் வழியிலான முதல் ஈடு. (1) தொகுதி எண்.406, TICEL பயோ பார்க், பேஸ்-I, CSIR ரோடு, தரமணி, சென்னை – 600 113, (2) எண்.1, பிளாட் எண்.17 & 18, நானா தெரு, தி.நகர், சென்னை – 600 017, அதன் அசையும் சொத்துகளான ஆலை, இயந்திர பாகங்கள், கருவிகள் மற்றும் உதிரிபாகங்கள், அலுவலக உபகரணங்கள், கணினிகள், பர்னிச்சர் மற்றும் பொருத்திபவைகள் மற்றும் அனைத்துப் பிற அசையும் சொத்துக்கள் உள்ளிட்டு, தற்போது மற்றும் பின்வரும் காலங்களிலும் (சேமிக்க மற்றும் புத்தக வரவினம் தவிர), இந்த அசையும் சொத்துக்கள் நிறுவப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், தற்போது உதிரியாகவோ அல்லது ஒன்றாகத் திரட்டப்பட்டோ, அல்லது கடன்தாரரின் வளாகம், தொழிற்சாலை ஷோரூம்கள் மற்றும் மேலே குறிப்பிட்டபடியானது போன்ற குடோன்கள், அல்லது அடமானப் பாதுகாப்பு தொடரும் காலத்தில் அவ்வப்போது அவ்விடங்களுக்குக் கொண்டு வரப்படுவது அல்லது இருப்பு வைக்கப்படுவது அல்லது மேற்குறிப்பிட்டவை எங்கிருப்பவையாயினும், அல்லது உத்தரவின் பேரில் வேறொருவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளவை அல்லது கடன்தாரரின் மனநிலைக்கேற்ப அல்லது போக்குவரத்தில், கடல் வழி அல்லது விநியோக உத்தரவின் வழியில் அல்லது கடன்தாரரின் சுவாதீனத்தில் உள்ளவை, மாற்றாகவோ அல்லது கூடுதலாகவோ சேர்க்கப்பட்டவை அனைத்தும் இந்த அடமானத்தின் கீழ் வரும். **கருவிகள் போன்ற முக்கியமான இனங்கள் கீழ்வருமாறு:** **Name of the Machinery : 1.** Thermo Fisher ATTUNE Flow cyxtometer - 1 Qty; **2.** Thermo Fisher QUANT STUDIO 5 RT PCR - 1 Qty; **3.** Thermo Fisher NANO DROP 2000 - 1 Qty; **4.** Airscience Advanced duct less fume hoods - 1 Qty; **5.** Thermo Fisher RT PCR test kit set - 1 Qty; **6.** Flow Cytometer with cell sorter - 1 Qty. **தயாரிப்பாளர்/வழங்குபவர் : M/s. பூஜா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்.**

பிணையச்சொத்துகளை மீட்பதில் உள்ள கால அவகாசம் குறித்து சட்டத்தின் பிரிவு 13 (உப பிரிவு 8)ன் ஷரத்துகளுக்கு கடன்தாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேலும் இந்த அறிவிப்பு பெறப்பட்டதன் பின்னர் சட்டத்தின் பிரிவு 13 (உப பிரிவு 13)ன் கீழ் தாங்கள் (கடன்தாரர்/அடமானதாரர்/உத்தரவாதமளித்தவர்கள்) பிணையப்படுத்தப்பட்ட சொத்தினை, விற்பனை, குத்தகை அல்லது பிற ஏதேனும் வழி ஒப்பந்தங்களின் கீழ் (சாதாரண வணிக நடைமுறைகள் தவிர்த்து) SIDBI வங்கியின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி நடவடிக்கை மேற்கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டப் பிரிவு 13 (உப பிரிவு 13)ன் ஷரத்துகளின்படி இதற்கு மாறாக நடவடிக்கை மேற்கொள்வது சட்டத்தின் பிரிவு 29ன்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்த சட்டபூர்வ அறிவிப்பானது SIDBI வங்கிக்கு சட்டப்படி மற்றும் ஒப்பந்தப்படி அல்லது இரண்டின் படியும் மேற்சொன்ன நிதி உதவிகளைப் பொறுத்தவரை தனக்குள்ள எந்த ஒரு உரிமையையும், தீர்வையும் பாதிக்காத வகையில் வெளியிடப்படுகிறது.

ஒம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI)

தேதி : 18.09.2025
இடம் : சென்னை



इंडियन बैंक இந்தியன் வங்கி
इलाहाबाद அலகாபாத்

**சேலையூர் கிளை**
மனை எண்.17 & 18, ஐரன் நகர் காலனி, அகரம் ரோடு, சேலையூர், சென்னை - 73. தொலைபேசி : 044-22291312 மின்னஞ்சல் : selaiyur@indianbank.co.in

**கோரிக்கை அறிவிப்பு வெளியீடு**

**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 11.09.2025 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.**

**பெறுநர், (1) திரு. அப்துல் ரஹமான், (கடன்தாரர்/அடமானதாரர்),** எண்.42, தமிழர் தெரு, கல்கட்டு தோப்பு, திட்டச்சேரி, நாகப்பட்டினம், தமிழ்நாடு - 609 703, **மேலும் இருப்பது :** ஃபிளாட் எண்.S-1, 2வது தளம், ஃபிளாட் எண்.T-1 மற்றும் T2 மூன்றாவது தளம், "மயூரி சன்ஷைன்", மனை எண்.1, பாலாஜி நகர் மெயின் ரோடு, கொளத்தூர், சென்னை - 600 099. **(2) திருமதி. சிராஜுன்னிஷா, (இணை-கடன்தாரர்),** மனை எண்.275/681, ரெட் கிராஸ், படாசங்கா, புரி - 752 001, **மேலும் இருப்பது :** எண்.42, தமிழர் தெரு, கல்கட்டு தோப்பு, திட்டச்சேரி, நாகப்பட்டினம், தமிழ்நாடு - 609 703, **மேலும் இருப்பது :** ஃபிளாட் எண்.S-1, 2வது தளம், ஃபிளாட் எண்.T-1 மற்றும் T2 மூன்றாவது தளம், "மயூரி சன்ஷைன்", மனை எண்.1, பாலாஜி நகர் மெயின் ரோடு, கொளத்தூர், சென்னை - 600 099.

**பொருள் : இந்தியன் வங்கி, சேலையூர் கிளையில் உள்ள தங்கள் கடன் கணக்கு எண்கள்.7662932893, 7662891968 & 7662834397 - சம்பந்தமாக.**

நீங்கள் பெற்ற கடனுக்காக **09.09.2025** வரை செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத்தொகையான **ரூ.2,17,49,860.29 (ரூபாய் இரண்டு கோடியே பதினேழு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று அறுபது மற்றும் பைசா இருபத்து ஒன்பது மட்டும்)** இதில் மேலும் 09.09.2025 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.

**09.09.2025** அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.2,17,49,860.29 (ரூபாய் இரண்டு கோடியே பதினேழு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று அறுபது மற்றும் பைசா இருபத்து ஒன்பது மட்டும்)** திரும்ப செலுத்துமாறு **10.09.2025** தேதியிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது.

நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான **ரூ.2,17,49,860.29** மேலும் 09.09.2025 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணைவைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும். வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

**"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".**

**அட்டவணை**

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

**அடமான சொத்துக்கள் :- சொத்து 1 - அட்டவணை அ :** மனை எண்.1, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை - 600 099-ல் உள்ள 4500 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். சர்வே எண்.137/6, புதிய சர்வே எண்.137/6A3, பிளாக் எண்.40, சர்வே கள எண்.136/2, சர்வே எண்.137/6 பகுதி, டவுன் சர்வே நில பதிவின்படி டவுன் சர்வே எண்.136-ல் அடங்கியுள்ளது. கொளத்தூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.2 மற்றும் 4, தெற்கில் : சர்வே எண்.138/3, கிழக்கில் : 40 அடி ரோடு, மேற்கில் : சர்வே எண்.137/5. **அட்டவணை ஆ :** 4500 சதுர அடி நிலத்திலிருந்து 450 சதுர அடி UDS-ன் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், மயூரி சன் ஷைன், மனை எண்.1, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை - 600 099-ல் உள்ள 1150 சதுர அடி சூப்பர் கட்டிட பரப்பளவு கொண்ட 3வது தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.T-2. ச. எண்.137/6, புதிய ச. எண்.137/6A3, பிளாக் எண்.40, சர்வே நில எண்.136/2, ச. எண்.137/6 பகுதி, டவுன் சர்வே நில பதிவின்படி T.S. எண்.136-ல் அடங்கியுள்ளது. கொளத்தூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது.

**சொத்து 2 - அட்டவணை அ :** மனை எண்.1, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை - 600 099-ல் உள்ள 4500 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். சர்வே எண்.137/6, புதிய சர்வே எண்.137/6A3, பிளாக் எண்.40, சர்வே கள எண்.136/2, சர்வே எண்.137/6 பகுதி, டவுன் சர்வே நில பதிவின்படி டவுன் சர்வே எண்.136-ல் அடங்கியுள்ளது. கொளத்தூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.2 மற்றும் 4, தெற்கில் : சர்வே எண்.138/3, கிழக்கில் : 40 அடி ரோடு, மேற்கில் : சர்வே எண்.137/5. **அட்டவணை ஆ :** 4500 சதுர அடி நிலத்திலிருந்து 450 சதுர அடி UDS-ன் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், மயூரி சன் ஷைன், மனை எண்.1, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை - 600 099-ல் உள்ள 1150 சதுர அடி சூப்பர் கட்டிட பரப்பளவு கொண்ட 2வது தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.S-1. ச. எண்.137/6, புதிய ச. எண்.137/6A3, பிளாக் எண்.40, சர்வே நில எண்.136/2, ச. எண்.137/6 பகுதி. டவுன் சர்வே நில பதிவின்படி T.S. எண்.136-ல் அடங்கியுள்ளது. கொளத்தூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது.

**சொத்து 3 - அட்டவணை அ :** மனை எண்.1, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை - 600 099-ல் உள்ள 4500 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். சர்வே எண்.137/6, புதிய சர்வே எண்.137/6A3, பிளாக் எண்.40, சர்வே கள எண்.136/2, சர்வே எண்.137/6 பகுதி, டவுன் சர்வே நில பதிவின்படி டவுன் சர்வே எண்.136-ல் அடங்கியுள்ளது. கொளத்தூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.2 மற்றும் 4, தெற்கில் : சர்வே எண்.138/3, கிழக்கில் : 40 அடி ரோடு, மேற்கில் : சர்வே எண்.137/5. **அட்டவணை ஆ :** 4500 சதுர அடி நிலத்திலிருந்து 450 சதுர அடி UDS-ன் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், மயூரி சன் ஷைன், மனை எண்.1, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை - 600 099-ல் உள்ள 1150 சதுர அடி சூப்பர் கட்டிட பரப்பளவு கொண்ட 3வது தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.T-1. ச. எண்.137/6, புதிய ச. எண்.137/6A3, பிளாக் எண்.40, சர்வே நில எண்.136/2, ச. எண்.137/6 பகுதி. டவுன் சர்வே நில பதிவின்படி T.S. எண்.136-ல் அடங்கியுள்ளது. கொளத்தூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது.

தேதி : 18.09.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.



**அடையாள சுவாதீன அறிவிப்பு**

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிமிடெட், பிளாட் எண்-23, ஷான் டவர், 3ஆவது தளம், புதிய ரோஹ்தக் சாலை, கரோல் பாக், புது தில்லி-110005

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI பேங்க்-இன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகளில் விதி 3-இன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாள்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரினார்.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் (Symbolic Possession) எடுத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI பேங்க் லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

| வ. எண். | கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண் | சொத்து விவரம் / அடையாள சுவாதீன தேதி | கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின் படி தொகை (ரூ.) | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | [illegible] LBDEH00005139069 | ஃபிளாட் எண். 408, 4ஆவது தளம், [illegible] மும்பை மகாராஷ்டிரா/ 12-09-2025 | 25.06.2021 ரூ.16,08,468/- | [illegible] (மகாராஷ்டிரா)/ சென்னை/ மும்பை |

எனவே, மேற்சொன்ன கடன்தாரர்(களுக்கும்) / ஜாமீன்தாரர்(களுக்கும்) மேற்படி கடன் பாக்கியை செலுத்துமாறு 30 நாள் அறிவிப்பு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. செலுத்தத் தவறினால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 & 9-ன் கீழான ஷரத்துகள்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாள்கள் முடிந்த பின் மேற்படி அடமான சொத்துக்கள் விற்கப்படும்.

தேதி: 18-09-2025
இடம்: சென்னை

உண்மையுள்ள அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI வங்கி லிட்-க்காக



CSB Bank
Trusted Heritage Smart Future
(பதிவு அலுவலகம் : திருச்சூர்)
CIN : L65191KL1920PLC000175

**சொத்து மீட்புக் கிளை**
2வது தளம், சிவா காம்ப்ளக்ஸ், எண்.54, பழைய தபால் அலுவலகம் ரோடு, கோயம்புத்தூர்–641018
போன் : 94435 48411, 9605791659, 9846157188
மின்னஞ்சல் : arbcbe@csb.co.in

**மின்-ஏல அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.**

**CSB வங்கி லிட்–ன் (முன்னர் தி கத்தோலிக் சிரியன் வங்கி லிமிடெட்)** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கி, **திருப்பூர் கிளைக்கு** வரவேண்டிய **31.08.2025** வரையான தொகை **ரூ.3,90,94,900.54 (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூறு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து தொள்ளாயிரம் மற்றும் பைசா ஐம்பத்து நான்கு மட்டும்)** மற்றும் 01.09.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் அபராத வட்டி மற்றும் பிற செலவுகளுடன் சேர்த்து வர வேண்டிய நிலுவைத் தொகையை **கடன்தாரர் / பங்குதாரர்கள் / உத்தரவாதமளித்தவர்கள் : 1. திரு.J.ஸ்ரீநிவாசன்** மற்றும் **2. திருமதி.S.கனகதுர்கா,** இருவரின் வசிப்பிட முகவரி : எண்.21/7, திருநாவுக்கரசுத் தெரு, பெரம்பூர், சென்னை – 600 011 / மாற்று முகவரி : எண்.12B, தணிகாச்சலம் தெரு, பெரம்பூர், சென்னை – 600 011 என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்கு பிணையப்படுத்தப்பட்ட/அடைவைக்கப்பட்ட **CSB வங்கி லிட்–ன் (முன்னர் தி கத்தோலிக் சிரியன் வங்கி லிமிடெட்)** அதிகாரம் பெற்ற அலுவலர் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அடையாள (symbolic)/ஆக்கபூர்வ (constructive) சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை **24.10.2025 தேதியன்று** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்கள், உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்'** மற்றும் **'புகார் ஏற்கப்படா நிலையில்'** விற்கப்படும்.

| குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை | முன் வைப்புத் தொகை (EMD) |
|---|---|
| ரூ.1,41,00,000/– | ரூ.14,10,000/– |

கீழேசொன்ன சொத்துக்களின் இனம் வாரியாக **ஏலக்கேட்பானது** ஒவ்வொரு முறைக்கும் **ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)** என அதிகரிக்கப்படும்.

**(மின்–ஏலத்தில் விற்கப்படும் சொத்துக்களின் விவரங்கள்)**

**அட்டவணை A :** செம்பியம் கிராமம், பிளாக் எண்.30, டவுன் சர்வே எண்.149, பட்டாவின்படி டவுன் சர்வே எண்.149/2 ல், சென்னை – 600 011, பெரம்பூர், தணிகாசலம் வீதி, புதிய கதவு எண்.8, பழைய கதவு எண்.12 ல் உள்ள, கிழமேல் வடபுறம் – 61 அடி, தென்புறம் – 63 மற்றும் தென்வடல் கிழபுறம் 45 அடி, மேல்புறம் 45 அடி சேர்ந்த 2745 சதுரடி கொண்ட காலி வீட்டு மனை. **அட்டவணை B :** அட்டவணை A ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் 1492 சதுரடி அல்லது 138.62 சதுர மீட்டர் பிரியடாத பங்கு நிலம், 'வைடூரியம்' எனப் பெயர் கொண்ட கட்டிடத்தில் அதனோடு கூடிய தரைத் தளம் மற்றும் முதல் தளம் ஃப்ளாட் எண்.A மற்றும் A-1 கொண்ட இரண்டடுக்குப் ஃப்ளாட், சரிவிகிதத்திலமைந்த பொதுப் பகுதி, எண்.3 மற்றும் 4 எனக் குறியிடப்பட்ட பாதுகாக்கப்பட்ட கார் நிறுத்துமிடம். **எல்லைகள் :** வடக்கே – டவுன் சர்வே எண்.125 ல் உள்ள சொத்து, தெற்கே – 6 அடி அகல பொதுப் பாதை, கிழக்கே – தணிகாசலம் வீதி, மேற்கே – டவுன் சர்வே எண்.149/3 ல் உள்ள சொத்து.

**சொத்து விற்பனை ஏலத்தின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு CSB வங்கி லிட்டின் இணையதளத்தில் (www.csb.co.in) "Sale of Property" லிங்க்கினை அணுகலாம். மேலும் மின்–ஏலத்தின் சேவையாளரின் இணையதளத்தினை (https://sarfaesi.auctiontiger.net) அணுகலாம்.**

**மின்–ஏலத் தேதி மற்றும் நேரம் : 24.10.2025; காலை 10.30 மணியிலிருந்து காலை 11.30 மணி வரை (ஏலம் நிறைவடையும் வரைக்குமான, ஒவ்வொன்றும் 5 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்)**

**டெண்டர் ஆவணங்கள் செலுத்த வேண்டிய கடைசித் தேதி (ஆன்லைனில்) : 23.10.2025 நண்பகல் 12 மணிக்கு முன்னதாக. டெண்டரின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்கள் 23.10.2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நண்பகல் 12 மணிக்குள் arbcbe@csb.co.in க்கு அனுப்ப வேண்டும். டெண்டர் ஆவணங்களின் நகலை (hard copy) மூடிமுத்திரையிடப்பட்ட உறையில் 23.10.2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

**மின்–ஏலம் நடைபெறும் போர்டல் : https://sarfaesi.auctiontiger.net**

முன்வைப்புத் தொகை (EMD) செலுத்த கடைசித் தேதி : 23.10.2025; நண்பகல் 12 மணிக்கு முன்னதாக.

**முன்வைப்புத் தொகை, திருச்சூர், கல்லூரிச்சாலை கிளையில் இயக்கப்பட்டுவரும் "CSB மின் – ஏல விற்பனைக் கணக்கு" என்ற கணக்கில், கணக்கு எண். 0231-02593323-195001, IFSC Code CSBK0000231 ல் NEFT/RTGS மூலம் செலுத்தப்பட வேண்டும்.**

மேலும் விபரங்களுக்கு வங்கியின் இணையதளத்தின் (www.csb.co.in) 'Sale of property in CSB Bank Ltd' லிங்க்கினை பரிசீலிக்கவும் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர்/முதன்மை மேலாளர், CSB வங்கி லிட்., சொத்து மீட்பு கிளை, (போன் : 94435 48411, 9605791659, 9846157188, மின் அஞ்சல் : arbcbe@csb.co.in)–ஐ எந்தவொரு வேலை நாளிலும் அலுவலக நேரங்களில் அணுகலாம்.

தேதி : 10.09.2025
இடம் : கோயம்புத்தூர்

ஒம்/– அதிகாரம் பெற்ற அலுவலர்
CSB வங்கி லிட்.



ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

# 'சூப்பர் 4' சுற்றுக்கு பாகிஸ்தான் தகுதி

## அமீரகத்தை வெளியேற்றியது

**துபை, செப். 17:** ஆசிய கோப்பை கிரிக்கெட்டின் 10-ஆவது ஆட்டத்தில், பாகிஸ்தான் 41 ரன்கள் வித்தியாசத்தில் அமீரகத்தை புதன்கிழமை வீழ்த்தியது.

இதையடுத்து பாகிஸ்தான் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேற, அமீரகம் அந்த வாய்ப்பை இழந்தது.

இந்த ஆட்டத்தில் முதலில் பாகிஸ்தான் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ரன்கள் சேர்க்க, அமீரகம் 17.4 ஓவர்களில் 105 ரன்களுக்கே 10 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற அமீரகம், பந்துவீச்சை தேர்வு செய்தது. பாகிஸ்தான் இன்னிங்ஸில், ஃபகார் ஜமான் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உள்பட 50, கேப்டன் சல்மான் அகா 20, முகமது ஹாரில் 18 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

சாஹிப்ஜதா ஃபர்ஹான் 5, சயிம் அயுப் 0, ஹசன் நவாஸ் 3, குஷ்தில் ஷா 4, முகமது நவாஸ் 4, ஹாரிஸ் ரௌஃப் 0 ரன்களுக்கும் விடைபெற்றனர்.

ஓவர்கள் முடிவில், ஷாஹீன் அஃப்ரிதி 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 29 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தார். அமீரக பௌலர்களில் ஜுனைத் சித்திக் 4, சிம்ரன்ஜீத் சிங் 3, துருவ் பராசர் 1 விக்கெட் கைப்பற்றினர்.


ஃபகார் ஜமான் 50


அப்ரார் அகமது 2/13

அடுத்து 147 ரன்களை நோக்கி விளையாடிய அமீரக அணியில், ராகுல் சோப்ரா 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 35, துருவ் பராசர் 20, கேப்டன் முகமது வசீம் 14, அலிஷான் ஷராஃபு 12 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர்.

முகமது ஜோஹைப் 4, ஆசிஃப் கான் 0, ஹர்ஷித் கௌஷிக் 0, ஹைதர் அலி 6, சிம்ரன்ஜீத் சிங் 1, முகமது ரோஹித் 2 ரன்களுக்கு ஆட்டமிழக்க, அமீரக இன்னிங்ஸ் நிறைவடைந்தது.


பாகிஸ்தான் தரப்பில் ஷாஹீன் அஃப்ரிதி, அப்ரார் அகமது, ஹாரிஸ் ரௌஃப் ஆகியோர் தலா 2, சயிம் அயுப், சல்மான் அகா ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

### புள்ளிகள் பட்டியல்

(பாகிஸ்தான் - அமீரகம் ஆட்டம் (10) வரை)

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| குரூப் 'ஏ' | | | | |
| இந்தியா | 2 | 2 | 0 | 4 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| அமீரகம் | 3 | 1 | 2 | 2 |
| ஓமன் | 2 | 0 | 2 | 0 |
| குரூப் 'பி' | | | | |
| இலங்கை | 2 | 2 | 0 | 4 |
| வங்கதேசம் | 3 | 2 | 1 | 4 |
| ஆப்கன் | 2 | 1 | 1 | 2 |
| ஹாங்காங் | 3 | 0 | 3 | 0 |

### இன்றைய ஆட்டம்



இலங்கை - ஆப்கன்

நேரம்: இரவு 8 மணி
நேரலை: சோனி ஸ்போர்ட்ஸ்

# கோரிக்கையை மீண்டும் நிராகரித்த ஐசிசி: பின்வாங்கி சமரசமானது பாகிஸ்தான்

**துபை, செப். 17:** ஆசிய கோப்பை போட்டியின் நடுவர் குழுவிலிருந்து ஆண்டி பைகிராஃப்டை நீக்க வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் 2-ஆவது முறையாக முன்வைத்த கோரிக்கையையும் ஐசிசி புதன்கிழமை நிராகரித்தது.



இதையடுத்து, போட்டியிலிருந்து பாகிஸ்தான் விலகப் போவதாக ஊகங்கள் வெளியாகிய நிலையில், அமீரகத்துடனான புதன்கிழமை ஆட்டத்துக்கு அந்த அணி 1 மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது.

இந்தியா - பாகிஸ்தான் ஆட்டத்தின்போது, இந்திய கேப்டன் மற்றும் வீரர்கள் பாகிஸ்தான் அணியினருடன் கை குலுக்காமல் தவிர்த்த விவகாரத்தில், ஆட்டத்தின் பிரதான நடுவராக இருந்த ஆண்டி பைகிராஃப்ட் மீது குற்றம்சாட்டிய பாகிஸ்தான் வாரியம், அவரை நீக்க வேண்டுமென வலியுறுத்தி வந்தது.

அந்த வாரியம் செவ்வாய்க்கிழமை அவ்வாறு முன் வைத்த கோரிக்கையை ஐசிசி நிராகரித்த நிலையில், பாகிஸ்தான் வாரியம் மீண்டும் அதே கோரிக்கையை புதன்கிழமையும் வலியுறுத்தியது. ஆனால் பைகிராஃப்டை போட்டியிலிருந்து நீக்க ஐசிசி மறுத்துவிட்டது.

இதையடுத்து போட்டியில் தொடர்வது குறித்து பாகிஸ்தான் யோசித்து வருவதாக கூறப்பட்ட நிலையில், அமீரகத்துடனான புதன்கிழமை ஆட்டத்துக்கு நேரம் நெருங்கியது. இந்திய நேரப்படி இரவு 8 மணிக்கு ஆட்டம் தொடங்க, விதிகளின்படி இரு அணிகளும் 2 மணி நேரத்துக்கு முன்பாகவே மைதானத்துக்கு வர வேண்டும்.

ஆனால் பாகிஸ்தான் அணி 7 மணி வரை தனது ஹோட்டலில் இருந்து புறப்படவில்லை. இச்சூழலில், பாகிஸ்தான் - அமீரகம் ஆட்டத்துக்கும் ஆண்டி பைகிராஃப்டே பிரதான நடுவராகத் தொடர்வார் என ஐசிசி தரப்பிலிருந்து, ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவராக இருக்கும் பாகிஸ்தான் வாரியத் தலைவர் மோசின் நக்வியிடம் தெரிவிக்கப்பட்டது.

இச்சூழலில், ஆட்டம் நடைபெறவிருந்த மைதானத்தில் இருந்த ஆண்டி பைகிராஃப்ட், அருகே இருந்த ஐசிசி தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டார். தொடர்ந்து, பாகிஸ்தான் யோசனைக்குப் பிறகு தனது கோரிக்கையிலிருந்து பின்வாங்கி, அமீரகத்துடனான ஆட்டத்துக்காக ஹோட்டலில் இருந்து மைதானத்துக்கு புறப்பட்டுச் சென்றது. ஆட்டம் 1 மணி நேரம் தாமதமாக, 9 மணிக்குத் தொடங்கியது.

**மன்னிப்பு கோரினார் பைகிராஃப்ட்: பாகிஸ்தான்**

இந்தியாவுடனான ஆட்டத்தின்போது, இரு அணி வீரர்களும் கை குலுக்கிக் கொள்வதை தடுத்ததற்காக ஆண்டி பைகிராஃப்ட் ஞாயிற்றுக்கிழமையே மன்னிப்பு கோரியதாக பாகிஸ்தான் வாரியம் புதன்கிழமை தெரிவித்தது.

தங்கள் அணியின் மேலாளர் மற்றும் கேப்டனிடம் அவர் மன்னிப்பு கோரியதாக, அந்த வாரியம் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளது.

எனினும், தகவல் தொடர்பில் இருந்த தவறுக்காகவே பைகிராஃப்ட் மன்னிப்பு கேட்டதாகவும், அவர் விதிகளின்படியே செயல்பட்டார் என்றும் ஐசிசி வட்டாரங்கள் விளக்கமளித்துள்ளன.

# வருண் சக்கரவர்த்தி 'நம்பர் 1' டி20 பௌலர்

**துபை, செப். 17:** சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) டி20 கிரிக்கெட் தரவரிசையில் பௌலர்கள் பிரிவில், இந்திய ஸ்பின்னர் வருண் சக்கரவர்த்தி நம்பர் 1 இடத்தை புதன்கிழமை பிடித்தார்.


வருண் சக்கரவர்த்தி

அவர் உலகின் நம்பர் 1 வீரராவது இதுவே முதல்முறையாகும். இதற்கு முன் அவர் 2-ஆம் இடத்துக்கு வந்ததே அதிகபட்சமாகும்.

நம்பர் 1 பௌலரான 3-ஆவது இந்தியராக வருண் பெருமை பெற்றுள்ளார். இதற்கு முன், ஜஸ்பிரீத் பும்ரா, ரவி பிஷ்னோய் ஆகியோர் அந்த இடத்துக்கு வந்துள்ளனர்.

நிகழும் ஆசிய கோப்பை டி20 கிரிக்கெட் போட்டியில் அமீரகம் மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டங்களில் தலா 1 விக்கெட் சாய்த்திருக்கும் அவர், 3 இடங்கள் முன்னேற்றம் கண்டு முதலிடத்தைப் பிடித்திருக்கிறார். கடந்த மார்ச் முதல் அந்த இடத்தில் இருந்த நியூஸிலாந்தின் ஜேக்கப் டஃபியை அவர் பின்னுக்குத் தள்ளினார்.

இதர இந்தியர்களில், குல்தீப் யாதவ் 16 இடங்கள் முன்னேறி, 23-ஆவது இடத்தைப் பிடிக்க, அக்ஸர் படேல் ஓரிடம் ஏற்றம் கண்டு 12-ஆவது இடத்துக்கும், ஜஸ்பிரீத் பும்ரா 4 இடங்கள் முன்னேறி 40-ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர்.

ஆல்-ரவுண்டர்கள் பிரிவில், ஹர்திக் பாண்டியா முதலிடத்தில் நிலைக்க, அபிஷேக் சர்மா 4 இடங்கள் முன்னேறி 14-ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

பேட்டர்கள் பிரிவில் அபிஷேக் சர்மா முதலிடத்தில் நீடிக்கிறார். ஷுப்மன் கில் 4 இடங்கள் முன்னேறி 39-ஆவது இடத்துக்கு வர, திலக் வர்மா 2 இடங்கள் சறுக்கி 4-ஆவது இடத்துக்கும் கேப்டன் சூர்யகுமார் யாதவ் ஓரிடம் இழந்து 7-ஆம் இடத்துக்கும் வந்துள்ளனர்.

**அனைத்திலும் இந்தியா:** வருண் சக்கரவர்த்தியின் முன்னேற்றத்தை அடுத்து, தற்போது ஐசிசியின் டி20 தரவரிசையில், பேட்டர்கள், பௌலர்கள், ஆல்-ரவுண்டர்கள், அணி என அனைத்து பிரிவுகளிலுமே இந்தியாவே முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# லக்ஷயா ஏமாற்றம்; சாத்விக்/சிராக் ஏற்றம்

**சென்ஸென், செப். 17:** சீனா மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் பிரதான வீரர் லக்ஷயா சென் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டார். சாத்விக்/சிராக் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.


சிராக் / சாத்விக்

முதல் சுற்றில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென் 11-21, 10-21 என்ற நேர் கேம்களில், பிரான்ஸின் டோமா ஜூனியர் போபோவிடம் 30 நிமிஷங்களில் தோல்வி கண்டார். ஏற்கெனவே ஆயுஷ் ஷெட்டியும் தோற்று வெளியேறியதால், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஆடவர் இரட்டையர் பிரிவில், போட்டித்தரவரிசையில் 8-ஆம் இடத்திலிருக்கும் சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி/சிராக் ஷெட்டி கூட்டணி 24-22, 21-13 என்ற கேம்களில் மலேசியாவின் ஜுனைதி ஆரிஃப்/ராய் கிங் யாப் இணையை வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது. இந்த ஆட்டம் 42 நிமிஷங்களில் நிறைவடைந்தது.

கலப்பு இரட்டையரில் துருவ் கபிலா/தனிஷா கிராஸ்டோ ஜோடி 19-21, 13-21 என்ற வகையில், போட்டித்தரவரிசையில் 2-ஆம் இடத்திலிருக்கும் சீனாவின் ஃபெங் யான் ஜி/ஹுவாங் டாங் பிங் கூட்டணியிடம் 42 நிமிஷங்களில் தோல்வி கண்டது.

மகளிர் இரட்டையர் பிரிவில், ருதுபர்னா பான்டா/ஸ்வேதாபர்னா பான்டா ஜோடி 8-21, 13-21 என்ற கேம்களில், மலேசியாவின் ஆங் ஜின் லீ/கார்மென் டிங் இணையிடம் 28 நிமிஷங்களில் தோல்வியைத் தழுவியது.

## ஸ்மிருதி மந்தனா சதம்

# இந்தியா அபார வெற்றி



ஸ்மிருதி மந்தனா

| ரன் | பந்து |
|---|---|
| 117 | 91 |
| பவுண்டரி | சிக்ஸர் |
| 14 | 4 |

**முலான்பூர், செப். 17:** மகளிர் ஒரு நாள் கிரிக்கெட்டின் 2-ஆவது ஆட்டத்தில் இந்தியா 102 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை புதன்கிழமை அபார வெற்றி கண்டது. இதையடுத்து, 3 ஆட்டங்கள் கொண்ட தொடர் 1-1 என சமனாகியுள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் இந்தியா 49.5 ஓவர்களில் 292 ரன்கள் சேர்த்து 10 விக்கெட்டுகளையும் இழக்க, ஆஸ்திரேலியா 40.5 ஓவர்களில் 190 ரன்களுக்கே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா, பந்துவீச்சை தேர்வு செய்தது. இந்தியாவின் இன்னிங்ஸை தொடங்கியோரில், ஸ்மிருதி மந்தனா அதிரடியாக ரன்கள் சேர்த்தார்.

உடன் வந்த பிரதிகா ராவல் 25, தொடர்ந்து வந்த ஹர்லீன் தியோல் 10, கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் 17 ரன்களுக்கு விக்கெட்டை இழந்தனர். சதம் விளாசிய மந்தனா, 14 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உள்பட 117 ரன்களுக்கு விடைபெற்றார்.

இதர பேட்டர்களில் ரிச்சா கோஷ் 29, ராதா யாதவ் 6, அருந்ததி ரெட்டி 4, தீப்தி சர்மா 2 பவுண்டரிகளுடன் 40, கிராந்தி கௌட் 2, ஸ்நேஹா ராணா 24 ரன்களுக்கு வீழ்த்தப்பட, கடைசி வீராங்கனையாக ரேணுகா சிங் 3 ரன்களுடன் களத்தில் நின்றார்.

ஆஸ்திரேலிய பௌலர்களில் டார்சி பிரௌன் 3, ஆஷ்லே கார்ட்னர் 2, மீகன் ஷுட், அனபெல் சதர்லேண்ட், டாலியா மெக்ராத் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.


அடுத்து 293 ரன்களை நோக்கி விளையாடிய ஆஸ்திரேலிய பேட்டர்களில், அனபெல் சதர்லேண்ட் 4 பவுண்டரிகளுடன் 45, எலிஸ் பெரி 5 பவுண்டரிகளுடன் 44 ரன்கள் அடித்து வெற்றிக்காக முயற்சித்து வெளியேறினர்.

கேப்டன் அலிசா ஹீலி 9, ஜார்ஜியா வோல் 0, பெத் மூனி 18, ஆஷ்லே கார்ட்னர் 17, டாலியா மெக்ராத் 16, ஜார்ஜியா வேர்ஹாம் 10, அலானா கிங் 2, மீகன் ஷுட் 0 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர்.

முடிவில் டார்சி பிரௌன் 14 ரன்களுடன் கடைசி வீராங்கனையாக நின்றார். இந்திய தரப்பில் கிராந்தி கௌட் 3, தீப்தி சர்மா 2, ரேணுகா சிங், ஸ்நேஹா ராணா, அருந்ததி ரெட்டி, ராதா யாதவ் ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

# ஸ்பீடு ஸ்கேட்டிங்: இந்தியாவுக்கு 2 தங்கம்

**பெய்டாய்ஹே, செப். 17:** சீனாவில் நடைபெற்ற ஸ்பீடு ஸ்கேட்டிங் உலக சாம்பியன்ஷிப்பில், இரு பிரிவுகளில் தங்கம் வென்று இந்திய போட்டியாளர்கள் வரலாறு படைத்தனர்.


ஆனந்த்குமார்

சீனியர் ஆடவருக்கான 1,000 மீட்டர் ஸ்பிரின்ட் பந்தயத்தில், இந்தியாவின் வி.ஆனந்த்குமார் 1 நிமிஷம், 24.924 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கப் பதக்கம் வென்றார். இப்போட்டியில் இந்தியாவுக்கு முதல் தங்கம் வென்று அவர் சாதனை படைத்தார்.

இத்தாலியின் டுசியோ மார்சிலி வெள்ளியும் (1:25.145'), பராகுவேயின் ஜூலியோ மிரெனா வெண்கலமும் (1:25.466') வென்றனர். ஆனந்த்குமார், சீனியர் ஆடவர் 500 மீ ஸ்பிரின்டில் 42.892 விநாடிகளில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கம் வென்றதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஜூனியர் ஆடவர் 1,000 மீட்டர் ஸ்பிரின்டில் இந்தியாவின் கிரிஷ் சர்மா பந்தய இலக்கை 1 நிமிஷம், 29.296 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடிக்க, சீனாவின் லு டெங்போ வெள்ளி (1:30.243') வென்றார். சிலியின் கேப்ரியல் ரெயெஸ் வெண்கலம் (2:30.453') பெற்றார்.

## துளிகள்...

- புரோ கபடி லீக் போட்டியில் ஹரியாணா ஸ்டீலர்ஸ் – பாட்னா பைரேட்ஸையும் (43–32), தபங் டெல்லி கே.சி. – தெலுகு டைட்டன்ஸையும் (33–29) வென்றன.
- அயர்லாந்துக்கு எதிரான முதல் டி20 கிரிக்கெட்டில் இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
- தோஹாவில் டிசம்பரில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டிக்கு 8 இந்தியர்கள் தகுதிபெற்றனர்.
- இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவில் முன்னாள் வீரர்களான ருத்ர பிரதாக், பிரக்யான் ஓஜா இணையவுள்ளனர்.
- இந்தியா 'ஏ' அணிக்கு எதிரான டெஸ்ட்டில், ஆஸ்திரேலியா 'ஏ' அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 532 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

# இறுதிச்சுற்றில் நீரஜ் சோப்ரா, சச்சின் யாதவ்

**டோக்கியோ, செப். 17:** உலக தடகள சாம்பியன்ஷிப்பில் ஈட்டி எறிதல் பிரிவில், நடப்பு சாம்பியனான இந்தியாவின் நீரஜ் சோப்ரா, சச்சின் யாதவ் ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு புதன்கிழமை முன்னேறினர்.


நீரஜ் சோப்ரா

தகுதிச்சுற்றில் 84.50 மீட்டரை எட்டுவோர், அல்லது சிறந்த 12 இடங்களில் வருவோர் மட்டுமே இறுதிச்சுற்றுக்குத் தகுதிபெறும் நிலை இருந்தது. இதில் தகுதிச்சுற்று குரூப் 'ஏ'-வில் நீரஜ் சோப்ரா தனது முதல் முயற்சியிலேயே 84.85 மீட்டரை எட்டி இறுதிச்சுற்றுக்குத் தகுதிபெற்றார். அதே பிரிவில் மற்றொரு இந்தியரான சச்சின் யாதவ் சிறந்த முயற்சியாக 83.67 மீட்டரை தொட்டார்.

குரூப் 'பி'-யில் பங்கேற்ற மேலும் இரு இந்தியர்களில், ரோஹித் யாதவ் 77.81 மீட்டருடன் 14-ஆம் இடமும், யஷ் வீர் சிங் 77.51 மீட்டருடன் 15-ஆம் இடமும் பிடித்தனர். இதையடுத்து ஒட்டுமொத்தமாக, சிறந்த 12 பேர் வரிசையில் இடம் பிடித்த சச்சின் யாதவ், நீரஜ் சோப்ராவுடன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். ரோஹித் மற்றும் யஷ் ஆகியோர் தகுதிச்சுற்றுடன் வெளியேறினர்.

இதனிடையே, நீரஜ் சோப்ராவுக்கு வழக்கமாக சவால் அளிக்கும் போட்டியாளர்களில், நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் (85.28 மீ), நடப்பு உலக சாம்பியனான கிரெனாடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் (89.53 மீ), ஜெர்மனியின் ஜூலியன் வெபர் (87.21 மீ), செக் குடியரசின் ஜேக்கப் வட்லெஜ் (84.11 மீ) ஆகியோரும் இறுதிச்சுற்றுக்கு வந்துள்ளனர்.


**ஏமாற்றம்:** இதனிடையே, ஆடவருக்கான மும்முறை தாண்டுதலில் இந்தியாவின் அப்துல்லா அபூபக்கர், பிரவீண் சித்ரவேல் ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறத் தவறினர்.

தகுதிச்சுற்றில் குரூப் 'ஏ'-வில் அப்துல்லா 16.33 மீட்டருடன் 10-ஆம் இடமும், குரூப் 'பி'-யில் பிரவீண் 16.74 மீட்டருடன் 8-ஆம் இடமும் பிடித்தனர். தகுதிச்சுற்றில் 17.10 மீட்டரை எட்டுவோர் அல்லது சிறந்த 12 இடங்களைப் பிடிப்போர் மட்டுமே இறுதிச்சுற்றுக்கு முன்னேறுவர்.

# வெண்கலப் பதக்கச் சுற்றில் அன்டிம் பங்கால்

**ஜாக்ரெப், செப். 17:** குரோஷியாவில் நடைபெறும் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் அன்டிம் பங்கால் வெண்கலப் பதக்கச் சுற்றுக்கு புதன்கிழமை முன்னேறினார்.

மகளிருக்கான 53 கிலோ எடைப் பிரிவில் களம் கண்டுள்ள அன்டிம் பங்கால், முதல் சுற்றில் ஸ்பெயினின் கார்லா ஜாமே சோனை எளிதாக வெளியேற்றினார். அடுத்து காலிறுதியில் 9-8 என சீனாவின் ஜாங்கை போராடி வீழ்த்தினார்.


அன்டிம் பங்கால்

பிறகு அரையிறுதிக்கு வந்த அவர், அதில் 3-5 என ஈகுவடாரின் லூசியா யெபெஸ் கஸ்மானிடம் போராடி வீழ்ந்தார்.

கஸ்மான், பாரீஸ் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றவராவார். அரையிறுதியில் தோற்ற அன்டிம், தற்போது வெண்கலப் பதக்கச் சுற்றுக்கு வந்துள்ளார்.

இதனிடையே, மகளிருக்கான 62 கிலோ பிரிவில் பங்கேற்றுள்ள மனிஷா பன்வாலா, காலிறுதியில் 0-8 என்ற கணக்கில் வட கொரியாவின் ஆக் ஜு கிம்மால் சாய்க்கப்பட்டார். பின்னர் கிம் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியதன் அடிப்படையில், மனிஷா ரெபிசேஜ் சுற்று வாய்ப்பு பெற்றுள்ளார்.

இதர இந்தியர்களில், மகளிருக்கான 68 கிலோ பிரிவில் ராதிகா, 72 கிலோ பிரிவில் ஜோதி பெர்வால் ஆகியோர் தொடக்க சுற்றிலேயே தோற்று வெளியேறினர்.

# மே.தீவுகள் டெஸ்ட் அணி அறிவிப்பு

**புது தில்லி, செப். 17:** இந்தியாவுடனான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 15 பேருடன் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபரில் இந்தியா வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, அகமதாபாதில் முதல் டெஸ்ட்டிலும் (அக்.2 முதல்), தில்லியில் 2-ஆவது டெஸ்ட்டிலும் (அக். 10 முதல்) விளையாடவுள்ளது. நடப்பு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் சுழற்சியில் (2025-27) இது அந்த அணியின் முதல் தொடராகும்.

**அணி விவரம்:** ராஸ்டன் சேஸ் (கேப்டன்), ஜோமெல் வாரிக்கன் (வி.கீ.), கெவ்லான் ஆண்டர்சன், அலிக் அதானஸி, ஜான் கேம்ப்பெல், தேஜ்நாராயண் சந்தர்பால், ஜஸ்டின் கிரீவ்ஸ், ஷாய் ஹோப் (வி.கீ.), தெவின் இம்லாச், அல்ஜாரி ஜோசஃப், ஷாமர் ஜோசஃப், பிராண்டன் கிங், ஆண்டர்சன் பிலிப், கேரி பியரி, ஜேடன் சீல்ஸ்.

# காற்று மாசைத் தடுக்க 3 வாரங்களில் செயல் திட்டம்: உச்சநீதிமன்றம்

**புது தில்லி, செப். 17:** 'குளிர்காலம் நெருங்கிவரும் நிலையில், காற்று மாசைக் கட்டுப்படுத்த மூன்று வாரங்களில் செயல் திட்டத்தை வகுத்து சமர்ப்பிக்க வேண்டும்' என்று மத்திய, மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்களுக்கு உச்சநீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

காற்று தர மேலாண்மை ஆணையம் (சிஏக்யூஎம்), மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (சிபிசிபி) மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களில் காலிப் பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாதது தொடர்பாக தாமாக முன்வந்து பதிந்த வழக்கு விசாரணையின்போது இந்த உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பித்தது.



இதில், காற்று தர மேலாண்மை ஆணையம் என்பது தேசிய தலைநகர் பிராந்தியம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பஞ்சாப், ஹரியாணா, உத்தர பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் கற்றின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசால் அமைக்கப்பட்டதாகும்.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

காற்று தர மேலாண்மை ஆணையம், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப மூன்று மாதம் அவகாசம் அளிக்கப்படுகிறது. அதுபோல காற்று தர மேலாண்மை ஆணையம், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களில் பதவி உயர்வு அடிப்படையில் காலியிடங்களை நிரப்ப 6 மாதம் கால அவகாசம் அளிக்கப்படுகிறது.



அதே நேரம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களில் அதிக எண்ணிக்கையில் காலிப் பணியிடங்கள் உள்ளன. ஹரியாணா மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் 44 பணியிடங்களும், பஞ்சாப் (43), உத்தர பிரதேசம் (166), ராஜஸ்தான் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் 259 பணியிடங்களும் காலியாக இருப்பது தெரிய வந்துள்ளது.

முழுநேரப் பணி நியமனங்களை மேற்கொள்ளும் இடைப்பட்ட காலத்தில், இந்தக் காலிப் பணியிடங்களில் மாற்றுப் பணி அல்லது ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மேலும், குளிர் காலங்களில் காற்று மாசு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் காரணமாக, அந்தக் காலகட்டத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தடை, வாகனக் கட்டுப்பாடு எனப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, காற்று மாசைக் கட்டுப்படுத்தும் திருப்திகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதே நேரம், கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதிக்கப்படும்போது, அத் துறை சார்ந்த தொழிலாளர்கள் வருவாய் இழக்க நேரிடும். எனவே, அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, காற்று தர மேலாண்மை ஆணையம், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தொடர்புடைய மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள், காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்கான விரிவான செயல்திட்டத்தை அடுத்த மூன்று வாரங்களில் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, விசாரணையை அக்டோபர் 8-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# நவால்னிக்கு சிறையில் விஷம்: மனைவி குற்றச்சாட்டு



**மாஸ்கோ, செப். 17:** ரஷிய அதிபர் விளாதிமீர் புதினை மிகத் தீவிரமாக எதிர்த்து வந்து, மர்மமான முறையில் மரணமடைந்த அலெக்ஸி நவால்னிக்கு சிறையில் விஷம் கொடுக்கப்பட்டதாக அவரின் மனைவி யூலியா நவால்னயா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் புதன்கிழமை வெளியிட்டுள்ள விடியோ பதிவில் (படம்) தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அலெக்ஸி நவால்னியின் உடலில் இருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. அங்கு இரண்டு ஆய்வகங்களில் அவை சோதிக்கப்பட்டன.

அந்தச் சோதனையில், சிறையில் நவால்னி மரணமடைவதற்கு சற்று முன்னதாக அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டது தெரியவந்துள்ளது.



நவால்னி

இரு வேறு நாடுகளைச் சேர்ந்த ஆய்வகங்களும், நவால்னியின் மரணம் இயற்கையானது இல்லை, அது ஒரு கொலை என்ற முடிவுக்கு வந்துள்ளன. இருந்தாலும், அரசியல் எதிர்வினைகளுக்கு அஞ்சி அவை அந்த ஆய்வு முடிவை உடனடியாக வெளியிடவில்லை என்றார் யூலியா நவால்னயா.

முன்னாள் வழக்குரைஞரான அலெக்ஸி நவால்னி, அதிபர் விளாதிமீர் புதினை எதிர்த்துப் போராடியவர்களில் மிக முக்கியமானவராக அறியப்படுகிறார்.

இதன் காரணமாக புதின் அரசால் பல்வேறு வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டு சட்டரீதியிலான சவால்களைச் சந்தித்துவந்த அவர், சைபீரிய பகுதியைச் சேர்ந்த டாம்ஸ்க் நகரிலிருந்து மாஸ்கோவுக்கு விமானத்தில் கடந்த 2020 ஆகஸ்ட் மாதம் சென்று கொண்டிருந்தபோது திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். அவர் மீது 'நோவிசோக்' என்ற நச்சுப் பொருள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஜெர்மனியில் சிகிச்சை பெற்று அவர் உயிர்பிழைத்தார்.

பின்னர் 2021 ரஷியா திரும்பிய நவால்னியை ஜாமீன் நிபந்தனை மீறல் வழக்கில் அதிகாரிகள் கைது செய்தனர். தொடர்ந்து, கருத்து தீவிரவாதக் குற்றச்சாட்டின் பேரில் 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நவால்னி, திடீர் உடல்நலக்குறைவால் இறந்ததாக சிறைத் துறை அதிகாரிகள் கடந்த 2024 பிப்ரவரி 16-ஆம் தேதி அறிவித்தனர்.

# ஜப்பான்: பாகிஸ்தானிலிருந்து வந்த போலி கால்பந்து அணி

**டோக்கியோ, செப். 17:** பாகிஸ்தானில் இருந்து தங்கள் நாட்டுக்கு வந்த போலி கால்பந்து அணியை ஜப்பான் அதிகாரிகள் திருப்பி அனுப்பினர்.

சட்டவிரோத அகதிகள் கடத்தல் கும்பல் ஒன்று, 22 பேரை பாகிஸ்தான் கால்பந்து அணியைச் சேர்ந்தவர்கள் என்ற போலி அடையாளத்துடன் ஜப்பானுக்கு அனுப்பியது.

அந்த 22 பேரும் கால்பந்து வீரர்களைப் போலவே உடையணிந்து அங்கு சென்றனர். உள்ளூரில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்கேற்கவிருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இருந்தாலும், அவர்கள் பாகிஸ்தான் கால்பந்து அமைப்பில் பதிவு செய்யாதவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்தது. அதையடுத்து அந்த 22 பேரையும் பாகிஸ்தானுக்கே ஜப்பான் அதிகாரிகள் திருப்பி அனுப்பினர்.

# காஸா சிட்டியில் இஸ்ரேல் படையினர் முன்னேற்றம்

**ஜெருசலேம், செப். 17:** காஸா சிட்டியின் மையப் பகுதியை நோக்கி இரண்டு இஸ்ரேல் ராணுவ படைப் பிரிவுகள் முன்னேறிவருகின்றன.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்புப்படை புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காஸா சிட்டியைக் கைப்பற்றுவதற்கான தரைவழித் தாக்குதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை தொடங்கியது. அதற்கு முன், 150 வான்வழி மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தற்போது காஸா சிட்டியின் மையப் பகுதியை நோக்கி இரண்டு படைப் பிரிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிவருகின்றன. இன்னும் சில நாள்களில் மூன்றாவது படைப் பிரிவும் அவற்றுடன் இணையும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காஸா சிட்டியின் பெரும் பகுதிகளை அழித்துவரும் இந்த தரைவழித் தாக்குதலில், பல குடியிருப்புக் கட்டடங்களும், புலம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள கூடார முகாம்களும் குறிவைக்கப்பட்டன. இந்த கட்டடங்களை ஹமாஸ் படையினர் கண்காணிப்புக்கு பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டி இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியது. காஸா சிட்டியின் அல்-ராந்திசி குழந்தைகள் மருத்துவமனையும் செவ்வாய்க்கிழமை இரவு தாக்குதலுக்குள்ளானது.

**65 ஆயிரத்தைக் கடந்த உயிரிழப்பு:** செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் நடந்த தாக்குதலில் 16 பேர் உயிரிழந்ததாக உள்ளூர் மருத்துவமனைகள் தெரிவித்தன. அதையடுத்து, காஸாவில் இஸ்ரேல் ராணுவம் கடந்த 2023 அக்டோபர் 7-ஆம் தேதி முதல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 65 ஆயிரத்தைக் கடந்துள்ளது.



காஸா சிட்டியை விட்டு வெளியேறும் பாலஸ்தீனர்கள்.

காஸா சிட்டியில் உள்ள பொது மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கையிலும் இஸ்ரேல் ராணுவம் இறங்கியுள்ளதாக பிபிசி ஊடகம் தெரிவித்தது. அதற்காக, நகரிலிருந்து மக்கள் வெளியேறுவதற்காக தற்காலிக வழித்தடத்தை ராணுவம் அறிவித்துள்ளது. அந்த வழித்தடங்கள் 2 நாள்களுக்கு மட்டுமே திறக்கப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், இஸ்ரேலின் தொடர் தாக்குதல் காரணமாக தொலைத்தொடர்பு கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதால், காஸா சிட்டி மற்றும் வடக்கு காஸாவில் வசிக்கும் ஏராளமானவர்களுக்கு ராணுவத்தின் அறிவிப்பு சென்று சேரவில்லை என்று கூறப்படுகிறது.

இஸ்ரேல் ராணுவ மதிப்பீட்டின்படி, காஸா சிட்டியில் உள்ள பத்து லட்சம் பாலஸ்தீனர்களில் 3.5 லட்சம் பேர் கடந்த ஒரு மாதத்தில் தெற்கு நோக்கி சென்றுள்ளனர். 2.38 லட்சம் பேர் வெளியேறியதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

தற்போது காஸா சிட்டியில் தங்கியுள்ளவர்களும், உடல் பலவீனம், பயணச் செலவு, பிளாஸ்டிக் கூடார விலை கட்டுப்படாதது ஆகிய காரணங்களால் வெளியேற முடியாமல் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் அமைத்த 'மனிதாபிமான மண்டலமான' அல்-மவாசி பகுதியும் ஆபத்தானது என்று பலர் கருதுவதால் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி அங்கே தங்க பலர் அஞ்சுவதாகக் கூறப்படுகிறது. அந்த முகாமில் செவ்வாய்க்கிழமை இரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் தம்பதியும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர்.

ஹமாஸ் அமைப்பை முழுவதும் ஒழித்துக்கட்டுவதற்காகத்தான் காஸா சிட்டி கைப்பற்றப்படுவதாக இஸ்ரேல் கூறினாலும், இது குறித்து அந்த நாட்டு ராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் சந்தேகம் எழுப்புகின்றனர். தற்போது நகர மையத்தில் 2,000 முதல் 3,000 ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் படையினர் மட்டுமே உள்ளனர். அவர்கள் போரில் உயிர் பிழைத்த படையினரில் ஒரு சிறு பகுதி மட்டுமே. எனவே, காஸா சிட்டியைக் கைப்பற்றினாலும் ஹமாஸ் அமைப்பு உயிர்ப்புடன் இருக்கும் என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நடவடிக்கையின் உண்மையான நோக்கம் அரசியல் சார்ந்தது என்று பல இஸ்ரேல் பார்வையாளர்களும் விமர்சகர்களும் கருதுகின்றனர்: இஸ்ரேலை போர் நிலையிலேயே வைத்திருப்பதன் மூலம், முன்கூட்டிய தேர்தலைத் தவிர்த்து, தனது கூட்டணி ஆட்சியை பெஞ்சமின் நெதன்யாகு தக்கவைத்துக் கொள்ள விரும்புவதாக அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், காஸா சிட்டியை வாழ முடியாத இடமாக மாற்றி, அங்கு வசிக்கும் பாலஸ்தீனர்கள் நகரைவிட்டு வெளியேற நெருக்கடி கொடுப்பதும், அவர்களை ஏற்றுக்கொள்ள பிற நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதும்தான் இந்த நடவடிக்கையின் நோக்கம்; ஹமாஸை அழிப்பது இதன் நோக்கமில்லை என்றும் ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

# 'பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க ஈரான் எதுவும் செய்யவில்லை'

**துபை, செப். 17:** ஈரான் மீதான ஐ.நா. பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமல்படுத்துவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அந்த நாடு இன்னும் எடுக்கவில்லை என்று ஜெர்மனி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து ஜெர்மனி வெளியுறவுத் துறை அமைச்சகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2025 அணுசக்தி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமல்படுத்துவதற்கான நடைமுறைகள் தொடங்கிவிட்டன. அது முழுமையடைந்து, பொருளாதாரத் தடைகள் அமலுக்கு வருவதற்கு முன்னரே அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஈரான் எடுக்கவேண்டும். ஆனால் அத்தகைய நடவடிக்கை எதையும் ஈரான் இதுவரை எடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுப்பதற்காக, அந்த நாட்டின் மீது ஐ.நா. கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. அவற்றை அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் அமல்படுத்திவந்தன. இதனால், ஈரானின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.



இந்த நிலையில், ஈரானுக்கும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜெர்மனிக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில், தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரான் ஒப்புக்கொண்டது. அதற்குப் பதிலாக, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக்கொள்ள வல்லரசு நாடுகள் ஒப்புக்கொண்டன.

எனினும், அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அவருக்குப் பின் வந்த டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். மேலும், ஒப்பந்தத்தின் கீழ் விலக்கப்பட்டிருந்த ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அவர் மீண்டும் அமல்படுத்தினார்.

அதற்குப் பதிலடியாக, தாங்கள் அணு ஆயுதம் தயாரிக்கப்போவதில்லை என்பதை உறுதி செய்வதற்கான நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வந்தது. அதன் ஒரு பகுதியாக, தனது யுரேனியம் செறிவூட்டும் திறனை ஈரான் படிப்படியாக அதிகரித்தது. மேலும், ஒப்பந்த வரம்பை மீறி 60 சதவீதம் வரை யுரேனியத்தை ஈரான் செறிவூட்டியது.

இந்தச் சூழலில், ஈரானின் அணுசக்தி திட்டங்களை நிரந்தரமாக முடக்கும் நோக்கில் இஸ்ரேல் அங்கு கடந்த ஜூலை மாதம் தாக்குதல் நடத்தியது. அதில் அமெரிக்காவும் பங்கேற்று ஈரான் அணுசக்தி மையங்கள் மீது சக்திவாய்ந்த குண்டுகளை வீசியது.

இதற்கு பதிலடியாக, ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான ஐஏஇஏ-வுக்கு தங்கள் அணுசக்தி திட்டங்களைக் கண்காணிக்க அளித்துவந்த ஒத்துழைப்பை ஈரான் திரும்பப் பெற்றது. இதனால், ஈரானின் அணுசக்தி திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கு கண்டனம் தெரிவித்த பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள், ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமல்படுத்துவதற்கான நடைமுறையைத் தொடங்குவதாக கடந்த மாத இறுதியில் அறிவித்தன.

அதன்பிறகு தங்களது அணுசக்தி மையங்களைக் கண்காணிக்க ஐஏஇஏ-வுக்கு ஈரான் ஒப்புதல் அளித்தாலும், பொருளாதாரத் தடை அமலாக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அந்த நாடு இன்னும் எடுக்கவில்லை என்று ஜெர்மனி தற்போது குற்றஞ்சாட்டியுள்ளது.



ஈரானின் புஷேஹர் அணுசக்தி நிலையம்.

| கரன்சி நிலவரம் (இந்திய ரூபாயில்) | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| | டாலர் 87.78 | யூரோ 104.03 | பவுண்ட் 119.93 | ரிங்கிட் 20.96 | டாலர் 68.80 |

| | |
|---|---|
| தங்கம் (24 கேரட்) 1 கிராம் | ரூ.11,203 |
| தங்கம் (22 கேரட்) 1 கிராம் | ரூ.10,270 |
| வெள்ளி 1 கிலோ | ரூ.1,42,000 |
| வெள்ளி 1 கிராம் | ரூ.142.00 |
| சென்செக்ஸ் | 82,694 ▲ 313 |
| நிஃப்டி | 25,330 ▲ 91 |

# யெஸ் வங்கியின் 13.1% பங்குகள்: எஸ்பிஐ விற்பனை

**மும்பை, செப். 17:** தங்களிடம் இருந்த யெஸ் வங்கியின் 13.18 சதவீத பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் அந்த முதலீட்டை இந்தியாவின் மிகப் பெரிய பொதுத் துறை வங்கியான எஸ்பிஐ திரும்பப் பெற்றுள்ளது.

இது குறித்து வங்கி புதன்கிழமை வெளியிட்டுள்ள ஒழுங்காற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யெஸ் வங்கியின் 13.18 சதவீத பங்குகளை சுமிடமோ மிட்சுயி பேங்கிங் கார்ப்பரேஷனுக்கு விற்பனை செய்வதன் மூலம் முதலீட்டைத் திரும்பப் பெறும் நடவடிக்கை நிறைவடைந்தது. ரூ.8,888.97 கோடிக்கு இந்தப் பரிமாற்றம் நடைபெற்றது.

கடந்த 2020 மார்ச்சில் யெஸ் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலம் அந்த வங்கியின் மிகப் பெரிய பங்கு உரிமையாளராக எஸ்பிஐ ஆனது. பின்னர் 2020 ஜூலையிலும் யெஸ் வங்கியிடமிருந்து கூடுதலாக பங்குகள் வாங்கப்பட்டன.

தற்போது 13.18 சதவீத பங்குகள் விற்பனை செய்யப்பட்ட பிறகும், யெஸ் வங்கியின் 10.8 சதவீத பங்குகள் தொடர்ந்து எஸ்பிஐ-யின் வசம் உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மிதமாக அதிகரித்த தேயிலை ஏற்றுமதி

**கொல்கத்தா, செப். 17:** கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி மிதமாக உயர்ந்துள்ளது.

இது குறித்து தேயிலை வாரியம் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:



கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையிலான நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் நாட்டிலிருந்து 12.50 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது சற்று உயர்வு. அப்போது இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 12.46 கோடி கிலோவாக இருந்தது.

வடஇந்தியாவில்இருந்துதேயிலை ஏற்றுமதி நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் 7.18 கோடி கிலோவிலிருந்து 7.94 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. அதேசமயம், தென் இந்தியாவில் இருந்து தேயிலை ஏற்றுமதி 5.28 கோடி கிலோவிலிருந்து 4.56 கோடி கிலோவாகக் குறைந்துள்ளது.

மதிப்பின் அடிப்படையில், நடப்பாண்டின் முதல் பாதியில் தேயிலை ஏற்றுமதி ரூ.3,639.45 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இது ரூ.3,129.31 கோடியாக இருந்தது.

மதிப்பீட்டு காலகட்டத்தில் தேயிலை ஏற்றுமதி விலை கிலோவுக்கு ரூ.251.21-லிருந்து ரூ.291.13-ஆக உயர்ந்துள்ளது.

முந்தைய 2024-ஆம் ஆண்டு முழுவதும் இந்தியாவிலிருந்து 25.62 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. முந்தைய 2023-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது உயர்வு. அப்போது இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 23.17 கோடி கிலோவாக இருந்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வீட்டு சாப்பாடுக்கு செலவு அதிகரிப்பு



**மும்பை, செப். 17:** தக்காளி விலை உயர்வு காரணமாக வீடுகளில் 'ஒரு மதிய சாப்பாடு' சமைப்பதற்கு ஆகும் சராசரி செலவுத் தொகை அதிகரித்துள்ளது.

இது குறித்து சந்தை ஆய்வு நிறுவனமான கிரிசில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: வீடுகளில் சைவ சாப்பாடு தயாரிக்க ஆகும் சராசரி செலவு கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ரூ.29.1-ஆக உள்ளது. முந்தைய ஜூலை மாதத்தோடு ஒப்பிடுகையில் இது 4 சதவீதம் அதிகம். அப்போது வீடுகளில் சமைக்கப்படும் சைவ சாப்பாட்டின் சராசரி செலவு ரூ.28.1-ஆக இருந்தது.

அதேபோல், ஜூலை மாதத்தோடு ஒப்பிடுகையில் வீடுகளில் சமைக்கப்படும் அசைவ சாப்பாட்டின் சராசரி செலவு ஆகஸ்டில் 2 சதவீதம் அதிகரித்து ரூ.54.6-ஆக உள்ளது.

முந்தைய மாதத்தைவிட மதிப்பீட்டு மாதத்தில் தக்காளி விலை 26 சதவீதம் அதிகரித்தது இதற்குக் காரணமாக அமைந்தது. உருளைக் கிழங்கு, வெங்காயத்தின் விலையில் மாற்றமில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அசோக் லேலண்ட் விற்பனை 5% உயர்வு

**சென்னை, செப். 17:** ஹிந்துஜா குழுமத்தின் முதன்மை நிறுவனமான அசோக் லேலண்டின் மொத்த விற்பனை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 5 சதவீதம் அதிகரித்துள்ளது.

இது குறித்து நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நிறுவனத்தின் மொத்த விற்பனை 15,239-ஆக உள்ளது.

முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 5 சதவீதம் அதிகம். அப்போது நிறுவனம் 13,622 வாகனங்களை சில்லறை விற்பனையாளர்களுக்கு அனுப்பியது.

மதிப்பீட்டு மாதத்தில் நிறுவனத்தின் உள்நாட்டு விற்பனை 2 சதவீதம் உயர்ந்து 13,622-ஆக உள்ளது. முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே மாதத்தில் இந்த எண்ணிக்கை 13,347-ஆக இருந்தது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# தினமணி

வியாழக்கிழமை, 18 செப்டம்பர் 2025





## பெரியார் எங்கும், என்றும் நிலைத்திருப்பார்: முதல்வர்

**சென்னை, செப். 17:** பெரியார் என்றும், எங்கும் நிலைத்திருப்பார் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பெரியார் ஈ.வெ.ரா. பிறந்த தினத்தையொட்டி, எக்ஸ் தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை வெளியிட்ட பதிவு:

இனப்பகையைச் சுட்டெரிக்கும் பெரு நெருப்பாகத் திகழ்ந்தவர் பெரியார் ஈ.வெ.ரா. தமிழினத்தின் எழுச்சிக்கான பகுத்தறிவுப் பேரொளி. அவர் என்றும், எங்கும் நிலைத்திருப்பார் என்று தனது பதிவில் முதல்வர் தெரிவித்துள்ளார்.





பெரியார் ஈ.வெ.ரா. பிறந்த தினத்தையொட்டி, திருச்சி மத்தியப் பேருந்து நிலையப் பகுதியில் உள்ள பெரியார் ஈ.வெ.ரா சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு புதன்கிழமை மலர்தூவி மரியாதை செலுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் (இடமிருந்து) அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கனிமொழி எம்.பி., அமைச்சர் கே.என். நேரு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி என். சிவா, ஆ. ராசா, அமைச்சர் எஸ். ரகுபதி. (வலது) சென்னை அண்ணா மேம்பாலம் அருகே அமைந்துள்ள பெரியார் ஈ.வெ.ரா சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த உருவப்படத்துக்கு அதிமுக சார்பில் மரியாதை செலுத்திய அக்கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், அமைப்புச்செயலாளர்கள் டி.ஜெயக்குமார், பா.பென்ஜமின், நா.பாலகங்கா உள்ளிட்ட நிர்வாகிகள்.



சென்னை எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் உள்ள பெரியார் ஈ.வெ.ரா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய கட்சியின் பொதுச்செயலர் வைகோ.



சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் ஈவெரா நினைவிடத்தில் மரியாதை செலுத்தி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழியேற்ற தொண்டர்கள்.



சென்னை பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் பெரியார் ஈ.வெ.ரா சிலைக்கு மரியாதை செலுத்திய அக்கட்சியின் தலைவர் விஜய்.

## இன்று 21 மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு

**சென்னை, செப். 17:** தமிழகத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர் உள்பட 21 மாவட்டங்களில் வியாழக்கிழமை (செப். 18) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: தென்னிந்திய கடலோரப் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் வியாழக்கிழமை (செப்.18) முதல் செப். 23-ஆம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. மேலும், மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் தரைக்காற்று வீசக்கூடும்.

**21 மாவட்டங்களில்...:** நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும் வியாழக்கிழமை (செப்.18) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. செப். 19-இல் திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது.

**ஸ்ரீபெரும்புதூரில் 180 மிமீ மழை:** தமிழகத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் 180 மி.மீ. மழை பதிவானது. மணலி புதுநகரம் (சென்னை) - 130 மி.மீ., குருவாடி (அரியலூர்) - 100 மீ.மீ., எண்ணூர் (திருவள்ளூர்), கொரட்டூர் (சென்னை), பாரிமுனை (சென்னை) - தலா 90 மி.மீ., திருவிடைமருதூர் (தஞ்சாவூர்), கத்திவாக்கம் (சென்னை) - தலா 80 மி.மீ. பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** செப்.18 முதல் செப்.20-ஆம் தேதி வரை தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக் கடல் மற்றும் வங்கக் கடலில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். இதனால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அருட்செல்வர் மொழிபெயர்ப்பு விருதாளர்கள் அறிவிப்பு

### அக்.2-இல் சென்னையில் விருது வழங்கும் விழா

**சென்னை, செப்.17:** அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம் வழங்கும் நிகழாண்டு அருட்செல்வர் மொழிபெயர்ப்பு விருதுகளுக்குத் தேர்வானவர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அருட்செல்வர் நா.மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையத் தலைவர் ம.மாணிக்கம், இயக்குநர் சிற்பி பாலசுப்பிரமணியம், என்ஐஏ கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.வி. சுப்பிரமணியம் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை:

அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையத்தின் சார்பில் நிகழாண்டுக்கான 'அருட்செல்வர் மொழிபெயர்ப்பு விருது' தேர்வுக்கான நடுவர் குழுக் கூட்டம் கடந்த செப்.10-ஆம் தேதி நடைபெற்றது. இதில், திறனாய்வாளர் க.பஞ்சாங்கம், விமர்சகர் சரவணன் மாணிக்கவாசகம், மொழிபெயர்ப்பாளர் மோ.செந்தில்குமார் ஆகியோர் நடுவர்களாகப் பங்கேற்று விருதாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

**முதல் பரிசு:** அருந்ததி ராயின் ஆங்கில நாவலை 'சின்ன விஷயங்களின் கடவுள்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்த ஜி. குப்புசாமி, ஹிந்தி எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீயின் நாவலை 'மணல் சமாதி' என்ற தலைப்பில் மொழிபெயர்த்த அனுராதா க்ருஷ்ணஸ்வாமி ஆகியோர் முதல் பரிசுக்குத் தேர்வாகியுள்ளனர். அவர்கள் இருவருக்கும் பரிசுத் தொகை ரூ.2 லட்சம் பகிர்ந்து அளிக்கப்படும்.

**இரண்டாம் பரிசு:** ட்டி.டி.ராமகிருஷ்ணன் மலையாளத்தில் எழுதிய 'மாதா ஆப்பிரிக்கா' என்ற நாவலை தமிழில் மொழிபெயர்த்த குறிஞ்சிவேலன் மற்றும் அப்துல்ரஸாக் குர்னாவின் 'போரொழிந்த வாழ்வு' என்ற நாவலை தமிழில் மொழிபெயர்த்துள்ள கயல் ஆகியோருக்கு இரண்டாம் பரிசாக ரூ.50,000 வழங்கப்படும்.

**மூன்றாம் பரிசு:** சார்லஸ் ஆலன் எழுதிய வரலாற்று நூலை 'பேரரசன் அசோகன்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்த தருமி, ராபின் டேவிட்சன் எழுதிய பயண இலக்கியத்தைத் தமிழில் 'தடங்கள்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்த பத்மஜா நாராயணன், தற்கால ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பை 'அழிக்க முடியாத ஒரு சொல்' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்த அனுராதா ஆனந்த், கே.என்.சிவராஜ பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சி நூலை 'தமிழ் நிலத்தில் அகஸ்தியர்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்த இஸ்க்ரா ஆகியோருக்கு 3-ஆம் பரிசாக தலா ரூ.25,000 ரொக்கம் வழங்கப்படும்.

இந்த விருதுகள் அருட்செல்வரின் நினைவு நாளான வருகிற அக். 2-ஆம் தேதி மாலை 4 மணிக்கு சென்னை மயிலாப்பூரில் உள்ள ஏ.வி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறும் வள்ளலார் காந்தி விழாவில் வழங்கப்படும் என்று அதில் தெரிவித்துள்ளனர்.

## சிறந்த கதை, கதாபாத்திரம் கிடைத்தால் கமல்ஹாசனுடன் சேர்ந்து நடிப்பேன்

**சென்னை, செப்.17:** சிறந்த கதை, கதாபாத்திரம் கிடைத்தால் கமல்ஹாசனுடன் சேர்ந்து நடிப்பேன் என்று ரஜினிகாந்த் தெரிவித்தார்.



அவர் சென்னையிலிருந்து புதன்கிழமை காலை விமானத்தில் கோவை சென்றார்.

முன்னதாக அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராஜ்கமல், ரெட்ஜெயண்ட் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் திரைப்படத்தில் நடிக்க உள்ளேன். அந்த படத்துக்கு இயக்குநர் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை.

நடிகர் கமல்ஹாசனுடன் சேர்ந்து நடிப்பீர்களா எனக் கேட்கிறீர்கள். கமல்ஹாசனுடன் சேர்ந்து திரைப்படத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உள்ளது. அதற்கான கதை, கதாபாத்திரம் கிடைத்தால் அவருடன் சேர்ந்து நடிப்பேன் என்றார் ரஜினிகாந்த்.

பஞ்சாப் நேஷனல் பேங்க் punjab national bank ...the name you can BANK upon!
(பஞ்சாப் நேஷனல் வங்கி)
ARMB, PNB டவர், தரைதளம், எண்.46-49, ராயப்பேட்டை, சென்னை - 600 014. 9840037314, 9789922002, 9392387502, Email:cs3612@pnb.co.in
அசையா சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையா சொத்தின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு
11.11.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
...
SARFAESI சட்டம் 2002 விதி 8 & 9 -ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு
நாள் : 16.09.2025 இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி பஞ்சாப் நேஷனல் பேங்க் (கடன் அளித்தவர்)

யூனியன் பாங்க் ஆப் இந்தியா
பிராந்திய அலுவலகம் பிராட்வே சென்னை - வடக்கு
மின் ஏல விற்பனை அறிவிப்பு அசையா சொத்துக்களுக்கானது.
யூனியன் பேங்க் பவன், 2வது தளம், 139, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-600108. போன்: +91 8780015850. Mail: crld.rochennainorth@unionbankofindia.bank
...
மின் ஏல தேதி & நேரம் : 15.10.2025
...
தேதி : 15.09.2025; இடம் : சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா

மின்-ஏலத்துடன் கூடிய விற்பனைக்கான பொது அறிவிப்பு
...
சர்ஃபாசி சட்டம் 2002, விதி 9 துணை விதி (1)-இன் கீழான 15 நாள் விற்பனை அறிவிப்பு
...
இடம் : காஞ்சிபுரம் ; நாள் : 18.09.2025

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Chennai. Vol. 92, No. 260
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.